உ

கடவுள்துணை,

பதினெண்சித்தர்களில் மகாமகத்துவம்பொருந்திய

இராமதேவரென்னும்

# இயக்கோபுவாதத்திறவுகோல்

எ௱.

சுருக்கம் - ௫௰,

இவை

கொழும்பிற் புத்தக வியாபாரஞ்செய்யும்

செ-வ-காதிறுநெயினாரு..வ்வை

கேட்டுக்கொண்டபடி

மதுரை-புதுவை-சென்னை இச்சங்கங்களில்

தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய

களத்தூர்

## வேதகிரிமுதலியார்

குமாரர்

ஆயுள்வேதபாஸ்கரர்

## கந்தசாமிமுதலியார்

அவர்களால் சீர்திருத்தப்பட்டு

தமது

இலக்கணக்களஞ்சிய அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது,

முதற்-பதிப்பு

ரிஜிஸ்டர் காப்பிரைட்

கஅகூ௫-

1891

சிவமயம்.

பதினெண்சித்தர்களில்

மகாமகத்துவம்பொருந்திய

இராமதேவரென்னும்

# இயாக்கோபு

திருவாய்மலர்ந்தருளிய

# வாதத்திறவுகோல் - ௭௱.

காப்பு.

எண்சீராசியவிருத்தம்.

பூரணியின்மகள்புதல்வனுக்கந்தன்னைப்
  போக்கோடேமுகமாக்கிவைத்துக்கொண்ட
காரணமாய்க்கையைந்து முகத்தான்றன்னைக்
  கற்பகத்தின்செல்வனைத்தான்கருத்திலுன்னி
நாரணனின்மருமகனைநவின்றுகூறி
  நற்பாதஞ்சிரசில்வைத்துப்பணிந்துபோற்றி
பார்புகழும்பண்டிதத்தைப்பலநூல்பாாத்து
  பகுத்தறிந்து சிங்கையினற்பாடினேனே. (௧)

சிங்கயிநால்மணியபூர்தமணிந்தவீசன்
  செப்பரியவிடையேறி நின்றோன்றன்னை
தங்கையானமழுவெடுத்த பெரியோனைத்தான்
  தண்மையாய்க்காளியுடன் வாதுசெய்தோன்
தொகையான மானிடரைப் படைத்தோனைத்தான்
  தொன்மைதிருபுரத்தை செய்தெரித்தோன்றன்னை
உகமகிழுஞ்சிவனுடைய பாதந்தன்னை
  யுபயசரண்தொழுதேத்து மியல்புளோரோ, (௨)

சூரனைத்தர்ன்குலமறுத்துவள்ளிதன்னைச் சுருதிபெறச்சிறையெடுத்தசீமான்றன்னை, பாரமுள்ளதேவருக்குமிடுக்கண்டீர்த்தபார்ப்பதியின் புதல்வனைத்தான்பத்தியாக கோரமுள எக்கியத்திற்கலந்துநின்றகுணவானைமயில் ஊர்ந்தகுபேரன்பாதம் வீரமுடன்சிரசில்வைத்துத் தொழுதுபோற்றி விதமானபண்டிதத்தின் விரிவுபாரோ. (௩

நெஞ்சுதனில்வீற்றிருக்குநெடியோனுக்கு நிதமாகப்பணிசெய்யுந் துணைவிதன்னை அஞ்சியேதக்கனிடஎக்கியத்தி லன்பற்றுநின்றவளே யனைத்தும்லோக மிஞ்சியேபடைத்தவளேயிராசனோடே மிகப்பிரியமா யிருந்துவளர்ந்தாள்தன்னைத் துஞ்சாமல்மனதில்வைத்துப்போற்றிசெய்து தொல்லுலகிற்பண்டிதத்தலைச்சொல்லுவேனே (௪)

பொதியைவளர் மாமுனிவர்பாதம்போற்றிப், புகலரியதன்வந்திரி பாதம்போறறி-விதியிலுயர்காலாங்கிபாதம்போற்றி-வித்தகமாந்தேர்னிக யரின்பாதம்போற்றி, பதியானயூகிமுனிபாதம்போற்றி- பத்தியுடன்சட்ட-முனிபாதமபோற்றி,நிதிபுகழும்புலத்தியர்தன்பாதம்போற்றி, நினைவில்லை வத்துப்பண்டிதத்தை தரிசஞ்சொல்வேனே. (௫)

ஆதிமுதலென்பெருமிராமதேவர் அடவாகக்குளிகையிட்டுமக்க தேசம் வீதியிலேசென்றுபுக்ச்சாய்புகண்டு, விரும்பியேசாஸ்திரங்கள் மிகவும்பேச, நீதிபாயென்மனதிற்றேற்றமாச்சு, நோரகோர்ானைநேர்ந்துபார்த்து.ஓதியேஞானத்தின்செயலுங்கண்டேன்.உற்றுணர்ந்துபிற் பாடுவுறுதியானேன், (௬)

உறுதியுற்றிருக்கையிலேயாக்கோபென்று, உண்மையாய்ப்பெயர்கொடுத்துசுன்னத்துசெய்து,அறுதியுற்றரொட்டியொன்றுஈய்ந்தாரப் போ,அசனுச னல்ல வென்னீநாளென்றேன் பறுதியுற்றபண்டித்தை மிகவும்பார்த்து பகுத்தறிந்தவைத்தியங்கள்பிலக்கவென்றுபிறிதியுற்று வடம்தசமலைகள்சென்று பேதமதுயில்லாமற்பேசினேனே. (௭)

பேசினேன்வயித்தியசிந்தாமணியாகப் போக்கோடேயெழுநூறு விருத்தமாக வீசினேன்மதுரகவிபோலச்சொன்னேன், விதமாகஎன்னூலைவிரும்பிப்பாரு ஆசுகவிபோலாகுமனைந்தம்போக்கு, அடுத்துநின்றபண்டிதர்கள்பிழைக்கவேண்டி, வாசனையாய்ப்பார்த்திருந்தாலெல்லா மாகும் வகையாகவிப்பொருளை மருவிப்பாரே. (அ)

மருந்துவகை.

சொன்னதொருலேகியங்கள்கிருதமெண்ணை சொற்பெரியவங்கபற்பமுப்புசொன்னேன் நன்னயமாமயபற்பநாகபற்ப, நலமானகளிங்கு முதலன்னபேதி இன்னிலத்திற்கல்நாரின்பற்பமோடு இங்கிதமாம்வைப்புமுதல்திராவகங்கள்-கன்னல்போலாக்கிராணநசியப்போக்கு,காரணமாயரசவாதங்கருணையாமே. (௯)

தைலமொடுபொட்டணங்கள்புடத்தின்பாகம் தாக்கரியகிரதமொடுபிட்டுமார்க்கம் அகிலமொடுகருங்கோழியெண்ணைமார்க்க,மடவான பினசத்தி னெண்ணெயோடு வலமதுசெம்பினுடபற்பமார்க்கம், வ

டிவான தங்கசிந்துரமார்க்கம் துயிலமொடுகோழியுட சூரணங்கள் துகைபாகப்பாடிய நூல்துலங்கத்தானே (௰)

துலக்கமாய்க்கெந்தகத்தின்பற்பமோடு துடியான அரிதாரம்சிலேபுமசாரம் விலக்கமாய்வைப்போடுகாந்தம்வங்கம் விரும்பியேஅப்பிரகம் விதங்கள்நிரம்பபெலக்கவேபார்த்தாக்கால்கலக்கமில்லை,பிசகாதுஎன்வசனம்பொய்யாகாது, மூலைக்குள்ளேபாலிருந்தவித்தைபோல, முடிவாகயாக்கோபு மொழிந்தவாறே. (௰௧)

தன்மகற்கும்குருமகற்கும் தனங்கள்தந்து, தாட்டிகமாய்க்கொடுப்போர்க்கும்வழிபட்டோர்க்கும்வன்மவினைநீங்கவென்றுஇந்நூல்தன்னை வாழ்த்தியேகொடுத்துவிடுகொடுக்காதவர்க்கும் கன்மமுளகசடறுக்குங்கயவனேமை களிமடியன்காமியர்க்கும்பிணக்குசொல்வோன், நன்மையாய்நூல்கொடுத்தால்நரகமெய்தும் நானிலத்தில்யாக்கோபு நலஞ்சொன்னுரே. (௰௨)

வன்னிகற்பம்பலம்பத்து, நிறுத்துக்கொண்டு வகையாக அவ்விடைக்குத்துணியைச்சேர்த்து, உன்னிதமாயிடித்துமையக்குடத்திலிட்டு ஒழுங்காகமேல்மூடிசீலைசெய்து பன்னியேஒருசாமம்கடுமையாகப்பதருமலெரித்திடவேஉயரவேறும் சென்னியேவாலைரசமாகும்பாருசெப்பினுர்யாக்கோபின்திறமைதானே. (௰௩)

திறமானகல்லுப்புபடியுநாலு, திட்டமாயிடியினட்சேர்செங்கன்மாவை வறமாகச்சேர்த்திடித்துச்சுட்டியிட்டு வண்மையாய்முதநிறைநடுவிலேதான் அறமாகப்பள்ளமிடுவகையதாக அதிலிடுவாய்வாலைரசம்பலமு நாலுகறமாகமூடியேசீலைமண்ணைக்கட்டிவைக் கயாக்கூபுகருசொன்னுரே. (௰௪)

சொன்னதொருஅடுப்பதனிற்றாக்கிவைத்துச் சுகமாகசாமமேட்டு எரித்துவாங்கி நன்னயமாம்மேலேறும்பதங்கமாகும், நாடியேப்பிறகுச்சிதன்னிலேதான், சின்னபின்னமாகாமல்வழித்துக்குப்பி சிறப்பாகஅடைத்துநீமூடிபோட்டு கன்னலாயெரித்திடவேயுபறவேறுங்,கருத்துரைத்தார்யாக்கோபின்கருணைதானே. (௰௫)

குப்பிபெரிப்பு-

எரித்திடவேபதங்கமதுதேங்காய்போலே ஏறியேதானிருக்கும்உடைத்துமெள்ளவரிந்திடவேகுருவாகவைத்துக்கொண்டு வண்மையாய்லேகிபங்கள்கிருதமெண்ணைநூரித்திடவேசிந்துரமிதிலே போட்டுநலமாகவுண்டிடவேநாட்டிலுள்ள பெருத்திட்டபிணிகளெல்லாங்கடலேபுக்கும்போமேயென்றுசொன்னுர்யாக்கோபுதானே- (௰௬)

பண்டிதத்தை தக்கண்டிதமாய்ப்பார்த்துத்தேறு பரிவானபிணியினி
டபருவம்பாரு- கண்டிதமாயிருந்தாக்கால்-தூறவோடுங்கருத்தினுள்ளே
தீருமெனருல்மருந்தைத்தாக்குமுண்டிதமாய்வியாதியெல்லாங்கடலே
புக்குமுதுமையாய்ப்பத்தியத்தைத்தாக்கச் சொல்லுசண்டியாயிருந்தா
க்கால்மருந்துதன்னைதாகவென்றுயாகுநபிசாற்றினூரே- (௧௭)

அகலிதனைசத்தேவேந்திரன்- புணர்ச்சிசெய்யஅதிற்பிறந்த வெங்
கள்குலமொழிந்தபோதுபயிலாகக்கவுதமருமறவா யென்றார்- பதியாக
வென்பேராபிராமதேவர் ஒயிலாகப்பட்டப்பேர்தேவராச்சு உறுதிபெற
ச்சாத்திரங்கள்மிகவாய்ப்பார்த்துகுயில்போலேசொல்லிவிட்டேன்பண்
டிதத்தைக்கூட்டினேனெழுநூறுகுருவுமாமே- (௧௮)

வேறு.

காரீயந்தாம்பரம்பூ நாகம்வங்கம் க்சடறுத்துச் சமனுக்கிக்கனல்
மேலிட்டுபாரியத்திலுருக்கிமனேசிலையைத்துவு பருங்காண்டியிட்டத
னைவறுத்துக்கிண்டிஆறின பின்னெடுத்துக்குழிக்கல்வத்திட்டுஅற்கம்
பால்விட்டரைத்துப்புடம்ஆறிட்டுவேறினியவச்சிராங்கப்பால் விட்டா
ட்டிவிரைந்துபுடமூவேழுபுடமும்போடே- (௧௯)

போட்டெடுத்துக்கல்வத்திற்பொடியாய்ச்செய்துபுட்டிவெல்லத்
தனுபானத்துடனெய்யிற் கொள்ள மூட்டியபின்னிருவினைகள் முன்
னேவந்துமுடிக்குமெனமுன்னோர்களெழுதிவைத்தவட்டிலுனறயஷ்
டகுன்மமுடனேநீங்கும் எளிதாகஇம்மருந்துபற்றியுன்ன ஓட்டினைவ
க்குந்திருவுளமேயென்றுவுன்னி லுறுதிபெறவினையகலுமுண்மைதா
னே- (௨௰)

திரிவங்கம்பலமூன்றுசுத்திசெய்துதிறமான அயக்காண்டிதணலி
லிட்டு அறிவுடனேயுருக்குமுகந்தன்னிலேதான்அடவானபொட்டனை
யையிடைநேரிட்டு விறுவாகக்கிண்டிடவேபொரிந்துதூளாம் விதமாக
எடுத்துமேகலவத்திட்டு நெறிபெறவேபொற்றலையின்சாற்றாலாட்டிநி
லவரமாய்மூன்றுபுடம்போட்டிடாயே- (௨௧)

போட்டிடவேசெந்தூரமாகும் பாரு பொக்கோடே யனுபானத்
தோடுகொள்ளநாட்டிலுள்ளவியாதியெல்லாங்காணுதோடும் நமனுண்
டகற்பமிதுநானுங்கண்டேன்கேட்டபேர்க்கெல்லாந்தான் சொல்லவே
ண்டாம் கேள்வியாய்வயித்தியத்தைச்செய்யவேண்டாம் பாட்டிலேயா
ராய்ந்துபாகமாகப் பதிவாகச்செய்தாக்கால் பலனுண்டாமே- (௨௨)

கல்லுப்பு-

கல்லுப்புஞ்சோரனுஞ்சமனுப்ச்சேர்த்துக்கல்லுறலிலிடித்ததனை
க்கலயத்துட்டிசில்லிட்டுமூடியதைபபுடத்தைப்போட்டுத்தியாற்றிநீல

கண்டனிலேச்சாற்ருலே-மெல்லியதாயரைத் துருட்டிக்-காயவைத்துமெ
ன்றுதின்னமாதத்திலாறுநாள்தான்சொல்லுகின்றஅஷ்டகுன்மமெல்
லாந்தீரும் சோதனையாய்வருடமொன்றில்சொஸ்தமாமே- (உரு)

இணங்கனெண்ணெவாங்க-

பொட்டலையும்படியொன்றுசட்டியிட்டுப் பின்புதான்பாணிபடி
நாலுவூற்றுகட்டலையாயடுப்பேற்றிப்படியாய்க்காச்சி கனிந்துமேகண்ண
டைந்தசீலைதன்னைவட்டமிட்டுப் பதினாலாய் மடித்திறுத்து வளமாகவு
ப்பினெண்ணெ துணியில்நிற்கும்,இட்டமுடனுப்புதுதான்கம்பியாகும்
இனியவுப்புயாக்கோபு-இதஞ்சொன்னூரே- (உச)

பண டாசனுப்பதுதான்சரக்கிரேடேபாச்சிடவேசரக்கதுதான்
கட்டிப்போகும் விடையேறுமீசனவர்சொன்னவுப்பு-மேதினியோர்கா
ணார்கள்ழிழிப்பார்பாரு கிடைபாரதுவாங்கிவந்து சுன்னம்பண்ணிக்
கட்டிடுவார்வேதையிதுகாணார்வாதிஇடையானபச்சைஉப்பில்வேதை
யாகுமினிதானயாக்கோபுஇதஞ்சொன்னூரே- (உரு)

கருவங்கசெந்துரம்- -

கடினமாந்தலையானவெடியுப்பைத்தான்கரண்டிதனில்வைத்துரு
க்கிகாரொட்டில்தான்-படியவேபோட்டுருக்கப்பத்ததாகும்-பதிவானகா
ண்டியினல்தேய்க்கச்சுன்னம்-நொடிதனிலே எடுத்துமேகல்வத்திட்டு
நேராகஅறைத்துறவிகாயவைத்து-வடினமாய்மாளமட்டும புடத்தைப்
போட்டுவடிவானசிந்துரமாகுந்தானே- (உசு)

தேனிலிடுநோயெல்லாந்தெறித்துப்போகும் செயமாகரவியிலிடுத
ங்கமாகும்வானிலிடுவையகத்திற்பிழைத்துக்கொள்ள,வடிவானவங்கசி
ந்துரம்பண்ணுநானிலத்திலென்னைப்போல்விளங்கச் சொன்னேனாடி
யேஇந்தவங்கசிசமதாகும் தானிலையாய்நின்றுவிடும் யாக்கோபுசொன்
ஞர்தாஷ்டிகமாய்வங்கத்தைத்தழுவிப்பாரே- (உஎ)

நாகமணி-

சோரமதுமலமூன்றுகரண்டியிட்டுச்சுடுதணலில்வைத்துருக்கிச்
சொல்லக்சேஞுபாரமுடன்பொட்டலையைப்பாதி போட்டுப்பதிவாகக்
கிண்டிடவேகறுத்துப்போகும்நேரமீதரியெடுத்தனைத்துவில்லைகட்டிநி
ன்றநிணாவலையிலுப்புக்கவசங்கட்டி பாரமதாய்ப்புடம்போட்க் கட்டிப்
போகும்பரிவுடனேயாக்கோபுபகர்ந்தார்தானே- -உஅ

புடம்போட்டுக்கவசத்தைத்தள்ளிப்போட்டு போராதளட்டிலொ
ன்றுக்காரஞ்சேர்த்து நடமாகச்சேர்த்தனைத்து- உரிக்கிப்போடநாகமது
முத்துபோல்மணியுமாகும் வடமான மணியிடைக்குத்தங்கங் கூட்டிவ
கையானைரவிபத்திவொன்றுதாக்க திடமாகத்தங்கமாம் யாக்கோபுசொ
ன்னார்தீரமதைக்கண்டுகொள்ளத்திறனையாமே- (௨௯)

## துருசுசுன்னம்-

புசங்கலிதக்காண்டிதனிலுருக்கிக்கொண்டுபோன பொட்டலை
யைப்பாதியிட்டுவசமாகவுருக்கிடவேயிரண்டுஞ்சேர்ந்து, வளமாகவுரு
குமது அதிலேநீலன்நிசமாகத்தோய்த்தெடுசுன்னம்வீரம்நேராக அரை
த்து அங்கிமேலேகட்டுவிசையாகப்புடம்போடச்சுன்னமாகும் விரகா
லயாக்கோபுவிளம்பினாரே- (௩௰)

துரிசினுடசுன்னத்தா லிரதங்கட்டித்துடியான பாஷாணமெல்
லாங்கட்டிவரிசையாய்வேதைமுகந்தெரியப்பார்த்து வகையானவென்பே
ர்தான்யாக்கோபென்றார் பரிசனத்தையுங்களுக்குத்தெரியச் சொன்
னேன்பானதயிதைக்கண்டறிந்துபதிவாய்ச்செய்வாம், உரிசையாய்நான்
செய்தவழூநூறில்உற்றுமேபார்த்தாக்கால்சித்தியாமே- (௩௧)

## மேகரீரிழிவுக்கு-

கல்லாய்ந்ததிலதவலும்படியுமைந்துகைக்கடங்காப்பிடியெடுத்து
த்தண்ணீரோடே மல்லாந்துவிழிகிராய்ப்படுக்கும்போதுமண்டலத்தி
ல்மணியிறுகிக்கட்டுண்டாகும் பொல்லாதசயரோகமேகம்போக்கும்பு
கலாதேயெவருக்கும்புலன்சொல்லாதே செல்லாதவிடந்தனிலேசெலு
த்தாதேன்று செப்பினார்யாக்கோபுதிறமாய்த்தானே- (௩௨)

## மேலெரிவுக்கு-

பூனையதுவணங்கியிலே பலந்தான்பத்து- புகல்கிறுந்தசிரகமும்இ
டையேசேர்த்து பானுவிலேகாயவைத்துப் பொடியாப்பண்ணி பதி
வானசர்க்கரையும் பாதி சேர்த்து தேனதனையுள்ளிட்டுப்பத்துவழு தி
னமுண்ணமெய்யினுடயெரிவுவாய்வு ஞானமதுபுத்தியுண்டுகோரந்தீ
ரும்நலமானயாக்கோபினன்மைதானே- (௩௩)

## பாஷாணஎரிப்பு-

சொல்லடங்கா வெள்ளைப் பாஷாணநான்கு சுண்ணாம்பிற்சுத்தி
செய்துகழுவிக்கட்டி- முள்ளங்கிச்சாற்றிலிட்டுமூன்றுசாமம் முருகா
மலரைத்துநீரல்வந்திட்டு துல்லியமாய்வெங்காயச்சாற்முள்ளங்கி துட

ர்ந்தணாத்துநாலாநாட்குப்பிக்கேற்றி மெல்லியநல்லா றுல.௧பிலெரித்து வாங்கி மிளகுநிணாயாயக்கொள்ளவியாதிபோமே- (௬௪)

கங்கிகையை யறுத்து விடுகடுக்காய்த்தூளைக் காட்டிடவேசரமா குங்கருவங்கத்தை சென்னிரிலணாத்து நந்துபுடமும்போடு சிந்துரமா கும்வங்கம்நாலிலொன்று வங்கிகற்பம்வாழ் மடந்தைசேர்த்துமூன்று வாகாகப்புடமிட்டுரவியி லொன்று உசிதமாய்க்கொடுத்துருக்கவம மாகும் உறுதியென்றுயாக்கோபுவுணாசெய்தாரோ- (௬௫)

பாறையுப்புக்கட்டு-

உத்துயெடுபாறையுப்பை இடையேபண்ணை யுண்மையாய்ப்புழச் சாறுவிட்டணாத்து பத்துவிசைகிடத்திலிட்டு எரிக்கயேறும் பதிவாக மேலடியுஞ்சேர்த்தணாத்து சித்துபடவில்லைகட்டிஅணாயுமேசி சிதமா கஅங்கியிட்டுப்புடமூன்றிட்டுச்சத்து படக்கரிகுடியாய்உப்புமாகும்சா தியாயாக்கோபுசாற்றினாரோ- (௬௬)

சோர்மதுசேரொன்றுஎட்டிலொன்றுசேர்த்திடுநீகுதம்து படை யோன்பத்து காரமதுரண்டுபத்துஐந்துசேர்த்து கனக்கயிடிவாலைதனி ற்புகைநீர்வாங்கிகோரமதாஞ்செம்புருகியதிலேசாய்க்க குற்றமறுந்துட் டிடைதானுண்டுதேறு பாரமிலைபித்தகுன்மம்வாயுபோகும் பாக்கியவா ன்யாக்கோபுபல்ன்சொன்னாரோ- -௬௭.

படைராசன்பலன்பத்துவளையநோம் பார்த்தேயிடி வாலைதனில் டைத்துநீணா கடைநீணாப்பிடித்து அதிற்சூதப்போடக் கணாந்துபோ முன்போலபுல.கநீர்வாங்கு இடையாகச்சரக்கெல்லாந்தோய்த்துஎட்டு விதமாகக்கதிரிலிடவெந்துநீறும் சடையாறுஞ்சொன்னதிந்தபுதுமை தன்னைத்தாஷ்டிகமாயாக்கோபுகண்டேன்தானே (௬௮)

பதங்கலிங்கம்பலம்பத்து கல்வத்திட்டு பார்த்துஅணாலுமத்தினபு கைநீராலே விதமாகஅணாத்துவில்லைகதிரில்வைத்து வெற்றிபெறக்க டத்திலிட்டு எரித்துக்கொன்று நிதமாகஅடியில்நிற்கும்பணமவ்விதம நோராகக்கொண்டுவாஅஷ்ட குன்மம்- அதமாகவுகிவிடு நசலெல்லாம் போம்ஆதியாம்யாக்கோபுஅறைந்தார்தானே. (௬௯)

மடலிரியஅரிதாரம் கல்வத்திட்டு மாய்கைதருமெருக்கம்பால் த ன்னுலேழு விடமிசியதினமணாதது கதிரில்வைத்து வில்லையெடுபு டமிடுநீகாடை தானில் திடமிசிய நீறுகும்பணமவ்விதம் செல்லவுண் ணசயகாசம்கடிகள்தன்னை, படலிசியகடல்புக்கும் யாக்கோபுசொன் னார், பார்த்திடவேதாரபற்பம் பலிதமாமே. (௭௰)

சதுர்மறையிலாய்ந்துணர்ந்த வல்லோர்சொன்ன, சாத்திரத்தின் மனதுணர்ந்து துறவிலாத முதல்வரணனுதவிகொண்டு தேத்தின்மூலி வித்துமேயாவின்மோருடனைரைத்து,மதிலுதயகாலமதிலுண்டு நித்தம், வாதமையத்தாலெழுந்தசுவாசகாசம், சிதையாமலிருந்துகொண்டு செவியிற்கேட்டால் தெண்டமிட்டுப் போமென்றேசெப்பினரோ. (சுக)

செப்பினதோரகடுக்குதானெருசேர்வாங்கித், திரண்டிருக்குங்கறகண்டுசேரிரண்டு அப்பதனிற்பாகாக்கியருள்முன்னுக, அரைத்து நன்ருய்க்கிண்டியனைத்தேனைவிட்டு துப்பரவாக்கிண்டியுண்ண மந்தாரகாசஞ் சுவாசமிடுங்காசமொடுஇருமலீளை, துப்பரவாய்த்தீருமுண்மையாகச்சொன்னேன் சொல்லவொண்ணுக்கைகண்டகுட்சந்தானே.(சுஉ)

நீர்க்கட்டுக்கு.

ஒளித்திட்ட-ஒளிதனிலே ஐம்பூதத்தா னுடலெடுத்தவினையதனிலேடர்ந்தரோகம் வலித்திட்டு அடிவயிற்றிற்சலத்தைக்கட்டில், வாணவுப்புச்சாரமிருவகையும்வாங்கி பலித்திட்டமருந்துனைப்பேன்பறையாதெங்கும் பாணியுமூன்நாளுதிகறுத்தபச்சை குளித்தியிட்டுக்காச்சியிருகாரமுப்பு கூட்டியுண்ணநீர்க்கட்டுகுணமதாமே. (சுங)

கசடற்றதாம்பரத்தைத்தகடாய்த்தட்டி கழிந்தள லுமிச்சஞ்சாற்கல்வத்திட்டுவசமாகநாலுமுறைஅரைத்துப்பூசி வலுக்கவொருபுடம்போடவெட்டையாகும் பிசகாமலிந்தவெட்டைபலநிறுத்து பின்புஇடைநாத்தம்சேர்சூதநதன்னை சமநாழிமுன்நீராலரைத்துக்கொள்ளத் தாஷ்டிகமாயாக்கோபுசாற்றினரே. (சுச)

கரியதனையெடுத்துகதிர்தன்னிலிட்டுக் கண்க்காகப்பொடியாக்கிச் சொல்லக்கேளு பிரிவாகமுக்கடுகு அந்திசந்தி, பொழுதனைத்துக்களஞ்சிப்பழந்துவிலுண்ண சரியாகக்கூர்மமெட்டுகுலேரோகம், தவரிடுங்காண்பானுகண்டபகிபோலாகும் பெரியோர்கள்சொன்னஇந்த நேர்மை தானும்பேசினேன்யாக்கோபு பெருமைதானே- (சுரு)

ஈளைகாசத்துக்கு-

நாயுருவிமூற்றினதாய்நறுக்கிமிக்கறபசுவின்கோம்யத்தில்நனைத்துப்பாண்டம்வாயிலிட்டுப்பூப்புடத்திலிறக்கிவாங்கிவைத்ததனைவெற்றிலையில்மென்றுதின்னநோயில்பெறுமரிதாா சுவாசகாசம் நருக்கிடுமே வீளைகண்டதுடிப்புநீங்கிக் காயமதைப்பிலப்பிக்குஞ்சித்தர்சொன்னகருணையதுதப்பாதுகண்டுதேறே- -சுசா-

பெருமரத்தின்பச்சைபட்டைதூக்கிரண்டுபெலத்தவட்டத்திருப்பிவேரதனிற்பாதிகறுக்கவறுத்திடித்துச்சியாழம்வைத்துக் காச்சிவடிபு

ட்டி வெல்லமதனிற்காலாம் திரிகடுகுநடுநீக்கி ஏலங்கிராம்பு சீரகமீரல் வாங்கித்தோலநாகமல்லி மருவு குருசானி யதிவிடையம்போட்டுமணி யபினிசாதிபத்திரிசாதிக்காயே. (சுஎ)

## சீழ்மூலகிராகிணிககும் குன்மசூலைக்கும்.

காயிதுகள்வறுத்திடிப்பாகுதன்னிற், கலந்துவெள்ளாட்டுநெய்யு ஞ்சேருமோடு, தீயிறக்கிக்காசினிடையுண்ணவேதான், சீழ்மூலக்கிரா ணியுமேகடுப்புமாறும், நோயகலுங்குதிவாதங்கிராணியெல்லாம், நுளு க்குமலமிறங்குமுன்னேரத்தஞ்சாய்தல், வாயுபித்தஞ்சிலேட்டுமத்தின் பேதிநீக்கி வைக்குமிதைப்புகலாதேமனதில்வூணே. (சுஅ)

சாற்றக்கேள்ளுபானத்துடனேயீயச் சந்நிசுரமகாவலிகள்குன்ம சூலை, மூத்திரத்தின்கிரிச்சனுமேகத்தாகமுயலகனும்வாதமெண்பத்து நாலு, சேத்துமங்கள்காச்சலுறல்வயிற்றிரோகஞ் சில்விஷங்கள்குஷ்ட மகாரோகமெல்லாம், காற்றடிமுன்பஞ்சுபோலாகுநேர்மைகண்டிரி துபத்தியமில்லைகாணே. (சுகூ)

## செவிநோய்க்கு.

வடபத்துவள்யில்நாலாறுமாகும் வண்மைபெறக்கல்லுரலி லிடித் துத்துளாய், குடமடைத்துவாலையென்றசட்டிமூடிக் குப்பிவைத்துக கடைநீரைவாங்கிக்கொண்டு, திடமினிய இந்நீர்துட்டிடைபெடுத்து த துக்கியனாயபினிதான் கழுஞ்சியிட்டு, செட்மானசெவியிலிடுசாறுநா ளாய்செல்வயாக்கோபுசொன்ன திறமைதானே. (ருய)

அடுத்துநின்றகாதுசெவிபாய்ச்சலோடு அழிவான்செவி குத்தல் நிற்கும்பாரு, படுத்துவிடுங்கிருமியொடுநாற்றம்பாய்ச்சலபதிவானாரண மாறும்பாருள்ளோர்க்கு,குடுத்தாடிக்காற்றுமுன்னேபஞ்சுபோலாம்கு ணமாகுங்கதிர் கண்டபனிபோலாகும், எடுத்துவிடுமினாச்சல்நிற்குமி ன்பமாகும் எழுதினார்முன்னோர்களியற்கைதானே. (ருக)

## கவுசைமகோதரத்துக்கு.

ஆட்டமூரிசோரணையாங்கடுக்காய்பத்து அதையற்றுத்துத் திரிநாளு மூண்டுபாரு, வாட்டுகின்றமகோதரங்களாமபறகட்டிவடிவழிக்குபெரு வயிறுகுணக்குசூலை, காட்டுமுன்னேபறந்தோடிக்கடலேபுக்குங் கருத் துணர்ந்தோர்க்கெதுவு மூண்டுகண்டுகொள்வார், ஏட்டதனில்முன்னோ ர்களெழுதிவைத்தார் ஏழைகட்காயாக்கோபு இயம்பினாரே. (ருஉ)

## கண்டரவிசத்து.

கசடறுத்தசத்தியதுபல்மும்பத்து கனிநிம்பச்சாற்றினாற் சாமமாட்டி பிசகாமல் கண்டரவிதகட்டிற்கட்டிப்பிடம்போடுநுறுங்குமட்டும் புடமூன்றிட்டு; வசமாகக்குகையிலிட்டுவண்டில் கூட்டிவண்மைபெறச்சேர்த்தணைத்து உருககச்சத்தாம், தசமாகுஞ்சத்தினுடபெருமைதன்னைத் தாஷ்டிகமாயாக்கோபுசாற்றினாரே. (௫௩)

சத்துநிறம்வெங்கலம்போல் தானேகாணும் சத்தெடுத்துச் சுடர்தன்னைப்பாதிசேர்த்து, வெற்றிபெறமுன்சாற்றால்சத்தையாட்டி விரும்பிவில்லைகட்டிவில்லைகதிரில்வைத்து, நித்தியமாய்ச்சிவக்குமட்டும் புடத்தைப்போடு நினைவாகமதியெட்டிலிரண்டுசேரு, விற்றிடவேமாத்தெட்டுமாகும்வேதை வேதாந்தயாக்கோபுவிளம்பினாரே. (௫௪)

அடுத்துநின்றதுரிசுக்குள்செம்பைக்கொல்லு அடவர்கச்சத்தாக்கியுருக்கிக்கொண்டு, படித்துநின்றசெம்பையிடுமதியினுள்ளே பாச்சிடவேயேமமாம்பாருளோர்க்கு, உடுத்துமேகண்டரதுசெம்புதானு முறுதியாய்மாலாட்டால்ஏமமில்லை, கொடுத்துதான்களிப்பாகுங்குணமுமில்லை கூறினார்யாக்கோபுகுணமாய்த்தானே. (௫௫)

துயரந்தான்போவதற்குச்செம்புஏமம் துக்கியிடையுருக்கியேதகட்டித்து, நயமாகச்சததியுடன்சிகரஞ்சேர்த்து நாட்டியனை முன்னீராலணைத்துஅப்பி, பயமாகப்புடம்போடு நுறுக்கிக்கொண்டு பக்குவமாய்ப்பாதிசுடர்சேர்த்தணைத்து, செயமாகப்புடம்போடச்செந்தூரிக்குஞ்செழுமைபெறயாக்கோபுசெப்பினாரே. (௫௬)

செப்பியதோர்செந்தூரந்தனையெடுத்துச்செயமாகமதியெட்டி லிரண்டுதாக்க, ஒப்பாகுஞ்சரியுமுள்ளஏமமாகும் உற்றுணர்ந்தார்க் கருத்தோணுமுறுதியாகும், தப்பில்லைபாகமிதைக்கண்டுதேறில் தாட்சியில்லை மெய்விளங்குந்தரணியோர்க்கு, முப்போதுமாகுமென்றுயாக்கோபு சொன்னேன் முழுதுணர்ந்ததீந்தோர்க்குமுற்றுந்தானே, (௫௭)

வடதிசையிற்பிறந்துவந்த அன்னபேதி வாங்கியொருசேரதனைப்பழச்சாற்விட்டு, குடகல்லிலணைத்துவட்டாய்க் காயவைத்துக் குறுகவொருபுடம்போடசெந்தூரிக்கும், உடலறிந்துஅனுபானவிதத்திலீயஉதரத்திற்பிறந்தமகாகுன்மமெட்டும், புடைபொருந்திகொண்டு செல்லுமத்தரோகம் புரவியொடுமிதுசெலுத்தும் மிடியந்தானே. (௫௮)

உரிசைதரும்பூவனைக்கல்வத்திட்டுஉற்றுஅரைமேனிச்சார்தன்னாற்சாமம், வரிசையாய்வில்லைகட்டிக்கதிரில்வைத்துவண்மையதாய்மூன்றுபுடம்போடக்கட்டும், துரிசமுடன்பலமொன்றுசத்தியொன்றுதொ

க்கயெடுபதங்கரசமுன்னேசேர்த்து,பிரியமுடனிருசாமமேனிச்சாற்றி
ல் பேசாதேயனாயென்றார்யாக்கோபுதானே. (௫௬)

### கண்டர்சத்துக்கு.

அணாத்துகுன்றிபோலளவுநிழலுலர்த்தி அதையெடுத்துப்புறம்
பாகவைத்துக்கொண்டு, புணாத்தகண்டர்செம்பெடுத்துஅணலிற்காச்சி
புதுக்குகையிலிட்டுருக்கிப்பின்புகேளு, குணாத்துஒன்றுஒன்றாககிராச
மிட்டு, கூட்டியுண்ணுஞ்சத்தாகுஞ்சததுதன்னில் அணாத்துவண்டில்
காலிட்டுஅணாத்துருக்க, அடை.வாகவெள்ளையாம்பாருளோர்க்கே. ()

வெள்ளையென்றசத்தில் நின்றஎண்ணைவாங்க விளமபுகிறேன் தீ
க்கஞ்சிபாதியிட்டு,உள்ளபடிகல்வமதில்முன் சாற்விட்டுஉற்றுஅணாவி
ல்லைகட்டிகதிரில்வைத்து- துள்ளமுன்போற்பெரியபுடம்போட்டெடு
த்துத், துப்பரவாஞ்சிந்தூரமுருக்கம்பூவாம்கொள்ளையிதில்வாதமென்
றுசொன்னார்யாக்கோபு கூர்ந்துணாத்தார்தன்பெயரும்விளங்கத்தானே

விளங்கவேமதிபத்திலொன்றுதாக்க வித்தகமாய்தங்கமாம் வாதி
யோர்க்கு- பழங்கதைபோல்பேசாமல்செய்துகொண்டு பாரிலேஉண்டு
டுத்திஞானம்பார்க்க- களங்கமறச்சொல்லிவிட்டகருத்தைப்பாரு கண்
டாக்காலொருவருக்குங்காட்டொணாது-உளங்குளிர்ந்துயாக்கோபுசொ
ன்னநீதி யுறுதியிதுசத்தியமாமுற்றுப்பாரே. (௬௨)

உற்றுஎடுஉப்பதிலேகண்டால்தங்கம்உறுதிகாண்வேதைமுகங் க
லங்தார்பாரு- சித்துகளுமெத்தவுண்டுகாலிக்கேகாத்- தொல்லுலகிற்பய
மில்லைதோய்ந்துபாரு முற்றுநிறமுந்நூறில் களங்குசொன்னேன்- மு
ற்றிலுமேசோதித்துமுத்திபெற்று - சத்துகளைப்பார்த்துணர்ந்த யாக்
கோபுசொன்னேன் சகலசித்துங்கைவசமாந்தாக்கிப்பாரே. (௬௩)

### செம்பில்கிராசம்-

பதங்கரசம்பலமொன்று அடியில்நின்றபதிந்தவுப்புமுன்னெடை
யாந்தேவியொன்று-இதப்பெறவேமேனிச்சாறதன்னலாட்டிஎத்திசை
யும்புகழ்கடலைப்பிரமாணந்தான்- அதமுறவேபுருட்டிரவிகாயவைத்து
அதையெடுத்துரவியுருக்கியெடையும்ஒட்டி- மதம்படவேகிராசமிடச்
சத்தாய்நிற்கும் மகிழ்ந்துணாத்தார்யாக்கோபுமாயத்தானே. (௬௪)

மதித்தசத்துஉடைத்திடவேவெட்டைவெள்ளை மதிமயங்கஎண்
ணைதனைவாங்கக்கேளு- விதித்தவிதிப்படிதிட்டிசுற்றுகின்ற விதமான
ஆலத்திதன்னைவாங்கி- உதித்தபடியாகியிட்டுமுன்னீராட்டிஉற்றுஎடு
புடமிடவேபவளமாகும்- மதித்தபடிபொன்னுகுமயங்கவேண்டாமகித
லத்தில்யாக்கோபுவழுத்தினாரே, (௬௫)

134 பண்டுபடு மதியிருபத்தொன் றுருக்கிப் பத்தியுடன் திருவுளத்தை நோக்கிப்பின்பு- கண்டுகொடுசெந்தூரமரண்டதாகக்கரக்காமலதைவாங்கிப்பழக்குங்கண்டீர்- தொண்டுபடுமிதைவிற்றுச்செலவுசெய்துதொக்கவேயுண்டுடுத்தித்தொழிலைப்பாரு - கிண்டிநிலமுழுது பயிரிட்டாப்போலே கீர்த்தியுள்ளயாக்கோபுசெப்பினாரோ, (௬௬)

கண்டரவிசத்து

135 சுத்தமுளவன்னமடந்தைகல்வத்திட்டு சூட்சமுள்ளபதங்கரசங்கருவிநோம்- பத்தவிடுமிம்பச்சாற்சாமம்நாலுபகற்போது அரைத்துண்டைகடலைநோம்- வித்தகமாய்ககதிரிலிட்டுஎடுத்துக்கொண்டு வீசமிடைகண்டரவியுருக்கிந்நாக்கு- சித்தம்வுள்ளசத்தாகுமென்றார்யாகூசீமானார்செப்பினார்திறமைதானே. (௬எ)

136 திரணமையாம்வண்டில்துகாலும்ருட்டி தேக்கஅரையுருக்கியெடுத்துய்யான்போலாம- வரமருளு மிச்சத்திலியம்போக்கவலுவானசெம்பாகவிழுத்த்சேளு-சிரமருளச்சித்தருட ரூபிபாதிசிர்பெறவேகன்னிபர்பால்நன்றலாட்டி- உரம்பெறவேவில்லைகட்டிபுடத்தைதப்போடே உற்றசிவப்பாகுமெனயாக்கோபுசொன்னார். (௬அ)

137 சொன்னபடிமதிபத்துக்கொன்றேயிட்டால் சோர்விலாத்தங்கமாம்நேர்மைமெத்த-முன்னமேசொன்னதுபோற்காயசித்தி முடிவாகுமுண்டிடவே நசலெல்லாம்போம் - கன்னலரிதாரப்போர் நாழியுண்டோகனகமயமாய்ச்சொரியுங் காட்டொணாது - இன்னிலத்திலிருக்குமட்டுமுண்ணலாகு மிக்குணந்தான்யாக்கோபு இயம்பினாரோ. (௬௯)

கல்நார்.

140 வெற்பதனிலுற்பவித்தகல்நார்தன்னை வெள்ளையாயெடுத்துபலநாலுசட்டி, யுற்பனமாயிட்டுமூவர்சுன்னநேரோ யுடன்கரைத்துப் பாணிபடியிட்டுக்காச்சி- கற்பனைபாய்க்குழம்பிலிறுகல்நார்பற்பம, கருத்துடனே அரைவில்லைபுடத்திற்போடுசொற்படியேசுன்னமது ஆகுமபாரு சொல்லரிது யாக்கோபுசொன்னார்தாமே. (எ௦)

142 வாரணத்தின்முட்டைதனைப்பார்த்தெடுத்து வடிவானஉவர்மண்ணுஞ்சுண்ணநேரோ- காரணமாய்ப்பாணிபடிரண்டுவிட்டு கருதியதைக்காச்சிடவேகட்டிப்போகும்- தோரணமாமதையலம்பிமஞ்சள் தள்ளித்துடியாகஅரைத்துரவிகாயவைத்து-பாரணமாயதையூதப்பதிவாஞ்சுண்ணம் பதிபானயாக்கோபுபகர்ந்தார்தாமே. (எக)

### அண்டசுன்னம்-துரிசுநீறுசெம்பு.

அண்டமதுகடுஞ்சுன்னமாக்கிக்கொண்டு அடவான துரிசதனைநிம்பச்சாற்றால், கண்டுஅதையரைத்துருட்டிகாயவைத்துக் கணக்காகச்சுன்னத்தைக்கவசங்கட்டி- பண்டெனவேவ்வராகியிட்டுவுருக்கிப்பாருப்ரமரவியாக்கோபுபகர்ந்தநேர்மை- கண்டுமனமகிழ்ச்சியடைவாதிமார்கள் கண்டுரைத்தார்யாக்கோபு கருணைதானே. (எ௨)

கனகமுள்ளசெம்பதனைவேடம்பண்ணிக் காதுதனிலிட்டு மேகாண்பீராகில் வினையகலுமானிடர்க்கள்வசியமாவார்-வேதாந்தசித்தரைப்போல்விளங்குநல்ல- இனமாகப்பாகமாமிந்தசெம்பு இரவிமதியுள்ளளவுமினமதாகும் வனகமதாயாக்கோபுபகர்ந்தநேர்மைவையகத்தில்வாதிகளேவகையாய்ப்பாரோ. (எ௩)

### அபச்செப்பு

கருவான அபங்கழஞ்சுநாலெடுத்துக் காரமது பொரிபிறுத்துநாலுப்த்து- உருவாகக்குழிக்கல்வமிட்டுஆட்டி உண்ட-பின்புகாயவைத்துப்புடத்தைப்போட- திருவாகமைபோலாமுருக்கவூத திடமானரவியாகும் அயத்தின்செம்பு பெருவாழ்வுஉண்டாகுமதியிற்பத்து புக்கிடவேயஞ்சதுவும்புதுமையாமே. (எ௪)

செம்பெடுத்துநாலிலொன்று ஏமநாகம்சேர்த்திடவேகளங்காடுங்களங்கம்நேரோ-வம்புசொல்லாஆயிரதஞ்சேர்த்தரைத்து-வகையாகமேருவினிலெரிக்கச்செம்பாம்-அம்புவிபில்ரவிதனிலே நூற்றொன்றிட்டால் அடவானதசமாற்றுமறிந்துகொள்ளு- தெம்புடைய யாக்கோபுசொன்னரிந்தத் திடமானசிந்துரஞ்செய்துபாரோ. (எ௫)

### சுக்கானதுருசுசுன்னம்,

சாரதினையத்தானெடுதது சுண்ணச்சிலை- தக்கஇடுகதிரில்வைத்துப்பின்புநீயும்- பாரதிலேகள்ளத்தைப்போக்கித்தன்னைப பக்குவமாயுருக்கியிட்டு மூழ்கச்சாமம- நீரதிலேயெடுத்துப்பின்பார்க்கும்போது நிஷ்களானந்தமதுகசடுநீங்கி வேரதிலேகொக்குநிறமாகுங்கணடீர்-வேதாந்தயாக்கோபுவிளம்பினரோ. (எ௬)

விளக்கமறச்சுக்கானையுலையிட்டு வீதமுடனூதிடவெந்துநீறும்துளக்கமதாய்ச்சிகரமிட்டு- அரைத்தபின்புசுத்தித்தசங்காலின்மேலேகட்டு பளக்கமறப்புடம்போடக்கண்டர்நீறு- பணவிடைதானெடுத்தியவிராலீதன்னில் களக்கமறஇட்டிடவேநீராமென்று-கருத்தாகயாக்கோபு கழறினரோ. -எஎ-

சூதமதுகாண்டிதனிற்சேர்தாகிட்டுச் சுடுதழலில்வைத்திடுநீவிரா விச்சாறு, பேதமறவிட்டெரிக்கில்வெண்ணெபோலாம் பின்புருட்டித்த ந்தசெட்ந்தன்னிலிட்டு- தூதியமாய்ப்புடநூறுகட்டிநின்றதுஷயற்றுக் கரியில்நின்றுமணிபோலாகும்-வாதமிதுமணியிறுகுமேவலாகும்வகை யர்கயாக்கோபு செப்பினுரோ. (எஅ)

அரசனவன்கரியில்நின்றுவுருகும்போது அதிலிடுநீநாலுக்குஹேன் றுஹேமம்- விரசாகஹேமயெடைநாகமபோடு விறிடநீயுருக்கியதுகளங்கமா கும், உரசாகநவலோகம்நூற்றுக்கொன்றுஉகந்திடவேஹேமமாமொளிவு மெத்த - பரசமையக்கர்த்தாவைத்துதித்தெடுத்துப் பாக்கியவான்யாக் கோபுபாலித்தாரே. (எகூ)

களங்கதனையுடைத்துபணவெடையின்விதம் கனிந்தநறும்பழத் திட்டுஉண்ணமேனி- உளங்குளிரச்செவ்வலரிபோலாமத்திஉறுதிமிகு மலைபோலாமுறுதியாகும்- சளங்களறும்விந்திறுகுமுறுக்குமேறுஞ் ச ரியாகளட்போதும்பாலன்போலாம்- வளங்களுறும்பெரியோர்கள் சொ ன்னநீதி- வடிவாகயாக்கோபுவமுத்தினுரே. (அ0)

நாகவங்கம்.

நாகமொடு வங்கமதைச்சமனதாக்கி நல்மாகவுருகையிலே ஆடா தோடை- சாகவேயிட்டுருக்கிக்கிண்டபற்பஞ்சரிய கஜந்துபுடந்தாழஞ் சோற்றில் - பாகிகிதாயனைத்துருட்டிக்காயவைத்துப் பத்துாண்டுபுடம் போட்டுப்பதம்பார்வெண்மை- ஆகமட்டுங்களங்கதனி நில்லாவிட்டால் அதையெடுத்தேயனுபானத்தடையிற்கூட்டே. (அக)

கூட்டதனைப்பணவெடைதான் கொள்ளச்சொல்லி குணமானம ண்டலத்திற்குணமநேகம்- வாட்டமதுகொள்ளாதுமோசந்தானுமணி யிறுகுந்தாதுவிர்த்திவுளரும்போகம்- சூட்டுமலர்க்குழலாளும்பிரியாள் கூடிற்சுகமறிந்தபுருஷனெனத்தொழுவாள் நித்யம்பாட்டிலினிப்பயன் பிரிக்கஅறியாமற்ருன் பகர்ந்ததினிப்பண்டிதரோபயன்சொன்னுரோ. ()

மூட்சிகவிஷத்துக்கு.

விளக்கெண்ணெப்ருத்திலேச்சாற்வகைக்குநாழி விடுமிதிலேவச்சி ராங்கிப்பாலாழக்கு-குளிக்குமஞ்சள்திப்பிலியும்பூனைக்கஷ்டம்கூட்டுமி தைப்பலமொன்றுகுறைபாமற்ருன்-இளக்கமஃதில்லாமற்பதத்தில்வா ங்கு இறக்கிவடித்தோர்காண்டியீப்தாயானுல்-உளகுமெலிகடிகள்பதி னெட்டுந்தீரும் உண்மைபுடன்பத்தியமாயுண்ணத்தரனே. (அங)

## உதட்டுப்புழுவுக்கு.

அதாமதுப்ருத்துநொந்துவெளுத்துதானலாட்டுசெங்கமுள்ளாலே பிடித்துக்குத்தி- உதிரமதைத்துடைத்தாலம்பாலைப்பூசி உகந்தரஸ்தாளிகனிபிளந்துகட்டி-கதிரவன்முன்னிருத்திவைத்துமூன்றுசாமங்கட்டவிழ்த்துப்பார்க்கவதிற்கழண்டுபூச்சி- விதனமிருமூன்றுநாளின்னங் கட்ட விஷயமிதுக்கண்டதெனவிளம்பினேனே. (௮௪)

கோட்டுகரிமுகத்தோனைப்பெற்றோன்விந்து குடித்தநாற்பதகரங்கள்முடநங்கிவீங்கில்- வீட்டில்நெருப்பதைப்பிரித்துச்சாலில்ஊட்டிவிடுமிதில்நீரிருதூணிமூன்றிலொன்று மூட்டியதின்மேலிருத்திச்செறுக வாங்கி- முன்மருந்தின்சிந்தூரமுணர்ந்துகொள்ள பூட்டிபெருநோய்களெல்லாங்கடலேபுக்கும் - போகமிதுவுண்மையாய்ப்பொருந்திடாயே.

## பாஷாணவைப்பு.

துய்யவெள்ளைப்பாஷாணம்பலந்தான்ரண்டு துணிந்ததனைமொங்கையிலிட்டெருக்கம்- பெய்யுமதைமொங்கைமேல்மொங்கைமூடிபிலக்கமண்சீலைசெய்து அடுப்பிலிட்டு- நையவெரிசிலுசிலுப்புஅடங்கிவிட்டால் நலமாகயிறக்கிவைவாங்கியிட்டு- பையவிடுபணவெடைதான்மூலக்கிராணி பறக்குமேசுரமெல்லாம்பதிவாய்த்தானே. (௮௫)

## சூலைவாதத்துக்கு.

காயமுடன்கெந்தியுப்புகழஞ்சுசுக்குகடுகுரோகணிஅஞ்சுசமனாய்ச் சூட்டி- வாயில்பெருமுருங்கையின்தோல்சாற்றாலாட்டி வள்ம்பெறவேகாசிஎனடையுண்டைசெய்து, நோய்களுக்கனுபானவிதத்திறகொள்ள நுவல்குஷ்டரோகமுதற்சூலைவாயு, தாயமுளவேசிமயல்கொண்டோன்பாவி தன்மைபோல்வாதமையஞ்சரியுந்தானே. (௮௬)

## மதுவின்குணம்.

சுடுதண்ணீர் நீரைவிட்டால்நஞ்சதாகுஞ் சுருக்கானகள்ளதனிற்றண்ணீர்விட்டால்- படுவான்தான்மிகப்போதைபட்டுக்கெட்டுப்பாழுறைந்தபாவனையாய்மானிடர்க்கு- இடுகாதேதட்டியுண்டால்மானிடர்க்கு இன்பாசவாதமாம்புத்திஞானம்-நடுவாகத்தோனுமதுசுழியிலேறும்நாதாந்தயாக்கோபுநலஞ்சொன்னாரே. (௮௭)

உள்ளியதுஒருநூண்டுகுடைந்துவுள்ளேஉண்ணஅபினிலந்தை விளைப்பிரமாணந்தான்-தள்ளிவிட்டுமூடிபின்னுமிநெருப்பில்தனையதனையிட்டவித்துப்பதத்திலேதான் -சள்ளையில்லாதனையெடுத்துத்திரிநாளுண்ணச் சண்டாளக்கிராணியெல்லாங்கடலேபுக்கும் - கொள்ளவிதிலவாயுவறுங்குணமாநல்ல குருவைவினைந்தண்டுவிட்டுக்குடிலம்போமே

எல்லிகொல்லிதேவிமிருதாரசிங்கி இயல்பான கவுரிதுரகதமும்மஞ்சும் வலியவெடுசினைச்சுண்ணும்புதன்னை வலுக்கவனைகவசமிட்டுக்கதிரில்வைத்துகிலிவ மறச்சட்டிதகிற்பாதிமட்டுங்கிளிஞ்சில்நீர்விட்டு அதின்மேலேயுண்டைபெலியுடனேவைத்தபின்புசுண்ணமூடிப் பிரியமூடநிருசாமமெரித்துக்கொள்ளே. (அகூ)

எரித்தெடுநீகனலாற்றிப்பிரித்துப்பாருஇனமாகப்பின்பந்தக்கவசமிட்டு வரித்துமுன்போல்மூடியெரிபுகையடங்கு மலிவாகஇப்படிக்கு அடங்குமட்டும் குறித்தகடுக்கட்டாகுங் கட்டுதன்னைக் குழிக்கல்வமிட்டுசுன்னநீர்விட்டாட்டி பரிதநில்வைத்துமுன்போலெரிக்கச்சுன்னம் பாதையிதில்யாக்கோபுபயன்சொன்னாரே. (கூ௰)

சுன்னமதாம்பாஷாணமெனைட்போகாது சூட்சமூடனெடுத்துப் பொன்பணமவ்வீதம் நன்னயமாய்க்கொடுத்தெட்டுநாளில்நன்றாய்நன்மைதுணியாவிநிலேநசலுமேகும் குன்மமெட்டும்வாதபித்தங்கடலேபுக்குங்குஷ்டநோய்சிலேற்பனங்கள்குணமதாகும் சென்மமுள்ளமட்டுக்கும்நசல்வாராது சித்திபெற்றயாக்கோபுசெப்பினாரே. (கூக)

காச்சலஞ்சுபொட்டலையும்பலமீனாஞ்சுகண்டுயெடுவெங்காரிஅயமஞ்சாகும் மாய்த்துஇடிபொடியாக்கிக்கடத்திலிட்டு மருகவதின்மேல் வாலைகவிழத்துச்சீலை வாச்சபடிசெய்தடுப்பில்வைத்துப்பின்பு வகைநிமூல்போலெரியிடவே முன்னாவெள்ளைஓச்சதுவைத்தள்ளியெடுநீர் வேறே யுறுதிபிடிவைத்துப்பின்கடுநீர்வாங்கே. (கூஉ)

கடுமையுள்ளநீர்பிடிக்கப் ரசப்புநீராம் கண்டுஒருசேர்நிறுத்துகறிட்பீங்கானில்,அடிமைபட விட்டுரசம்நாலிலொன்றுஅனல்கிளம்பும்புகையெழும்புமேலேபீங்கா நினைவுடனேகவிழ்த்தெடுநீ யகலப்பீங்கா நிட்டதிலன வத்திடவேநீர்கள்வீழும் படுமுன்னேசரக்கெல்லாம்வெந்துநீறும் பதிவாகயாக்கோபுபயின்றவாறே. -கூங

## துருசு சுன்னம்.

நீலனொருபலமெடுத்து முன்னீரில்தோய்த்து நிழலிலிட்டுக்கதிரவன்முன்நிட்டுஎட்டு காலமதிலிட்டுநாள்வைத்துப்பாரு கடுமையுள்ள பொங்கியது நீறுமாகும் வேலையிநிகிளிஞ்சில் நீர்நாலிலொன்றுவீரமது சேர்த்தரைத்து துரிசின்மேலேகோலமிக அங்கியிட்டுப்புடத்தைப் போடக்கொடுஞ்சுருக்குதுரியதுநீறுமாமே. -கூச-

நல்லாகநீறின துப்பணமவ்வீதம் நாடியெடுவிராலியிலை தங்கி விட்டு மேலாகப்பிழிந்துவிடுநீகள்வீழும் மேன்மைபேறஅயக்காண்டி தங்கி விட்டு வெல்லவேயரசன்பீசம்விட்டுக்காச்சமேன்மைபெறக்கட்டியது மணிபோலாகும் செல்லவொருசாரணைதான் நீர்தாயாநால்திடமாகுங் கெவுனவழியோடலாமே. கூரு·

உருகிளதுகூதமதுநாலிலொன்றுஉருக்கிமெள்ளக்குகைமிலிட்டுத்தங்கத்தாயை, பருகவேகூட்டவிட்டுஉருகும்போதுபாச்சிடுநீலமமிடைநாகந்தன்னே, சருகவேயுருக்கியெடுகல்வமிட்டுச் சாரணமிட்டுதுஎிபுடமுமூன்று, கருகவேபோட்டிவது முருக்கம்பூவாம் காட்டிடவேநவலோகமேமமாமே. (௬௬)

சிவந்ததொருசேரெடுத்து அகலிலிட்டுச் சிறக்கமெள்ளக் கரியில்வைத்துஞானத்தாலே, நவம்படவேயூதியெடு சுண்ணநேரோ நல்லதிருவாழ்மடந்தைகல்வத்திட்டு, தவம்படவேயரைத்து அன்னம்சாமநாலுதக்கமாய்க்காயவைத்துப்புடமூன்றிட்டு, பவும்படவேயெடுகொக்குமிறமதாகும் பரிவானயாக்கோபுபகர்ந்தார்தாமே. (௬௭)

அடுத்துஎடுபணவீதந்தேனிற்கொள்ள அருள்பெருகுங்காசசயமேகமெல்லாம், தொடுத்துவிடும்வலிவாயுசூலமேகுந் துன்பமிலேசிலேற்பனங்கள்தொண்ணூற்ருறும், படுத்துவிடும்வாய்வெல்லாங்கடலேபுக்கும் பரிதிகண்டபனிபோலேபறந்துபோகும், கொடுத்துஎடுசெயமாகும் யாக்கோபுசொன்னர் கூறிஞரிதன்பெருமைகூறெணுதே. (௬௮)

மண்டூரந்தனையெடுத்துக்கலயத்திட்டு வாகுபெறமூடியதை மண்ணுசெய்து, தொண்டுபடப்பூப்புடமாய்ப்புதைத்துநன்ருய்த்துன்பமறவொருமாதமானுல்நல்ல, கண்டுளெடுமானிடர்க்குக்கொடுத்துப்பாரு கருதியிடுநசலெல்லாங்கடலேபுக்கும், பண்டுபடவுடனரைத்துஉடனேயுண்டால்படியாதுயாக்கோபுபயின்ருர்தானே. (௬௯)

## உண்ணும்விபரம்.

கடுஞ்சுன்னமூதியதைப்பிங்கானிலிட்டுக் கதிர்பனியில்நாளேந்துவைத்தெடுத்தால், படுமேவிகந்தண்ணீந்துவிடுமெடுத்துவுண்ண பதிவானநசலெல்லாம்பதிவிட்டோடும், கொடுமையாயூதியுடன்கொடுத்தாயானுல் கொடுஞ்சுறுக்கில்நாவுதடும் வெந்துபோகும், கடுமைபடக்கொடுக்காதேயென்றுசொன்னர் கருத்துறவேயாக்கோபுகருதினரோ. (௭௰)

ரசபதங்கந்தனையெடுத்து உடனேயுண்டால் நவின்றுகுடல்வெந்துவிடுநசல்போகாது, நிசமாகரசபற்பந்தனையெடுத்துநீலியர்ககல்வமிட்டுமூலைப்பாலாலே, ரசமாளவரைத்துகதிரொருநாளிட்டு நலமாகவுண்டிடவேநசலுந்தீரும், பிசகாதுஇம்மொழிகள்பொய்போகாதுபுகலரியயாக்கோபுபேசினரோ. (௭௰௧)

வன்னிபற்பந்தனையெடுத்து எட்டிலொன்று வண்மைபெறப்புகைநீரவிட்டரைத்து, நன்மைபெறவுபயநாள்வைத்தேயுண்ணநலமா

கும் நசலெல்லாநாடாதோடும்,சொன்னபடிபேதிசிற்குன்மையந்தன்னைத் துறந்துவிடுமிபபொருளுநிசமதாகும்,கன்னலருமேகங்கள்வாயுபோகு ங் கனிந்துரைத்தார்யாக்கோபுகருணைதானே. (௨௨௨)

அப்பிரகம் பலமிடைசேர்வீரந்தன்னை அரைத்து இடுபொணியா லொருநாள்தானும், செப்பிவிடுபெரும்புடமாய்ப்போட்டெடுத்துச் சிற க்கவெடுமறுபடியும் அரைத்துப்போடு, முப்புரத்தையெரித்தாப்போல் நீறுமாகும் முனைந்தெடுநீயரிதாரநாலிலொன்று முப்பதரையிப்படியே புடநாலிட்டால் முருக்கம்பூப்போலாகு மொழியலாமே. (௨௨௩)

முருக்கம்பூப்போலசிறச்செந்தூரததை முனைபெருக்கப்பணவெ ண்டைதான்தேனிலுண்ண, அருக்கனிறம்போலாகுமேனிதானும் அலைந் துவிடும் நீரழிவுமேகமெல்லாம், பருக்கள்றுஞ்சிலேற்பனங்கள் பதரி யோடும் பகலவனைக்கண்ட பனிபோலாநோய்கள் திருக்கைவேல்சைப் பாணைப்போலாமிந்தத் திடமான அவிழ்தமிதுசெய்துபாரே. (௨௨௪)

பரிவங்கசிந்தூரம்:

நல்லதங்கமோரெடையாங்காரிநேரா நாகமதுகாரியெடைகுகைபி லிட்டு, மெள்ள அதைஉருக்கியுடைகல்வத்திட்டுமேதினியிற்கற்றூழஞ் சோற்றுலாடி, சொல்லரியவில்லைபண்ணிக்கதிரில்வைத்து, சூட்சமாய் மாளமட்டும்புடமுமிட்டு வல்லமையாயெடுத்துப்பார்தவளம்போலாம், வண்மையுள்ளயாக்கோபுவசனித்தாரே. (௨௨௫)

தாளகசிந்தூரம்.

உருக்கிமகிலரிதாரமழுட்டிவிட்டு உறுதிபெற்றஅசம்நீரால்சுருக்கு ச்சாமம்; குறித்திடுநீயெடுத்துசிறுநாலிலொன்று கூட்டிடுவாய்சிந்தூர ங்கல்வமிட்டு,முருக்கஅரை அன்னத்தால்வில்லைகட்டி மூவுலகமெச்சக திர்காயவைத்து,விரித்திடுநீபெரியபுடம்போட்டுமூன்று விதமாகயாக் கோபுசொன்னவாறே. (௨௨௬)

போட்டெடுக்கச்சிந்தூரம்பவளம்போலாம் போரான ரவிநூற்றி லொன்றுதாக்க, நீட்டுமுன்னேஏழுமாம்பணமவ்விதம்நோகமண்டல முழுண்ணநீயும், வாட்டுமுதல்நோயெல்லாந்தவிடுபோலாம்வகைவகை யாய்நரைதிரைகளற்றுப்போகும்,கேட்டவுடன் தண்டனிடும்யாக்கோபு சொன்னார் கிருபைவைத்துச்சிந்தூரம்பண்ணியுண்ணே. (௨௨௭)

இந்தநூலெழுநூறுருமிதைக்குறுக்கி இதமாகமுன்னூருயியம் பினேனாமுந்தவேயாயிரமாமூன்றுநாலு,முனிதேவர் நூல்பார்த்துசோ தித்தேரி சிந்தைதனிலுறைந்துநசல்தீரவேண்டிச்-செப்பினேன்வாதவ

யித்தியமூனன்றாய் எந்தநிட நூல்பார்த்துப்பண்டிதமுஞ்செய்தாலிதமா
ன நசலெல்லாமேகுந்தானே. (௱௮)

## லிங்கபதங்கு.

சாதிலிங்கம்பலமெடுத்துக்கல்வத்திட்டு சத்தையுடையிதில்நேரா
ம் காரிநாகம், வீதியம்நாலுருக்கியுடைவன்னிதன்னி லுய்த்துவிடு அன்
னத்தாலனாத்துவில்லை சோதிகதிர், காயவைத்துக்கிடத்திவிட்டுச்சுரு
திபெறமுடிமண்சீலைசெய்து, மோதியதீதமலம்போல் முச்சாமந்தான்
முநிவாகயாக்கோபுமொழிந்தவாறே. (௱௯)

எரிக்காசமேலேறும் காண்டிவாங்கி இனிதாகஅடியில்நின்றவில்
லையோடே-செரிக்கஅனாமுந்நீராலொருநாவிரட்டிசித்திபெறமுன்போ
லே எரித்துவாங்கி, முரிக்கஇப்படியைந்துவிசையெரிக்க மூவுலகுமெ
ச்சவதுசிவந்துபோகும், அரிக்குநிகராகுமதுனைகபாகந்தான் அடைவா
கயாக்கோபுஅறைந்தவாறே. (௱௰)

துய்யானேழ்துரிசினுட செம்புமூன்று தூக்கிரண்டு முருங்கையி
லேகுருவொன்றீய. மெய்பாகக்கறுப்பாகுமேமஞ்சேர்த்து மிகவூது
ரண்டிட்டதான் தங்கமாகும் - கைசாரவிற்றுமேசெலவுசெய்து கந்தி
ரிதான்செய்துமேகருதியுண்ணு - பொய்யல்லபாகமதைக்கண்டாயானா
ல் பொருள்பெருகும்யாக்கோபுபேசினாரே. (௱௰௧)

## மந்தாரகாசத்திற்கு.

சீறுகின்றமந்தாரகாசத்துக்கு சூட்சமாய்மருந்தொன்றுசொல்லக்
கேளு- நாறுகினும்அந்திகுட்டாமருந்துவாங்கி நல்லதந்திதோல்போக்கிவ
றுத்துஒன்று பாருலகிற்பழச்சாறு விட்டனாத்துப்பதிசுண்டைக்காயு
ளவு புண்ணவாந்தி, சோருமெனப்பேதியாமோருஞ்சோறு சூட்சமா
யுண்டிடவேதொலையுந்தானே; (௱௰௨)

பதங்கத்தைச்சிந்தூரம்பண்ணநல்லபதிவாகுநசலெல்லாம்கடலே
புக்கும்- நிதமுண்ணக்காயசித்திநிலைக்கும்பாரு நிச்சயமாய்நனாதினை
களற்றுப்போகும்- மதம்பிடிக்கும்வலையில்நின்றுஉலையவேண்டா மாய்
கையதுசுற்றினால்-வறுத்துக்கொல்லும் விதங்களினிவீரசிந்தூரஞ்சொ
ல்ல, வீற்றிருந்துயாக்கோபுவிளம்பினாரே. (௱௰௩)

## அயவீரசிந்தூரம்

புகைநீனாஅரப்பொடியில் ஊற்றநன்றாய்ப்பொங்கியதுபுகையும
தைக்கல்வத்திட்டு- துகைபாகவீரங்காலிட்டனாத்துதுக்கியெடுவில்லை
கதிர்காயவைந்து நகைமகிழலோட்டிவிட்டுப்புடமுமிட்டு நாடியெடுபெரி

தாகமுருக்கம்பூவாம்- பகையில்லாமுன்வீரபதங்கந்தன்னைப்பரச்சுயிடு
இடைநேராம்கல்வத்தாட்டே. (௱௰௪)

ஆட்டுகையால்பாணியினுற்சாமந்தானும் அதைக்கதிரில்காயவை
த்துக்குடுக்கைதன்னில் - கூட்டியிடையில்வீரசிந்தூரத்தைக் கொடுக்க
262 ஒருமண்டலத்திற்குணாநோய்குஷ்டம்- தாட்டிகமாய்மூலமுதற்கிராணி
வெட்டை தனுர்வாதம்பித்தவெட்டை அண்டவாதம் மூட்டியறுஞ்சோ
கைமுதற்போகுமென்றார்- முத்திபெற்றயாக்கோபுமொழிந்தவாறே.()

சூதகவாயுவுக்குஎண்ணை.

கர்ப்பூரவள்ளிச்சார்வெங்காயச்சார் கண்ட திருநாழியினோர் முத்தி
னெண்ணை- மெய்ப்பானசீரகமுமீர்வகைக்குவெதுப்பிடித்துஎண்ணை
263 தனில்விடுத்து ஆக்கி- ஒப்பாகஎட்டுநாளுண்டாயானால் உறுமூலவரிசை
கடுப்புசீதரத்தம்- தப்பாமல்நிற்குமிதைச்செரிக்கக்கொண்டால் சாந்த
மாம் சூதவாயுதரியாதங்கே. (௱௰௫)

சீந்தில்எண்ணை.

சீந்தில்வேர் பலம்பத்துகாணைகொண்டு சிறந்தபழச்சாறனா நல்
லெண்ணெய்நாழி- காந்தியிடாதேயினையிறக்கும்போது காசுகட்டி பல
264 மொன்றுபொடிதூவிப்போட்டு- பாந்தமுடன்கலணைகொண்டுகரண்டி
யெண்ணெய் பத்துநாள்கொண்டுபத்யம்உப்பில்லாமல்- ஈந்திடவுமாறு
தகிரந்திபுண்களிருந்தவிடந்தெரியாமலேகுந்தானே. (௱௰௬)

ஞானிஎண்ணெய்.

குக்குடத்தின்முட்டையிட்டகோழியொன்றுகுணமாகச்சிகைபி
265 டிங்கிக்குடலைப்போக்கி - இக்கிடவேபுரவிலிட்டுக்காயஞ்சுக்கு இதமா
னபறங்கிபட்டையுள்ளியிடைதான் - தக்கிடவேவகைக்கொன்றுகால
தாகத் தாட்டிகமாயிட்டிடித்துமூடாவிலிட்டுசிக்கெனவேபாணிபடிப
த்தேயிட்டு செயம்பெறவேயெட்டொன்றாய்க்காச்சிடாயே. (௱௰௭)

காச்சியேநிம்பெண்ணெய்யெடைதானிட்டு கனமாகநீற்சண்ணம்
எரித்தயெண்ணெய்தாக்கிடவேயொருகரண்டியெட்டுநாளில்தடைபட்
266 டவாதமெல்லாங்கடலேபுக்கும்,பாக்கிடவேகுலைபதினெட்டும்போகும்
பகல்கண்டபனிபோலேபறந்துபோகும்-வாக்கிட்டுச்சொல்லுநீவயித்தி
யத்தை வடிவாகச்செய்திடவேவடிவமாமே. (௱௰௮)

### பயித்தியபித்தவெட்டைக்குகாலி.

கலியானரஸ்தாளியிருபதாகும் காராவினெய்படிபாய்ச்சர்க்கரை யுஞ்சேரு, இனிதானசிரகமும்பலமோரொட்டு இடித்தந்தசூரணமுங்க லந்தேயாக்கி, தினந்தோறுமிருநேரங்கொண்டாயானால்தீர்க்கமானீரெரி ப்புபித்தவெட்டை-கன மானபயித்தியத்தின்விகாரம்போகும் கைபாக மாகவேசாதிப்போர்க்கே. (௱௨௰) 268

### இசிவுக்கு.

உள்ளியுடன்மிளகுசுக்குகல்லுப்போடு இருநூறுவெற்றிலையின் காம்புங்கூட்டி, கள்ளியின்சார்விட்டரைத்துச்சாந்துசிம்பகாயளவுஇரு நேரமைநதுநாளுமகொள்ளுமிதையிருபுறமுமிழுத்துக்கொண்டுகுத்த லிட்டுஅடிவயிறுஅண்டம்வீங்கில் உள்ளுருகல்வலிவீக்கம்வாங்குமென் று முன்னவர்கள்சொன்னதுண்மைமொழியிதாமே. (௱௨௧) 282

### அண்டவாதத்துக்கு.

அதிமதுரஞ்சண்பகப்பூசெச்சைவேரு அதின்கொழுந்து அதின் ப்ருப்புகோஷ்டமேலம், பதிலவங்கமுடக்கறுத்தான்கொழுந்துபட்டை படியிதுகள்காசெடைதான்தேங்காய்ப்பாலில், மெதுவுபடஅரைத்திதனைக்களிம்பதாக்கி மென்றுஇஞ்சிதின்னயிருநேரமஞ்சு, விதமிடவேமண்டலத்தில்வாதம்போக்கும் மெய்யிதுண்மைமூத்தவர்சொல் வீண் போகாதே. (௱௨௨) 283

கல்லுப்புஇந்துப்புமிளகுசேரு கடுகுசவர்க்காரம்வெங்காரம்காயம் நல்ல அரப்பொடிகடுகுரோகணியும்நாகங்கனையும் பலமொன்றுநாலத் தொன்று செல்லுமினிமாவிலிங்கப்பட்டைகூட்டிச்- சூரணித்துநாரத் தங்காய்க்குள்ளேயிட்டு தெள்ளிநவபாண்டத்தில்சதுரக்கள்ளி-துணித் திட்டுவெள்ளாட்டின்சலத்தைவாரோ. (௱௨௩) 284

சலமதிலேவார்த்திட்டுவேடுகட்டிச் சாக்கிட்டுக்காயவைத்துச் ச ட்டிமூடி-நலமெதுவாயிருசாமமெரித்துவாங்கி நார்த்தங்காய்க்குள்வை த்துச்சாக்கிற்பாதி - பலமதுவாய்ப் பகிரண்டு பாகந்தன்னைப்பருபாக் கிக்காய்மருந்தைவரைத்தொன்றாக்கி- உலரவைத்துட்கொள்ளஅண்ட வாதம் ஓடிவிடும்யாக்கோபுஉண்மைதானே. (௱௨௪) 285

அஞ்சென்ணெய்நாழிபடிமணித்தக்காளி அதன்சாறுபடிகலந்து அனலமேலிட்டு- விஞ்சுமதில்மரமஞ்சள்கரப்பன்பட்ட ட வீரனாயாம் 286
பலமிடித்துத்து விக்காச்சி-நஞ்சுதொலும்பகத்தியுள்ளிபடியாமிட்டுநல

மாகவனைதயுருக்கிச் சிவந்தபின்னுண்ண- மிஞ்சிவிடுபிசஅடவாத சூலை மெய்ளயவிட்டகலுமெனவிளம்புவாயே. (௱௨௫)

அண்டவாதம்-அந்தரவெட்டு.

விளக்கெண்ணெய்படியொன்றுசாட்டரணைச்சாறு விடுமதிலேப் டிரண்டுகலந்துகாச்சி-வளப்பமுளபெருங்காயம்பலமோரணடுவௗமாக
287 யிந்துப்புபலம்பொடித்துத்து வி-சளத்தையிலாப்பதம்பார்த்துவடித்து க்கொண்டு சண்டியந்த்ரவட்டுஅண்டவாதசூலை - உளத்தியிடுங்குடல் வாதவலியுந்தீருமுண்மைபிதுவாகடத்திலுனைத்ததாமே. (௱௨௬)

முடக்கறுத்தான்வேர்ப்பட்டைமிளகுபூண்டு மூந்துவிளக்கெண்
288 ணெய்தனிலாக்கிக்கொண்டால்- இடைக்குத்தாழ்விளைவாதமகலுமின் ன மியம்பக்கேள்நுணுவின துவேருலர்த்தி- மடக்கித்தான்சூரணித்து க்கொண்டேயுண்ண வளர்கையாந்தகனைசெருப்படியின்சாற்றில்- கொடுக்கத்தான்முன்சூலாணங்கழஞ்சுகொண்டு கொடுஞ்சூலைவினாவாத க்குணமதாமே. (௱௨௭)

புங்கம்விளைகழற்பருப்புஈச்சங்கொட்டை பொடிசெய்துபுளிமா
289 த்தின்புராணிசுட்டு- அங்கிதனைச்சட்டியிலேயெடுத்துக்கொஞ்சம்அதி லீடுமுன்சூரணத்தைப்புகைபவீச-தங்குகின்றஅண்டத்திற்பிடித்தா யானல் தளர்ந்திடுமேஅண்டத்தின்வீக்கம்வாடி- தொங்கலிடும்வலிநீங் கிமூன்றுநாளில் துலைந்திடுமேவினாவாதஞ்சூட்டிப்பாரோ. (௱௨௮)

சேரான்றன்கொட்டைபலமஞ்சள்கூட்டிச் செழிப்புடனேயிடித்
290 துத்தேன்மெழுகுநேராய் - வாராகக்கூட்டியிடிமெழுகுபோலாம்வகை யாகக்கூட்டிடவேஅண்டவாயு - வீரமுள்ளகட்டிக்கால்பிடிட்புநீங்கும் விதமானவிக்கமுடன்முழங்கால்கட்டி-பாரமுள திரிநாளில்தீர்ந்துபோ கும் பரிதிகண்டபனிபோலேபறக்குந்தானே. (௱௨௯)

பூவழுக்குவாங்க.

சுன்னமிட்டுப்பூவழுக்குவாங்கக்கேளு சுத்தமுடன்பாணிவிட்டு
291 க்கனைத்திறுத்து - நன்னயமாய்த்தெளிவாகக்காச்சவுப்பாம் நாரியர்க்கு மாதவிடாய்கண்டபோது- இன்னிலத்தில்நீக்கட்டுமலபேதத்தா விரு ந்தாக்காலிதையுண்ணத்தீர்ந்துபோகும்- கன்னல்மொழியுனமயாள்தா ன்சொன்னநேர்மை காசினியில்வயித்தியத்தைக்கண்டுபாரோ. (௱௩௰)

காந்தசெம்புசிந்தூரம்.

292 காம்பிரமங்காந்தமதைப்பொடியதாக்கிச் சமன்செய்துவாய்குவி ந்தகலசத்தேற்றி- நீம்பழச்சாற்றனை நிதக்கவிட்டுநீதான் நீக்கமில்லாச்

சில்லிட்டுச்சிலைசெய்து- மேம்பட்டநெல்லிருகலத்தில்நடுவேவைத்து மே
த்திட்டுச்சாலுக்குள்நிழலுள்வைத்து - போம்படியேமண்டலம் பின்
னெடுத்துப்பார்க்கப்புட்டுபோல்சிந்துரம்பூப்போலாமே. (௩௯௧)

ஆமிதனைப்பொடித்துநன்றாய்ப்பதனஞ்செய்து அனுபானவிதத்
தினிலேயீந்தாயானால்- போம்வினைகளற்றுவிடும்வாதசூலை பொல்லாத
குன்மமெட்டும்வயிற்றுநோயும்- தீனமயுறுபிஜம்தனுவாதவீக்கம் செ
ருக்குடனே வாதமெல்லாந்தீர்ந்துபோகும் - மாமுனிவரொடுத்துவைத்
தசிந்துரத்தை வழுத்தினார்யாக்கோபுவைத்துப்பாரே. (௩௯௨)

அண்டவாயுவுக்கு.

கொடிவேலிமுருங்கையமமன்கூர்தல்வேர்த்தோல் கூறுபலம்கழ
ல்புங்கின்வித்துதானும்- இடிமிருநால்பலங்கருங்கொள்தினையிராழிஇவ்
வகைகள்சூரணித்துஎண்பங்கார்க்கிதடித்துபுளிப்பழமோருநாழிதன்னி
ல்தறித்ததொருபஸ்ககிட்டுக்கூழாய்க்காச்சி-அடவாகஎட்டுநாள்கொண்
டாயானால் அண்டத்தின்வாயுவலிவாங்கிப்போமே. (௩௯௩)

போமிதற்குவீக்கத்தின்மேற்பூச்சுசேரு புகழ்நிம்பப்பழச்சாற்றி
ற்சுக்கையிட்டு- காமையின்கீழண்டத்திற்பூசியேதான் காச்சமிருககடுப்
புவலிசாமமரண்டில்- தீமையிலாவலிவீக்கம்வற்றிவாடித்திறப்படுமேமு
ன்போலத்திரும்பிவாரு- நாமிதுவேகண்டடிபொய்யாதுண்மை நாட்டி
லேயெவர்க்குமிதைநவிலொண்ணாதே. (௩௯௪)

முற்றியதோர்பால்நிறைந்தசேராங்கொட்டை முனையகற்றித்தாக்
கிரண்டுநறுக்கிச்சாலில் - எத்தியநீர்கலம்விட்டுநாலிலொன்றாயிறக்கிட்
டுக்காச்சியதைவடித்துக்கொண்டு மத்திநீர்விட்டுமுன்போல்காச்சிப்பி
ன்னும் வடியதனைப்பாண்டத்திலொட்டிநின்றசுத்தியதோர்தைலமெல்
லாங்கரண்டியாலே சுரண்டிமுன்கியாழத்திற்கலக்கிச்சேரோ. (௩௯௫)

சேரதனிற்பழுத்தநெல்லிக்காயின்சாறு சேர்த்துவிடும்படி யெட்டு
கூவிளத்தின்சாறு-வேரதன்தோல் துக்கிரண்டுநறுக்கிடித்துவகைவிட்
டுக்கியாழமிருமரககால்ரண்டில்- நூறுபலம்பழையவெல்லமகளைத்தக
கூட்டி நுணுக்கமாயெரியிட்டுப்பாகாய்க்காச்சி-கார்போகமவாலுழுவை
காடடுச்சிரம் கருஞ்சீரமோமம்குருசாதிதானே. (௩௯௬)

சாதியுடன்திரிகடுகுபலையுமூன்று தாணியடாதுய்யுமஞ்சக்கிழங்கு
தானும்- கானகசீர்புங்கமவிழிப்பட்டைடதானும்காய்ந்தவகைபலமொழ
பாதியான-திறமாகச்சூரணித்துப்பாகில்தூவி ஊனமிலாச்சுரபிமெய்ப
டிதான்ரண்டு- உருக்கிப்பிட்டுக்கிளரியிதைக்கலயத்தேற்றே. (௩௯௭)

ஏற்றியிதைச்சுபதினத்தில்பலங்காலுண்டு இருநேரமண்டலந்தா ன்புளிநல்லெண்ணெய்மாற்றிவிடு ஆறுதவிரணமேகம்வாதமொடுகுலே பதினெண்சொரிசிரங்கு- ஆற்றிவிடுங்கடிவிஷங்கள்குஷ்டமோடு ஆறு தனைக்கறுத்தல்மேகவூறல்-பூத்துதடித்திமிராகிவெடித்ததெல்லாம் போ க்கிவைக்குமாந்தளிர்போல்மெய்யாமுண்ணே. -ாஙஅ-

உண்ணவொருமண்டலத்திற்கடிகள்தீரும் ஊரல்பெருமேகவித லூன்கள்புற்றுபுண்ணிதுகள்மண்டமூமிரண்டில்நீங்கிப் போய்விடுமே குஷ்டங்களரண்டிற்பாதி- திண்ணவிதில்நாகமொடுலோகங்கூட்டித்தீ ர்ந்துவிடுஞ் சீக்கிரமாய்த்தானுஞ்சூதம் நண்ணுதன்பழமுமேகூடிற்று ஞல்நசலுடம்புதங்கமபோல்நன்மையாமே. -ாஙகூ-

## வெகுமூத்திரஎரிவுதாகத்துக்கு.

காற்பாசின்கொட்டையின்பால் குருணிகொண்டுகன்னல்பெரு ஞ்சர்க்கரையுஞ்சேருங்கூட்டி-நேர்ப்பாகவலையிட்டுப்பாகதாக்கி நெய்நா ழிநல்லெண்ணெய்நாழிரண்டு- சேர்ப்பாகமெழுகுபதமாக்கிக்கொண்டு தினங்காணடிகடுகெண்ணெய்தின்றுயானுல- தீர்ப்பாகும்வெகுமூத்தி ரஎரிவுதாக நிற்குமென முன்னோர்கள்நிகழத்தினுரோ. -ாசய-

## கல்லுப்புஎண்ணெய்வாங்க.

நாறும்பூக்கீசேயெடுத்துக்கல்வத்திட்டு நாட்டியனளனுமிச்சம்ப ழச்சாற்றுலே- கூறுபடஅரைத்துலர்த்திக்காணடியிட்டுக்குணமதனை க்கரிநெருப்பிலுருக்கிப்பாலில்-வேறுபடச்சாய்த்திடவேநாலும்ரணடும் விதமாகஅரைத்துருக்கிச்சாய்க்கஎண்ணெய்- ஊருவிட்டுக்குடிபோகு மென்றுசொன்னுர் உரைத்திட்டார்யாக்கோபுவுண்மைதானே. -ாசக-

துய்யமதிகழஞ்சிரணடுகார்ரிரண்டு துப்பாவாய்ருக்கியேஊதநல்ல மெய்யாகமாசற்றதுய்பானுகு- மேன்மைபெறத்தகடடித்து இடையே பூணவரையவேஅன்னமிட்டு- அடைத்துப்பூசி நலமாகஅவ்வெடைக்கு புடத்தைப்போடு வையகத்திலிப்படியேஐந்துபோட வகையானகரியா கும் வகையைக்கேளே. (ாசஉ)

## நொறுக்குவெள்ளி

கரியெடுத்துக்காரியோரிடையாய்க்கூட்டிகணக்காகவுருக்கூதுரசி தயாகும் பரிபோலேயோட்டிவிட்டுப்பழுக்கச்சுட்டால் பாகமாய்ப்பொ ன்போலேபழுக்குநேர்மை விரிவான இந்தவெள்ளிநயமதாகும்வேதை க்குப்புடத்துக்குநிலைக்குமென்று சரியாகயாக்கோபுஇதனைச்சொன்னு ர் சத்தியமாமிந்தமுறைதாக்கிப்பாரோ. -ாசரு-

அறுகுறுணிநீர்விட்டு நிம்பமூலியரிந்துமேபாண்டநிறை பாதியி ட்டு,இருபடியாய்க்காச்சியதையிறுத்துச்சாடி இன்பமாயபரன்பீஜம் பல முமிட்டு, குறுகயெரிவிளக்குபோல்குழம்பதாகக் கொட்டியேகல்வமி டு சாமமாட்டி, பருகவெடுமெழுகாகும் பணமேயிட்டால்பறக்குமேவா தமெல்லாமபண்புதானே. (௩௪௪)

## கண்டர்சுன்னம்.

உல்லாசமாய்க்கண்டர்பலமெடுத்து உறுதிபெறச்சட்டியினிற்கிளி ஞ்சிற்சுண்ணம், நல்லாகப்படிரண்டு இட்டமுக்கிநலமாகக்கண்டணாத் தானடுவில்வைத்து,சொல்லாகவதன்மேலேகிளிஞ்சில் நீற்றைச்சுகமா க்கொட்டியேஅடுப்பில்வைத்து, நல்லாகச்சாமரண்டு எரித்துப்பாரு நலமாகச்சுண்ணமாம்நாட்டுளோரே. (௩௪௫)

யெரித்தெடுதுரிச்சுதான்சுன்னமாகுமிதமான காரியம்பலமுநாலு கருத்திலுறஅயக்கரண்டிதன்னிலிட்டுக்கருணைபெறக்கரிநெருப்பிலுரு க்கிமேலே,வரித்துவிருவெடியுப்புப்பலமுமரண்டு வண்மைபெறவதன் மேலேபோட்டுக்கிண்டு, பொரித்துவிடுகுங்குமத்தினிறமதாகும்பேசரி வங்கத்தின்பெருமையாமே. (௩௪௬)

## வங்கம்.

பெருமையாம்பலம்நாலுகல்வத்திட்டுப் பிலமாகஅன்னமிட்டு அ ரைத்துவில்லை, அருமையாய்க்கதிரவன்முன்காயவைத்துஅருள்பெரு கமூன்றுபுடம்போடச்செப்பாம்கருநீலகண்டரொடை சேருஅன்னங்கவ சமிடுஅரைத்தெடுநீதாமேலே-தருமைபெறஎடைசரியாயங்கிகாய்ந்து தாஷ்டிகமாய்வெய்யோனில்வைத்திடாயே. (௩௪௭)

கல்லுப்புபலம்நிறுத்துக்கல்வமிட்டுங் காரணமாய்க்கிளிஞ்சில் சு ண்ணமிடையெடுத்து, நல்லேபடஅரைத்திடுநீமேனிநீரால் நலம்பெற வேமூன்றுண்டைமேலேகட்டி, செல்லொத்தகதிரவன்முன் காயப் போட்டுச்செழிப்பந்தப்பிறிதிவினயக்கவசங்கட்டி,சொல்லொத்தபுடம் போடமண்ணைநீக்கிச், சுகமாகவுள்மருந்துகளங்கமாமே. (௩௪௮)

நல்லாகயிப்படியேமூன்றுபோட்டு நாடியெடுரவியுருக்கி யெடை யேதாக்கு, சொல்லுமதுபொடியாகுமயனம்போலாம்சொகுசாக எடுத் து நிறுநாளிலொன்று, கொல்லுமதைபெழுப்பிந்தக்கறுப்பிகூட்டிகோ தையர்பால்விட்டரைத்துப்புடமூன்றிட்டு, வெல்லுமதுகுருவாகு மெ டுத்துப்பூசை விரும்பியிதையாக்கோபுவிளம்பினரோ. (௩௪௯)

அடுத்து நின்றுமதிநாலு இட்டுருக்கி அகமகிழக்குருநாண்டுகெரியில் வைத்து, நடுத்தரத்திலுருக்கியெடுகறுப்பதாகும்நலமிதுதானதைபூது மாற்றுபோலாம், கடுத்தெனவுமேமமதையிடையிலிட்டுக் கனகமதை யடித்துபுடமூன்றில், தங்கம்படுத்திடமாயிறங்கிரண்டுயிடைதானிற்கு ம் பாலித்தார்யாக்கோபுபழக்கத்தாலே. (௱௫௰)

அயச்செம்பு

இறவுடையவாதிகளுக்கிப்பாகத்தை யுண்மைசொல்லிநூல் கொடுத்து வுறுதிகாட்டு, திறமுடையசிந்தனையாய்நேசமாகுஞ் சிலவிடத தேபேசார்கள்ஞானந்தன்னை, குறவனைப்போல்பார்த்துமனஞ்செய்கை யாகுங் குடிலமதுசெய்யாமற்குருவைக்காப்பான், திறமில்லாவாதிகட் குச்சொல்லாதென்று செப்பினார்யாக்கோபுதிறமிதாமே. (௱௫௧)

இரும்பைவிட்டுச்செம்பையெடுமதியிற்றுக்கு இனிதாகப்புடமி றங்கும்வங்கமாட்டார்,நரும்பிலுள்ளளணணைதனைவாங்கச்செம்புநலமா கப்பழுத்துவிடுநயமுமாகும், துரும்பிலிடத்தூணுகுந்தோற்றமாகுந்து யரற்றுவளையற்றுத்துலங்கிநிற்கும், குரங்கைவிட்டமனமதனையிருத்தி க்கும்பி, குணமுடனேயாக்கோபுகூறினாரே. (௱௫௨)

நெடியோனின்விந்துசத்திதிரிபலாதி நோகுந்தந்திவிளாதிரிநோர் விட்டு, படியாகப்பாணியிடுஅணாநாளொன்று பயறளவுஒருவுண்டையி ஞ்சிச்சாறறில், குடிபோகஇட்டிடவேவாதபித்தங் குணமாகுந்துளசித ளிற்சுரமெல்லாமபோம், முடிதன்னிற்கங்கையைத்தான் தரித்தாசன் முழுதுமென்மேலாசைகொண்டுசொன்னவாறே. (௱௫௩)

காரீயஞ்சுத்தி.

கொள்ளதேகத்துக்குறுதியப்பா - கரிமுகனுக்குரியவனு முருகன்று
னும் காட்டினுரென்னுசானகத்திசர்க்கே ௯௱௪

என்னுசானகத்தியர்க்கு சொன்னவாறு எடுத்துரைத்தாரெங்க
ளுக்குபோககையெல்லாம- உன்னிதனேயின்றாலும் பொய்யாதையா
உலகினிலேமட்டிமாண்பர்காணப்போமோ- நன்னயமாய்வாய்ஞானம்
பேசியல்லோ நாடுவார்நூலதனைக்கேட்பாரையா- பன்னுவாயில்லையெ
ன்றுகருமிகட்கு பார்த்துகொடுதருமிகட்குதூல்காப்பமேர ௯௱௫

## பவளபற்பம்

காப்பாரேபவளபற்பஞ் சொல்லக்கேளு கண்மணியேவிண்மண்
யேகருக்காயப்பா-சீப்பாதேபவளமதுபலந்தான்கொண்டு சிற்பரனே
திம்பழத்தின்சாறுதன்னுல் - கோப்பியமாயூரவைத்துவைந்தானுவில்
கொற்றவனேதாவெடுத்துசொல்லக்கேளு - தீப்பானபதந்தெருவில்பு
டந்தான்போடு திகழானவெங்காயக்கிரைச்சாறே ௯௱௬

சாறேதான்விட்டரைத்துப் புடமேபோடு சாங்கமுடனபிரண்
டைச்சார்தன்னிலொன்று - வாறேதான்கையானில்சாறிலொன்றுதீவ

ளமையுடன்பசளையிலேயொன்றுபோடு- கூறேதான்யிதற்குசிகருண் டோவென்று கொடிதானகாசங்களெல்லாமோடும்-தேறேதானிப்போ க்குவெகுசுருக்கு தெளிவுள்ளாயுந்தனுககாய்ச்சொன்னேன்பாரே ()

கருடக்கல்பற்பம்

பாரடாகருடக்கல்பற்பங்கேளு பாங்கானகருடக்கல்சுட்டெடுத்து காரடாகிழ்க்காயைபறைத்துநன்றாய் கண்மணியேகலசித்துப் புடமே போடு - ஊரடாதிரியாதேபண்ணைக்கீரை வுத்தமனேசவசித்துப்புட மேபோடு - சாரடாவராழமூலியதனிலொன்று சார்பாகப்போட்டெடுத் தால்நீறிபபோமே ௬௱௮

படிகாரபற்பம்

போமடாயின்னமொருபோக்குசொல்வேன் பொன்மணியேநன் மணியேப்புகலக்கேண்மா - தாமடாபடிகாரம்பலமேகொண்டு தன் னையுள்ளநவசீக்கமேனுங்கிழும்- நாமடாகுடுவையிலேவைத்துப்பின்பு நலமாயபக்கெருவிப்புடந்தான்போடு- வாமடாபடிகாரபற்பமாச்சுவ ளமையுடனெடுத்ததனைப்பதனம்பண்ணே ௬௱௯

பலகரைபற்பம்

பண்ணவேபலகரையாமபற்பங்கேளு பாலகனேபலகரையைசிம் பழக்தில்- தண்ணவேயூரவைத்துவைந்தாகளில் தாமெடுத்துப்புடம தவேபோட்டபின்பு - திண்ணவேபழச்சாறுலாட்டியப்பா தீர்ககமு டன்புடம்போட்டுஎடுத்துமேதான் - நண்ணவேயாவின்பால்விட்டே யாட்டிநன்மைபெறபுடமபோட்டுயெடுத்துவையே ௬௱௰

பாஷாணக்கட்டு

வைத்துமேபாஷாணப் போக்குசொல்வேன் வையகத்தில்மறை வின்றிதிறவுகோற்போல் - கைத்தவமாய்ப்பாஷாணம் பலமேவாங்கி கழறுவேன்தேள்கொடுக்குசிறிபகாக- கைத்துமேசிறுமியென்றதேக் கிரேடு சாதகமாய்சார்பிழிந்துநாலுசாமம் இக்தனையாய்ச்சுருக்கிட்டு யெடுத்துப்பாருயென்னசொல்வேன்பாஷாணக்கட்டதாமே ௬௱௰௧

கட்டானகட்டதனைத்தாமபாத்தில்காட்டிவிடுபத்தாக்குவொன்று வீதம் - திட்டானதிட்டமசாயயிப்ங்கபின்பு தெளிவுள்ளாய்மதியது தானுறுக்கொன்று - சட்டூடன்றுன்சேர்த்துயெசித்துப்பாரு தார ணிபிலவெள்ளிவித்தைதயென்னசொல்வேன் - நட்டமதுவாராதுயிந்த ப்போக்கு நாயகனேகாட்டாதேகருவிட்டே ௬௱௰௨

குன்மத்திற்கு

காட்டாதேயாக்கோபு கூறுவேன்கேள் கண்மணியேவிண்மணி யேகழற்க்கேண்மா- தாட்டிகமாய்க்குன்மமென்றரோகமெல்லாம் த ளரவேசோத்துப்புயிங்துப்போடு - வாட்டமின்றிவளையலுப்புகரியுப் பையா வளமானபொட்லுப்புவசாரந்தான்-நாட்டமூடனுழமண்ணு சரக்கெல்லாந்தான் நாயகனேயரிடையாயரிழுத்திககொள்ளே ()

சொள்ளவேலிப் பழத்தின்சாற்றாலாட்டி கொற்றவனேபத்தெரு
விற்புடக்தான்போடு- தள்ளவேலைகையானின்சாறிலொன்று தகமையுட
ன்மேனிச்சாறதனிலொன்று - களமின்றிபிரண்டைச்சாறதனிலொ
ன்று கருத்தாகக்கெச்சக்காயகனிலொன்று - வள்ளல்லபுடம்போட்டு
யெடுத்துமைந்தா வாகாகத்தேன்விட்டிஆட்டிகேளே ௩௱௰௪

கேளடாமெழுகதுபோலுருட்டிமைந்தா கெடியானசுண்டக்காய்
வீதங்கொளள- நாளடாம்போககாதுபக்குகாலில் நாடாததுன்மமெய
றரோகமெல்லாம்- வாளடாயிம்மருந்துபோலேயுண்டோ வளமாவாம்
பமடாகுன்மத்துக்கு - பாலடாமெயஞானசொன்னமார்க்கம் பாரு
லகில்பொய்யாதுமெய்யதாமே ௩௱௰௫

மெய்யானயிருவிரலை வைத்துப்பார்பார் மேன்மையுள்ளாய் ஆத்
தாளின்கிருபைவேண்டும் - பொயயாதஞானமென்றமாகசமையா பு
ண்ணியனேநீபொருந்த யெல்லாஞ்சித்தி மையாதமாக்கருக்குவுப்பா
கையா நாடதனில்முனியாவாயசித்தனுமாய்- கைதவமாய் ஆத்தாளின்
றுளேவேண்டி கண்மணிமேய அங்கசங்கப்பூசைபண்ணே ௩௱௰௬

## வசியம்

பண்ணவேயின்னமொருவயணங்கேளு பண்பமனவசியமடாயெ
ன்னசொல்வேன் - திண்ணவேதிகைப்பூண்டிழல்வணங்கி தெளிவான
காய்வணங்கிகருக்கிக்கொண்டு- தண்ணவேகிழ்க்காயினெல்லிமூலம்தா
ன்கூடச்சேர்த்தல்லோகண்ணேசேரு- நண்ணவேயேரழிஞ்சிதயிலத்
தாலே நன்மைபெறகாணநைக்கமைம்பாலாமே ௩௱௰௭

ஆகுமேசிமிழ்தனிமேயடக்கம்பண்ணி அப்பனேமோகினியாள்
மந்திரத்தை - வாகுடனேவுருவேற்றுதானலட்சமோது வளம்பெருவாய
வளருனுமுனக்கேமெய்த்தம் - பாகுடனேமையதனைத்திலதம்போட்டு
பண்புள்ளாய்நீயேகமாதரெல்லாம் - நோகுதேயென்மனதுமாறனுலே
நொடிக்குள்ளேபணிந்திடுவாயென்பார்தானே ௩௱௰௮

என்பாரேயுன்னடியில்வருந்துவார்கள்என்மகனேயரசரெல்லாம
வணங்குவார்கள் - பொன்கேட்டாலீவார்கள்புகழுள்ளானே புணரா
தேமாதரைநீபுண்ணியவானே- சொன்னேனேமையினுடமகிமையப்
பா சுந்தரனைகண்டலலோவிண்ணில்சேரு- உன்னிதனேபொருமொ
ழியும்பொய்யாதப்பா வுற்றுப்பாருனக்குள்ளேயெலலாந்தானே ()

எல்லாந்தான்மாதரைநீ யிச்சித்தாக்கால் யென்சொல்வேன்மறு
பிறவியாய்க்குமப்பா- தொல்லைபதிற்சிக்கிடுவாய்மினோந்தாற்போல சுந்
தரனேயிந்திரனேசுகுணமாரா - சொல்லுதற்குநாவொண்ணுப்பிறவி
யாகும சொக்காதேயவள்மயத்திற்சிக்கிடாதே- நல்லவழிஞானமதைய
னுசரித்தால் நாயகனேபிறப்பிறப்புமற்றுபோச்சே ௩௨௰

## சித்தர்கள்மகிமைகூறல்,

போச்சப்பாயாக்கோபு சொன்னேனப்பா பொன்னவனேபொதி
கையிலேபோயிருந்தேன் - பாச்சலதுபாய்கின்றசித்தரெல்லாம் பட்ச

முடனெனேயழைத்துவாசிர்கூறி- பேச்சப்பாவுபதேசமெனக்களித்து
பேருலகில்சுகமாகவாழ்வாயென்று - காச்சலின்றிவரமளித்து கலகத்
கூடிசமூறுகிருர்காதுக்கணொன்ருய்த்தாவே ௬௨௧

ஒன்ருகச்சேர்ந்தல்லோ யேதுசொல்வார் ஓகோகோபிமயகிரிப்
போகவேண்டுமென்பார் - குன்ருனயிமயகிரியிருபத்தொன்று கொற்றவ
னேவரையுண்டுஆதான்போவார்- என்றல்லோகூறையிலேசித்தரெ
ல்லாம எழுந்தாரேபோகரிடமுன்னதாக - கன்ருனயிமயகிரியதனிற்
செல்லகடினமில்லையென்றேவருவீர்காணே ௬௨௨

வருவீர்களெனவுரைக்க போகர்தானும் வளமையுள்ளநாதாக்க
ளெழுந்தாரையா - தருமதுரைசித்தரெல்லாமெனையழைத்தார் தயங்
கினனெனப்படிநான்வருவேனென்று- ஒருகுளிகைகொவனமருந்ததா
ரையா ஓகோகோவாயதனிலடக்கம்பண்ணி - குருவியதுபறந்தாற்
போல்சித்தரோடு குறைவின்றியிமயகிரிவரைசென்றேனே ௬௨௩

கிரியானவரையதுதா னிருபத்தொன்றில் கிருஷணன்முதல்நவ
கோடிரிஷிகளெல்லாம் - உரிமையுடன்காவைத்தார்போகர்தானுமவு
ரைப்பதற்குநாவில்லைப்பாவுமில்லை- கரிகள்முதல்விலங்கினங்களெனுந்
துவெல்லாம் கணக்கிடவோமுடியாதுமகிமைதன்னை-சரித்தவயதாறே
ர்கள்பாலியராக சாகாமல்தானிருக்கமூலியுண்டே ௬௨௪

உண்டேதான்பிரமாவின்பதிதானங்கே வுத்தமனேகாலனுட்பதி
யுமங்கே - சண்டமாருதபபோன்றஅரக்கரங்கே சார்பானகைலேயங்கி
ரிதானங்கே - பண்டானசாத்திரத்தில்சொன்னதெல்லாம் பாலகனே
யங்குண்டுசிவகணங்கள்- கண்ணுனநாதாக்களருளினுலே கமறவென்
ருல்முடியாதுயென்னுல்தானே ௬௨௫

முடியாதுமுனிவருடமகிமைகூற மூன்னவனுஞ்சதாசிவனுர்பதி
தானப்பாபடியானவரையது தானிருபத்தொன்றில்பாங்குடனேதானி
ருந்தாருமையினேடு- அடிமையென்றுதாள் பணிந்தோமவரையையா
வருள்புரிந்தாரெங்களுக்குசாமபமூர்த்தி - கடினமதுயிமயகிரிவுயரங்
கூறகாணவென்ருல்போகாது நாலேததேடே ௬௨௬

நூலானபோகரேழாயிரத்தில் நுணுக்கமுடன் தானறிவாயமகி
மையெல்லாம - பாலானபால்குபோல்பாடிவைததார் பார்த்திபனேவ
ரையதுதானிருபத்தொன்றில்- சேலாகத்தானிருக்குமுளகையெல்லா
மச்சார்த்தொன்ருய்த்திரட்டிவைத்தார்நூலிலப்பா - மாலானமகாவிஷ்
ணுபள்ளிசொள்ளும் மகத்தானபெருங்கடலாம்போகர்நூலே ()

மகத்தானயிமயகிரிகடந்துமேகான் மன்னவனேகுளிகைகொண்
டுசித்தரோடு - சகமயககைப்பறந்தேதனேவடபாகத்தில் தற்பரனுடபுஜ
ஙடரிடியடவிசென்று - அகமகிழ்ந்து அவர்பதத்தைவேண்டிநேரு
ம ஆசபபாதங்களென்றுவினவினுர்டார்- மகததானவொதிக்கமலைசித்
தரென்று மாமுனிக்குகதானுரைககமகிழ்ந்திட்டாரே ௬௨௮

இட்டாரேயெங்களுக்குமாசிர்கூறி யிருங்களென் றுதானுரைக்க யாவெழுந்து- திட்டமுடன்சுற்றிவந்துதாள்பணிந்து சிவசிவாயென் றெழுந்துநின்றேனையா- பட்சமுடன்தாள்பணிந்துநின்றதென்ன பக ருவாய்ப்பாலகனேயென்புஜண்டர்- சட்டையதுபோக்காதபுஜண்டநா தா சாமிசீரெங்காளிக்கடைந்தீர்தானே ௫௨௯

தானனையென்குருவே யென்றுகேட்க சாற்றினார்பிரளயந்தான் னூறுகண்டேன், கேளுமையாக்கோபுசொல்லக்கேளு தெளிவுள்ளாய் ப்பரமசிவன்தானழைத்தார்- மானனமானேந்தியழைத்தபோது மை ந்தனேயவ்விடந்தான்போயிருந்தேன்- பானனமனோன்மணியாள்பா கன்றானும பகருவாய்ப்புஜண்டாய்நான்கேட்டவாறே ௫௩௰

கேட்டபடிதானுரைப்பாயென்றுநாதன் கேட்டாரேயெங்களை யு மெவ்வாறென்னில்- நாட்டமுள்ளபுஜண்டாயிவ்வுலகமெல்லாம் நாதா க்கள்ரிடிகள்முதல்பிரம்மாவிஷ்ணு- தீட்டுபுகழுலகெல்லாங்கடவுளான ஜெகதீசனியானழியும்வழியெவ்வாறு- தாட்டிகமாய்மறுபடியும்பிறக் கும்வாறு சாங்கமுடன்தானியம்பவேண்டும்பாரே ௫௩௧

வேண்டுமென்று பரமசிவனென்னைக்கேட்க வெளியிட்டேன்யெ ன்சாமிகடவுளமனே- ஆண்டியெனுமென்னுதாசிவமேகேளு அாசார பிரளயந்தான்வருகும்போது-மாண்டுவிடுவார்சித்தர் யோகமெல்லாம மகாதேவாதேவர்முதல்பிரம்மாவிஷ்ணு - தாண்டுவார்மானிடருமழிந் துபோவார் தர்பானையுலகமெல்லாஞ்சலமாய்ப்போமே ௫௩௨

போகுமேசிவஜெந்து புற்பூண்டெல்லாம் புண்ணியனேகாக்கை போலவதரித்து- ஏகுவேனுகாயந்தன்னில்நாதா என்னசொல்வேன் பார்த்துக்கொண்டிருக்கும்போது - வாருடையவாழியிலேயாலின்மே லே வளருமேகவக்கினியாங்கம்பம்சுவாமி - காருத்தன்மேல்லோகம்பந் தன்னில் கலந்துகொண்டாப்போதுபார்த்தேன்தானே ௫௩௩

அப்போதுதம்பமதுசிகப்புபச்சை அாகராபோலவல்லோசோதி கண்டேன் - அப்போதுமூன்றேமுக்கால்நாழிகைகருள் அதிலிருந்து பச்சைநிறப்பெண்ணணங்கு அப்போதுதூண்வெடித்துவெளியில்வ ந்து அய்யனேசையமர்த்திநின்றாளபார்- அப்போதுஅவளருகிலிரு ந்துந்து ஆண்டவனேநிற்கின்றீர்அறிவேன்றானே ௫௩௪

ஆண்டவனேஅவள்வந்துவுலகமெல்லாம் ஆகாகாவுண்டுபண்ணி பிரமமாவிஷ்ணு - நாண்டவனைபுற்பூண்டுசீவஜெந்து தன்மையுடன் மனிதர்களையுண்டுபண்ணி- ஈண்டவனேயுந்தனையுங்கடவுளாக்கி இட ப்பாசங்கானமர்ந்தாளெந்தனுத்தான - ஆண்டவனேசத்தியவள்சிவரூ நீரே அய்யனேநீரவளுமொன்றுதானே ௫௩௫

ஒன்றாகியிரண்டாகியேகமாகி வுலகெல்லாந்தானிறைந்தபொரு ளுமாகி- கன்றாகிபசுவாகிக்கடவுளாகி கருஆகின்றவைம்பத்தோர்லக் கமாகி- குன்றாகியுனுவாகியைந்தெழுத்தாய் கோடானமுக்கோணநா

ற்பதாகி- நன்றானவாறெழுத்தாயெட்டெழுத்தாய் நாயகனேபத்தெ
ழுத்தாய்நின்றீர்தானே ௧௧௬

தானானசோதிமயம் நீர்தானென்று தற்பரர்க்குத்தானுரைத்தே
ன்யாக்கோபென்று- கோனானபுஜண்டரவரெனக்குரைத்தார் கொற்ற
வனேயுந்தனுக்குச்சொன்னேனப்பா - தேனானயென்சிஷாதெளிவுள்
ளாளே தேசமதிலபுஜண்டர்போலாருமில்லை - மானானவம்பாளினரு
ளினாலே மகாகோடியுகம்வரைதானிருக்கலாமே ௧௧௭

## பவளபற்பம்

இருக்கலாமின்னமொரு போக்குகேளு யென்மகனேபவளபற்ப
ஞ்சொல்வேனப்பா - பொருக்கவேபவளமதுபலந்தானய்யா புண்ணி
யனேசிம்பழத்தின்சாறுதன்னில்- கருத்துடனேஊரவைத்துயேழாகா
ளில் கண்மணியேதானெடுத்துப்புடமேபோட்டு- மருமமில்லைமறுப
டியும்பழச்சார்தன்னால் மைந்தனேதானரைத்துப்புடமேபோடே ()

போடவேயிப்படியேமறைதானேந்து புடமதுவேதான்போட்டு
ப்பதனம்பண்ணு- நீடவேவெகுசுருக்குயிந்தப்போக்கு நீணிலத்தில
பொய்யாதுமைந்தாசொன்னேன் - வாடவேவேண்டாங்காண்வறிவுள்
ளானே வையகத்தில்மானிடர்க்குசயரோகந்தான் - ஓடவேவழிபார்க்கு
முண்மையாக ஓகோகோவுந்தனுக்காய்வரைந்திட்டேனே ௧௧௯

## தம்பனம்

உந்தனுக்காய்ச்சொல்லுகிறே னின்னங்கேளு வுத்தமனேதம்ப
னமாம்வித்தையையா- பந்தமதிற்சிக்காதேபாலாசொன்னேன் பாருல
கில்மபக்கிவேர்கொடிபூண்டப்பா - நந்தகனந்தானிருக்குநருக்கிப்புட்
பம நாதாககள்கூடுகின்றபாரிசாகம- இந்தவகைபுட்பமொடுதிகைப்பூ
டப்பா எனனசொல்வேனிவையெல்லாமபொடிதனக்கொள்ளே ()

கொள்ளவேகோரையட கிழங்கினோடு சொற்றவனேசேர்த்தல்
லோவரைபக்கேளு - மெள்ளவேயாறுவரைநேரேகிறி மேன்மையுட
னுறுவரைகுறுக்கேகீறி- கள்ளமில்லைநமசிவயவென்றுபோட்டு கருவுள்
ளாய்வரைகோறுஞ்சூலமேபோட்டு- உள்ளபடிநமசிவயஉலகமெல்லாம
ஓம்தம்பனயாவென்றுருத்தான்போடே ௧௨௧

உருவானவுருவதுதான்மட்சமையா ஒருநமையுடனேபின்புசொ
ல்லக்கேளு - கருவானபொடியதனைப்பதனம்பண்ணி கழறுவேன்பூ
சைநைவேத்தியஞ்செய்து- திருவாகத்தானெடுத்துசத்துருமேலேதெ
ளிக்கவேயின்றிடுவான்பேசமாட்டான் - ஒருவனுய்விலததோடேநிலத்
தானையா ஓகோகோவொட்டிகொள்வானுண்மைதானே ௧௨௨

உண்மைதான்மூன்றுமணிநேரமையா ஒன்றுந்தான்செரியாது
சத்துருக்கு - திண்மைபாய்ப்பிறகல்லோதெளிந்துபோகும் திகழுள்
ளாய்க்கருமிகடகுவிள்ளவேண்டாம- வண்மையாயுந்தனுக்காய்ச்சொ
ன்னேனப்பா வையகத்தில்வெகுசுருக்மாறிவேயிலலை- தண்ணமையுள்
ளயென்சிஷாயின்னங்கேளு நகமையுடன்றானுரைப்பேன்சிக்கிதானே

## நடனசிங்கி

சிங்கியென்ற நடனசிங்கி போகருசொல்வேன் திகழான கெவுரியுடன்வீரமப்பா . இங்கிதமாய்க்காடிகாரஞ்சுணவண்டப்பா பியலான மீனாணின்கொழுப்பொடொக்க- பொங்கமுடன்தீமூட்டுபாஷாணங்கான் பொலிவானசேவகொட்டையிவையெல்லாந்தான- சங்கையின்றிசமனிடையாய்க்கூட்டியல்லோ சாங்கமுடனல்லரவமவிடந்தான்ரெண்டே ௱௪௪

விடமானநல்லரவமிரண்டேயாகும் வித்தகனே சேங்கொட்டைப் பாலினாலே - தடமாகத்தாளரைப்பாய்சொரடாகொண்டு தயங்காதே யுன்மீதிற்படலாகாது- படம்போன்றவென்சீஷாபகரக்கேளு பாருலகில்சத்துருக்கள்வெகுவாயுண்டு - கடமானபாலகனேயுந்தனுக்குகரேமது செய்வார்கள்கருமிதானே ௱௪௫

கருமியெனுங்கசடருக்குயிதுவேபோதும் கண்மணியேசுப்பலிலேயெடுத்துக்கொண்டு - பொருமையுடன்றூனடிக்க வவர்கண்மீது பொங்குமேதேகமெங்கும்வெடிப்புகாணும் - வருமையதுமிகவாகும புண்போலாகும் வையகத்தில்சசிக்கார்கள கருமிபாண்பர்- கருமிகடகுச்செயயாதேகுடிகெடுக்கும்சண்டாளர்தமக்கல்லோசெய்வாயகண்ணே

செய்வாயேமூன்றுபிழைபொருத்துநீயும் செகத்திலேபாழ்கிணற்றில்புதைத்துவைப்பாய-கைதவமாயிவ்வித்தைக்காட்டொணாதுகண்மணியேவிண்மணியேகருமிகட்கு - பொய்சொல்லவில்லையடாயெந்தனாசான்-புகட்டினாரெந்தனுக்கும்பூரணத்தில் - பெய்தாரேமழைபோல்நாலுநூறில் பேணிப்பார்பரிபூரணமென்றநூலே ௱௪௭

## திவர்த்தி

நூலான நூலிலேயாசிங்கிவித்தை நுணுக்கமாய்ப்பாடிவைத்தாயாலுஞ்சொன்னேன்- பாலானவென்சீஷாநிவர்த்திசெய்ய பாருலகில் குன்றுமணிவெண்மையாகும் - சேலாகயிலேகொண்டுமாணிப்பூண்டு செம்மையுடன்வேர்கொண்டுவணங்கிவேருமெ- மாலானபாலகனேகியாமூயிட்டு மருந்தச்செய்யாறுநாள்வேளைரெண்டே ௱௪௮

அருந்துகையாலப்பிணியுமோடிப்போகும் அல்லாட்டாலரணலுமூடியானகைபா- அருந்தையிலேபோகாட்டால் சொல்லக்கேளுநாபனமறுவிசையமாறுநாள்தான் - அருந்தவேரணமெல்லாமாறிதேகம்வப்பனேயென்போலகாந்திகாணும - அருநகியபின்மூன்னிருந்தசசடெல்லாந்தான் ஆகுங்காவோடிவிடுமகிமைதானே ௱௪௯

## வெள்ளிவித்தை

தானானவென்சீஷாயின்னமொன்று சாற்றுவேன்வெகுசுருக்குவெகுசுருக்கு - கோனானகனேசருடவாகனந்தான் கொற்றவனேமூஷிகத்தினெலும்பைவாங்கி- வாதனசுட்டசெம்புதனையுருக்கி வளமையுடனெலும்பினால்கிளறுவாய்நீ - தேனானவென்சீஷா சொக்கமாகும் செகத்திலேலங்கத்திற்கேகுந்தானே ௱௫௰

ஏகாமல்காளிருக்கவுதை நான்சொல்லக்கேளு யென்மகனேவெள்ளைச்சம்பமீவாய்- போகாதவர்க்கு முதல்புடக்குக்குத்தான் புண்ணியனேபொய்பாதுமெய்பதாகும்- பாகாவப்பாசமிக பாருமேளார்க்குப் பகராதேசபதிரமாய்ப்பாதுகாப்பாய- சாகாமல்நீயிருந்துவித்தைபாரு சடலத்தைப்போக்காதேவிணில்தானே ௫௫௧

ஞானம்

விணிலேபோக்காதேவின்னைப்பாரு மேவிநின்றவாத்தாளின்பதிதானங்கே - வணிமேயவற்றுப்பார்பத்துநிலைக்கு வொன்றுகிப்போகுமல்லோநாட்டந்தானே- வாணியுடபாலுண்டுவையகத்தில் வளர்த்திடுவாயாயுளோநீவளமைபாக - ஏணிமெய்ன்றவாசிலைநீபாச்சிப்பாரு யென்னசொல்வேன்சோதிமயங்காணுந்தானே ௫௫௨

சோதியத்தில்சொக்கிடுவாய்சொரூபரூபம்தோன்றுமேவாசிவென்றமனத்தினாலே- சாதிபேதம்வையாதேதரணிமீது சாற்றுவேன்பனைந்தானேசிவந்தானையா - ஆதியென்றாவிமதியுமதைதினாலே அரகராவென்சாரைமனத்தினாலே - பாதிமதிசடையணிந்ததம்பிரானும் பரிவாகவுன்னுள்ளேநோக்கிப்பாரே ௫௫௩

பாரப்பாவுன்னுள்ளேசோதியொன்று பகர்ந்தாரேமுச்சுடராய் மனத்தினாலே- சீரப்பாவரியஞானமென்று செபமினார்சகக்கியாணிசெவ்வையாக- நேரப்பாவதைக்கண்டுகொண்டிருந்தால் நேர்த்தியுடன்பாடிவைத்தார்நிலத்தில் - கூரப்பாகொட்டிவிட்டார் கோளருக்குக்கொற்றவனேதீர்த்தமென்றுங்கோவிலென்றே ௫௫௪

கொற்றவனேவாணருடசாத்திரத்தைக் கோராதேமனமதுவேமாயகைசித்தும் - எற்றிசையில்நாதாக்கள்பாடிவைத்த பேடதனைக்கைவிடாதுற்றுப்பாரு- நற்றவத்தோர்தனையடுத்துநபங்கள்பேசி நாயகனேயவர்களுக்குதொண்டுசெய்து - அற்றவரேநூலினுடவுளவைக் கூறி அரகராகறையேரவழிசொல்வீரே ௫௫௫

சொல்லுவீரென்றல்லோ வவரைக்கேட்டால் சொல்லுவார்நூலினுடவுளவையாவும்- கலலுவாய்ஞானமென்றபாதைதன்னை கண்மணியேயான்சொன்னவாறுபோல- வெல்லுவாய்மாய்கைதனைவிட்டேநீயும் வேதாந்தபூரணத்தில்செக்கிதூங்கி - நல்லதொருமெஞ்ஞானியாகிப் போவாய் நாடதனிலுனைசயிக்கயாராலாமே ௫௫௬

பொய்ஞ்ஞானி

ஆமடாவுலகினிலேசாம்பற்பூசி வப்பனைவுருத்திராட்சமாலைபூண்டு- காமடாபூங்காவிதன்னைப்பூண்டு தற்பரனைபோற்சடைபூண்டு குடணிந்து- வாமடாபிரப்பங்கோற்கைபிடித்து வளமானசாத்திரத்தைக்கையணிந்து- நாமடாநாதாந்தகுருவேயென்று நாடதனில்தான் மயக்ககூறுவாரே ௫௫௭

கூறுவார்சாத்திரத்தின பாடலெல்லாம் கொற்றவனேநூலினுடவுளவைக்காணார் - விறுடையநூலையல்லோபாடாபண்ணி வின்ருவாருளவதனைக்கண்டோன்போல- வாறுகேளைக்கென்னதெரியுமென்

பார் வளமாக வென்றுசான்கிருநடையென்பார் - தேறுவேன்மார்தட்டி
க்கழுதையென்பார தெளிவானமெஞ்ஞானிபோல்சொல்வாரே ( )

தெளிவானசுக்கானவெனவழைப்பார் தேசமதிலசிக்காதேமாய
னைதன்னில் - வளிபோலச்சொல்வாரேசுத்தன்போல வளம்பெரியபூ
சைக்குவரைதான்வேண்டும் - அளிப்பாயென்றுரைப்பாரே யன்பன்
போல ஆகாசவாய்ஞானம்பேசுவார்பார் - பளிக்காதேயென்னைப்போ
ல்பெரியோர்தம்மை பாலகனேசாபமதுவெய்யுந்தானே ௫௫௯

எப்புமேபத்திரமாய்த்தொண்டுபண்ணு யென்மகனேயருள்கரு
வாம்நமச்சிவாயம் - பொய்யாதுயென்வாக்குயென்று சொல்வான் புலைப
வல்லோ சிலகாலஞ்சென்றபின்பு - பெய்யானவென்சிஷாவென்னசெ
ல்வ[illegible] யிலுன்னைப்போல்தொண்டனுக்கு - செய்யார்சகு
ணிலேயென்றுசொல்ல செப்புவான்பேராசைகொண்டுதானே ௫௬௰

செப்புவான்பேராசை கொண்டசீஷன் பேருலகில்வாதமதுகிய
ண்டுமென்பான் - தப்புள்ளசெய்தாலும்பொறுப்பீர்நாதா சமுசார
நானல்லோபிழைக்கவென்று - கப்பிபதோபசியாலேசேட்கமூடன்
கழறுவானகுடிகெடுக்குஞ்சக்கமன்றுமே - அப்படியேயென்சிஷா குரு
குகேவனுன் அஞ்ஞாதேயரைபலந்தான்ரசமிவாயே ௫௬௧

ஈவாயேயென்றையிலேமூடசீஷன் பெழுந்திருந்து அனைமொழி
யில்ரசமேதருது - தேவானான்கொண்டுவக்கேன் பெற்றுக்கொள்வீர்
தெளிவுள்ளயென்னுதாயென்னவேண்டும் - ஏவானயேவலதுபுரிவீரெ
ன்று பெய்சொல்வேன்சிடனவன்வினவும்போது - கோவானதேவடி
யாள்பெற்றபிள்ளை கூறுவான்வேஷகுருசொல்லக்கேளே ௫௬௨

கேளடாயென்சிஷாவொன்றும்வேண்டாம் கிட்டயிருகாட்டுகின்
றேன்வாதவித்தை - நாளடாபோக்காதேதான்வில் நாயகனேமெ
மூகதனைத்தாவெடுப்பாய் - கோளடாபொய்க்குருக்கள்சொல்லும்போ
துகொப்பெனவேதாவென்மூந்துமெழுகையிய - வாளடாமூசையிலேர
சத்தைவைத்து வளமையாய்த்தானுருககிமெழுகைதானே ௫௬௩

மெழுகீந்தபின்பல்லோரசங்கானைபா மேன்மையுள்ளபிறவியென்
றதங்கமாச்சு - கழுதையென்றபொய்யவேஷங்கரித்தகாமி கழறுவான்
ஒருவருக்குங்காட்டிடாதே - பழுதானவித்தையிதுயிந்தப்போக்கு
பாலகனேதானறியாமூடச்சீஷன் - வழுக்கதுவான்குருமுடிக்கயென்ன
வேண்டும் வழங்குவீர்யெனவுரைப்பான்சீஷன்றானே ௫௬௪

தானுணசீஷனவன் கேட்கும்போது தயங்காதேகுருமுடிக்கப்
பொருளதான்வேண்டும் - கோனுனகுருபரனுக்கழுதைகப்பா கூறவே
சீஷனவன்பொருள்தான்கொட்ட - தேனுனயென சிஷா மூலிதன்னை
தேடுவோமென்றல்லோ தெரியாமல்தான - கானுவகாடடைந்துவேஷ
ம்நீக்கி கனைத்திடுவான்தாடிமீசையெல்லாந்தானே ௫௬௫

மீசைமுதல்ரோமமெல்லா மடித்துவிட்டு மீள்வானேயப்பதேசம்
போய்மயக் - ஆசைவைந்துயிப்படியேயலைவான்பாவி அப்பனேயவ

ர்களிடஞ்சேராதேயில்- பாசையதுவேறாகப்பேசுவான்பார் பணம்பறி
க்கதகைசத்துமெழுகிலேற்றி - காசையிலேகைப்பிறட்டாய்பிழைப்பா
னல்லால் கண்மணியேகதியிகலைகாகந்தானே ௧௬௬

மெஞ்ஞானி

கண்மணியேயவர்களிடமேமாராதேகண்டுன்னைபடைக்காக்கால்
தூராமாய்நில்- விண்மணியேமெஞ்ஞானிவருவாருண்டு வின்ளுலேன்
வரும்போதுமகிமைதன்னை - மண்ணிலேபட்டமர்ந்துளிர்கதும்பாகும்
மகத்தானமூடவனைவன்நடப்பானையா - பன்னவர்கள்கூறவொண்ணு
மகிமையப்பா பார்த்திபனேயவர்தேகமின்னுந்தானே ௧௬௭

மின்னுமேமித்தரைப்போல் திரிவாரப்பா மேதினியில்நின்னே
டேபேசார்பாரு - பன்னுவேன்நீயடுத்தால்கல்லினுமேல பாச்சுவாருன்
மேலேமித்தரைப்போல- உன்னுவாய்க்கருவாளிபானல்நீயும் வுகந்து
சொன்வாயவர்மகிமைதன்னையப்பா - இனனிலத்தில்கருவாளிகாண்பா
னல்லால் பிணக்கமில்லாககருமியவர்சாணூர்சிமே ௧௬௮

காணுரேதன்னிலேயில்நிற்பாரையா கண்மணியேயவரைகண்டா
ல்விட்டிடாதே- தோணுரேமாய்கையினால்மறைந்துகாண்பார் தொல்
லுலகில்திலகமிட்டுகண்டுகொள்ளு - ஊணுவலூணுக்கமற்றஞானிவு
த்தமனேயவர்பகசனைதொண்டுபண்ணி- நாணமல்கதிபெறவேவழி
யைக்கேட்டால் நவிலுவார்மனமூலக்குநாதர்தாமே ௧௬௯

மறைப்புமை

தாமடாமறைபபுமைசொல்லக்கேளு தகமையுள்ளயென்சேஷாத
ாவுள்ளானே- நாமடாசிமூல்வணங்கிதிகைப்பூடப்பா நன்மையுள்ளசு
மூல்பூச்சிதொட்டால்வாடி - வாமடாபிரம்மாககாசியேடு வப்பனே
பெய்மிரட்டிகாயவணங்கி - பாமடாகருப்பூனைகண்ணும்பித்தும் பருந்
தினுடபித்தோடுவாந்தைப்பித்து - காமடாகாடையுடபித்துங்கூட்டு
கண்மணியேசெம்போத்துபித்துங்கூட்டே ௧௭௰

கூட்டடாவால்நீண்டான்பித்துங்கூட்டு குணமானவடைக்கலத்
தின்பித்துங்கூட்டு- நாட்டடாகருநாயின்பித்துங்கூட்டு நயமானகரு
ங்கேழிபித்துங்கூட்டு - வாட்டமின்றிகௌதாரிபித்துங்கூட்டு வளமா
னகாக்கையென்றவண்டங்காக்கை- காட்டிகமாய்வதனுடைபித்துங்கூ
ட்டு தன்மையுடன்ஊமத்தன்கூறுப்புமாமே ௧௭௧

மத்தனுடன்கருநொச்சிகருங்கையாமுன் மகத்தானமயக்கிவே
ர்கருவேம்போடு- இத்தகைபசரக்கெல்லாமொன்றாயச்சேர்த்து யென்
மகனேயேசமூஞ்சிதயிலத்காலே - சித்திபெறதானமைப்பாய்மைபோ
லாக சின்மயனேகஸதூரிபுழுகினோடு- பகதியதாய்ப்பச்சைகற்பூரமப்
பா யகருகிறேன்கோரோசனைகுங்குமப்பூ- மத்திசதாசிமிளதனிற்பக
னைபண்ணி மனோன்மணிக்குபபூசைநைவேதியஞ்செயமே ௧௭௨

பூசைசெய்துலாடமதிலணிந்துகொண்டு புண்ணியனேநீயேகம
னைப்பேயாகும்- காலைசையிலேகளளரடாலனேகம்பேர்கள் கழறுவேண

வர்கண்ணில்புலப்படாதே - சேமமதுசெய்வதற்குவருவார்தோடி நீம
கனேயிலமைமிட்டுயேகுவாய்பார்- ஆசைவைத்துவேண்டியதோர்கருமி
கள்ளர் ஆகாகாவிதுவென்னமகிமைதானே ௱௭௩

இதுவென்னபுதுமையடாசித்தைக்காணார் பெங்கேயோமறைக்
தாரேயன்பாரப்பா- புதுமையிதுசித்திலுட மகிமைதாலும் புண்ணி
யமேனசொலவதற்குதுவொண்ணுது- பதுமைனைப்போல்நின்றிருப்பர்
மயக்கியேதானபாலகனேயென்சிஷாமலைப்புமையை- வதுமையுட
னியல்லோகைவிடாமத வளமானயிச்சித்துவுஞ்சகுருன்றே ௱௭௪

வெள்வங்கவட்டை

நன்றானயின்னமொருபோக்குசொல்வேன் நாயகனேவெள்வங்க
வட்டைசேரு- குன்றானகோடாசுழியிலேயறைத்து சொறறவனேவ
ங்கத்திற்கவசஞ்செய்து- பன்றாலபுடமதுவோயெருவிலேபத்து பாலக
னேபுடம்போடவட்டையாகும்-நன்றானவட்டைதான்பூவைபண்ணு
காடதவிலகாட்டாதேகருமிகட்கே ௱௭௫

வங்கச்செந்தூரம்

காட்டாதேவட்டையைநீசட்டிதன்னில் கருத்துள்ளாய்மூச்சாம
பெரிக்கும்போது- தாட்டிகமாய்க்கிளாலேவருசுங்கன்வேரு தகைமையு
டன்கத்தையதாயக்கட்டிக்கொண்டு- வரட்டமின்றிதான்கிளறசெந்தூ
ரந்தான் வள்மையுடனுட்டிரத்தம்போலேகாணும்- நாட்டமுடன்செந்
தூரந்தனையெடுத்து காட்டாமதிமேலேபத்துக்கொண்டே ௱௭௬

மதிமேலேயிந்தாலேவயதோபெட்டு மைந்தனேசிவனத்தைசெய்
துகொண்டு- விதியதனைவெல்வாயேவிண்ணிலேலே விள்ளாதேசாத
கிரதனைவாய்ந்துபாரு- சதியானமோகவலைசிக்கிடாதே தற்பரனுக்கு
ருபதத்தைத்கொண்டுபண்ணு - கதிபெறவேயுலகினிலேவாசானைப்
பார் கண்மணியேமுனியாவாய்சித்தாவாயே ௱௭௭

வெள்வங்கநீர்வாங்க

முனியாவாயின்னமொரு வயணங்கேளு முனையானசிலாவிரை
யோடெட்டியோடு - கனிவானயிலையதனைகுடுவையில்வை கருத்துள்
ளாய்வெள்வங்கம ரூபாய்தூக்கம் - இனிமையுடன் தான்வைத்துயிலே
மேல்போடு யென்னசொல்வேனெல்லகமேவேதைதன்னை- வனிதை
யுடனிப்படியேதூக்கமூன்று வளம்பெறவேவங்கத்துக்கீழ்மேலசெ
யமே ௱௭௮

செய்தமேயிருபதுதானொருவிலையா செய்பாகமாகவல்லேபுட
மேபோடு- நய்யமேநீரேகிசுச்சமாகும் நானிலத்திலென்னசொல்வே
ன்வெகுசருககு- பய்யவேயெடுத்தவிலையாம்வாய்நீ பாருலகில்சமூக
தேமங்கமதன்னை- உய்யவேயுந்தனுக்காய்ச்சொன்னேனல்லால் வுத்த
மனேகருமிகட்குவிள்ளேன்தானே ௱௭௯

வெள்ளிவித்தை

விள்ளவேகருமானமொன்றுகேளு விண்ணவனேபாஷாணபாச
ம்வெங்காரமெள்ளவேசீனச்சுன்னம்யிவையெல்லாந்தானமேன்மை

பெறயிடையதுதான்ரூபாவாகும் - கள்ளமில்லாமழையென்றபழத்தி
ஞலே கண்ணேகீவறைத்துமேகுடுவையில்வை- வளளலேவப்ரேசம்
வாயமேல்வைத்து வழக்கமாய்கன்மேலேசெம்பைவையே ௱௮௰

செம்பதுதானரைரூபாய் தூக்கம்வைப்பாய சேயேகேள்தகடாக்
கிவைப்பாயப்பா- நம்படாயதன்மேலேவோடுவைத்து நாயகனேசீலே
செய்துபுடமேபோடு. வம்பில்லையிருபதுதானொருவில்போட்டு வாகா
கச்செம்பதனேப்பதனம்பண்ணு- உம்பர்கள்கானறியார்கள்செம்புதன்
ஊ வுத்தமனேவெருஞ்செம்பில்நாலுக்கொன்றே ௱௮௰௧

நாலுக்குவொன்ருகயிந்தபிஞ்பு நாயகனேவெள்ளியதுசரியாய்ச்
சேர்த்து- பாலுக்குவுவமையல்லோயிந்தப்போக்கு பகருகிறேன்வெள்
ளைகபமபமீவாய். மாலுக்குசமுசாரிசெய்யும்வித்தை மார்க்கமடாயிப்
போக்குபோலேயுண்டோ - வேலுக்குகிகராவாய்சிஷாநீயும் வெட்ட
வெளிபகிமேவிசில்லுவாயே ௱௮௰௨

சுபத்தகைம்

சில்லுவாய்சுயத்தங்கம் செய்வதற்கு நீணிலத்தில்தாம்பரத்தை
வுருக்கிபப்பா- வெல்லுவாய்வார்பூண்டுபிழிந்தாயாலுல் வேதாங்தத்தங்
கதுமாற்ருேநாமு - நல்லதொருரிடிமுனிகள்செய்யும்வேதை காட்டி
லேசமுசாரிக்கெய்யாதப்பா- பில்லரத்தோர்க்குரைக்கவில்லைதாவிக்க
ப்பா யெடுத்துரைத்தேன்விஞேதவித்தைவாதந்தானே ௱௮௰௩

வாதமதுசெய்வதற்குயாராலாகும் வகுத்தபிரான்றன்னருளாலா
குமோசொல்- பேதமதுசெய்துமல்லோபிழைப்பார்பாரு பேலருலகி
லசுயத்தங்கப்செய்வாரில்லை- வேதமதுகற்றேன்போல்பேசுவான்பார்
வேதாந்தங்கடந்துநின்றமுனிபோற்சொல்வான்- காதமதுயில்லையடா
வாதங்காண கருத்துள்ளேநோக்கிஞல்சிக்குந்தானே ௱௮௰௪

யாக்கோபுசிஷனுக்குமகிமை கூறல்,

சானேதானிமபகிரிவடபாகத்தில் சாற்றுவேனவமலையாமொன்
றுவுண்டு- காணேதானம்மலைக்குமேல்பாகத்தில் கழறுவேன்தங்கம
லைபொன்றுகண்டாய்- நானேதான்போய்க்கண்டேன்நளினபாதா நா
தாக்கள்வெகுபேர்களங்கேயுண்டு - வானேதானவர்களையுஞ்சுற்றிவந்
துவணங்கியேதொழுதிறைஞ்சிநின்றேன்காணே ௱௮௰௫

வணங்கியதோரெந்தனையாரென்றுகேட்டார் வளம்பெரியவகத்தி
சர்சிஷனென்றேன்- இணங்கியேயெந்தனையுமாசீர்கூறி யிருவென்று
ர்பொருவென்ருர்நாதப்பா - கணப்போது அங்காமாய்த்தலைகீழாக
கடுந்தவங்கள்செய்தாரேயென்னசொல்வேன்- பிணம்போலதானிருந்
தார்சணநேரந்தான் பேசிஞர்மறுபடியும்யெந்தனேடே ௱௮௰௬

பேசிஞர்பார்த்துக்கொண்டிருக்கும்போது பேர்பெரியசிங்கமது
வந்ததங்கே - மாசிலாசித்தர்முன்புவணங்கிநின்று மகத்தானகர்ச்சனை

கள்செய்ததப்பா- கர்சியிலேயுனைச்சார்ந்தமிருகமெல்லாம் காவலதுசெய்வீரெயெனவுரைத்தார்- வாசியைப்போல்பாயந்தல்லோ நரிகள்கூட்டம் வாகானநரிக்கூட்டம்புலிதானுமே ௫௮௭

புலிக்கூட்டமுதற்கொண்டு மிருகமெல்லாம் புண்ணியனையழைத்துவந்திச்சிவிங்கி-கனியானமிருகமெல்லாங்காவல்செய்ய கண்டேனைவிநோதமதைபெண்ணசொல்வேன் - வலிதானபவமகற்றும்வள்ளலானோர் வணங்கியதோரென்னையுமேயழைத்துக்கொண்டு-சலியாதவுடவிசென்றுவெகுதூரந்தான் சார்ந்தோமேயோர்மலையின்கூடியிலதானே ௫௮௮

மலையதிலேவோமூலிகண்டோமையா மகத்தானமூலியிலேபுட்பம்கண்டோம்- கலையானபுட்பமதுவெடித்துமல்லோ கைலாயவாசனைப்போல்ரிடிவந்தார்பார் - அலையானகடல்போன்றகருணையுள்ளோர் ஆகாகா அவர்மகிமையின்னங்கேளு - வலையானபவக்கடலையொழிக்கநாதன் வளமானமுடிமீதிற்சடைகண்டோமே ௫௮௯

கண்டோமேமலர்போலற முகத்தையையா கணக்கிடவோமுடியாது ஆயுள்கன்னை- சண்டமாருதம்போன்றரிடிகானேது சாற்றுவார்யாரப்பாநீங்களென்று- அண்டியேதாள்பணிந்துயேதுசொலவோம்வப்பனேதங்கமலைசித்தரென்றோம் - விண்டவுடனெங்களுக்குவாசீர்கூறி யிருக்கவென்று காதுரைத்தார்சொல்லக்கேளே ௫௯௰

கேளடாயெங்களுக்குதங்கமூலி செணிதமுடன்தானீய்ந்து பொசிக்கச்சொன்னார்- நாளடாபோக்காதுபொசித்தோமையா நற்சிஷாகேசமதுதங்கமாச்சு- வாளடாஞானவானெங்களுக்கு வரைந்தாரேவெகுசுருக்குபாதைதன்னை- கோளடாயில்லையிதுவாக்குபொய்யா கொற்றவனும்புட்பரிடிசொன்னவாக்கே ௫௯௧

வாக்கானபுட்பரிடி யாசீர்மத்தில் வாகானமூலிகைதான்மகிமைமெத்த- நாக்கமலத்தாயாரினருளையுன்னி நாடினேமவர்பதத்தைமிகவாயெண்ணி-காக்கையிலேயவரிடத்தில்விடைசான்பெற்று கண்மணியேதங்கமலைவந்துசேர்ந்து- பாக்கையிலேதங்கமலைசித்தர்பாதம்பணிந்துவிடைபெற்றுவந்தேன்தானே ௫௯௨

வீரச்சுன்னம்

வந்தேனேயின்னமொருவயணங்கேளு வழுத்துவேன்வீரசுன்னமிகவாயப்பா - சொந்தமாய்பொடிமூலியரைத்துநன்றாய சொகுசாகவீரத்திற்கேதுசெய்வாய் - கந்தனேகவசித்துபுடமேபோடு காட்டாதேபத்துபலமெருகேயாகும்- இந்தவகைசெய்தாக்கால்நீறிப்போகும்மென்மகனேகடுங்காரச்சுன்னந்தானே ௫௯௩

ரசச்சுண்ணம்,

தானானசுன்னமதைப் பதனம்பண்ணு தயங்காதேரசச்சுண்ணஞ்சொல்லக்கேளு- கோனானகொடிப்பூண்டைத்தானரைத்து கொற்றவனேதொன்னைசெய்துரசந்தானப்பா- தேனானவீரப்பலந்தான்வார்த்

தமுடி தெளிவாகவகலிலிட்டுக்கவசித்தேதான் - மானுனயெழுசீலை லுவாய்ச்செய்து மைந்தனேபத்தெருவில்புடந்தான்போடே ௧௬௪

## அப்பிரேகச்செந்தூரம்

போடவேபுடமாறியெடுத்துப்பாரு பொலிவானசுன்னமதுகாரமெத்த- நீடவேயப்ரேகச்செந்தூரங்கேள் நீணிலத்திலபிரமவேர்சார்பிழிந்து- ஆடவேயப்ரேகமூன்றுநான்தான் வப்பனேபூரவைத்துசொல்லக்கேளு- நாடவேமலைதாங்கியிலையரைத்து நவிலுவேன்கவசித்துப்புடந்தான்போடே ௧௬௫

புடமதுதான்போட்ட பின்புயெடுத்துப்பாரு புதுமையடாவப்ரேகச்செந்தூரந்தான்- தடமானசெந்தூரக்குங்குமப்பூ தாரணியில்வாதத்துக்குறுதியாகும்- மடமானசிவபூசைமறந்திடாதே மானிலத்திலின்னமுண்டுசிடிகைவேதை இடமானயிடம்பொருளேவல்தான்வேண்டும் யிஷ்டமுள்ளாய்வாதமெல்லாங்கொட்டினேனே ௧௬௬

கொட்டினேன்மூலிகைக்சாணுதற்கு கோடிப்பாய்சொர்ணவயிரவரின்பூசை- இட்டமுடன்பூசிக்கமூலியெல்லாம யிதுவிதுவென்றறைவாரேகமூர்த்தி- கட்டமதுபடவேண்டுமகருத்தாயப்பா கழறுவேனிலவரைவிட்டாலாசான்வேண்டும - மட்டியிடஞ்சேராத மைந்தாசொன்னேன் மகாகோடிவித்தையெல்லாங்கொட்டினேனே ௧௬௭

வித்தையதுவொருவருக்கும் காட்டிடாதே விண்மணியேகண்மணியேவிளம்பக்கேண்மோ- பக்தியுடன்நூலதனைப்பசனம பண்ணு பகராதேகருமியென்றமாண்பருக்கு- எததனையோ நூல்சொன்னார்சித்தரெல்லாம என்னூற்போல்திறவாகச்சொல்லவில்லை- நத்துவாயப்பாவின்தாளையப்பா நாதாந்தப்பேரொளியைநண்ணுவாயே ௧௬௮

நண்ணுவாயடைந்தவரைக்காக்கவேண்டும நாடதனில்பொய்சொல்லாதிருக்கவேண்டும் - எண்ணுவாயுலகெல்லாந்தன்னைப்போலவேயறநெபரீகாத்திடுவாயிணக்கமாக- விண்ணுலகோர்யாவருமேமெச்சுவார்கள் வேதாந்தக்சாயினதுவருளினாலே - கண்ணவனேயுலகினிலேபுண்ணியவானாய்கலக்கமற்றுத்திரிவாயேபின்னுங்கேளே ௧௬௯

## மேகநாதகுளிகை

இன்னங்கேள்கருமான மொன்றுசொல்வேன் பெழிலானசகலரோகத்துக்கெல்லாம்-பொன்னவனேமேகநாதகுளிகைகேளு பொலிவானசையோகமிருத்தலாலே - வன்னியதுமிகவாகுமாங்கருக்கு வழிநூடுதான்மிகவாய்மேகமுண்டாய் - சன்னியினால்நோய்பிறக்குமமேகநாத காட்டுகிறேன்குளிகைசக்கரைநாறுமே ௧௭௦

சக்கரையின்சுக்கேலமிளகுமாஞ்சி சாதிக்காய்பத்திரியுங்கிராம்பு கோஷ்டம்மிக்கஅதிமதூரமுடன்அமுக்குறவும் விதமானவால்மிளகு கசகசாவும் தொக்கவகைபலமிரண்டு தட்டியிட்டுச் சுருதியெனும்பாலிலி ட்டுப்ப்பாகாய்க்காச்சி பக்கமுளமுன்ரசத்தையநிலேயிட்டுப் பாகமாயி றுகப்பதம்பார்த்துக்கேளே. (சாக)

பார்த்தெடுநீசாராயந்தேனுமிட்டுப் பதமாகவுத்தியளவாகச்செய் து, சாற்றிடுவாயொருகுளிகைகொடுத்துப்பாரு சதுரத்தில்வசனமுத ற்பேதிமிற்கும்காத்துநலமூலத்தி ற்கிராணிநல்லகடிதானசெறியாமைவா ந்திமிற்கும்போற்றியெதேகத்தைப்பார்த்துத்ராக்கு புகலறியயாக்கோ புகன்றிட்டாரோ. (சாஉ)

கூவென்றசொற்கேட்டுநபிமாரெல்லாம் குண்டலியைதானசைத் துத்தீன்தீனென்றார், ஆவென்றசொற்கேட்டுநபிமாரெல்லாம் அசனுச னும்வேறல்லநீதானென்று, மாவொன்றுரெட்டியொன்று மீஷந்துநல் லமக்கத்திற்போயிருங்களென்றுசொல்ல, ஈயென்றசொல்லேது அற மாவேதுஇருந்தனடாகோடிவனையிறசூலென்றே. (சாங)

காட்டெருமைபாலாழாக்குமுமதிநேரே கண்டதனேப்பிங்காளி ல்திரிநாளவைக்க, தாட்டிகமாய்முறிந்துவிடுநீனவைத்துத் தப்பறவே சினத்தைக்கரியிலிட்டு, மாட்டியே வூதியெடுசுன்னமாகும் வன்னமயு ள்ளகல்வமிட்டுமுன்னீராலே, மூட்டியே அரைத்துவில்லையங்கியிட்டு மூட்டியேகெஜபுடத்தில்நீறுந்தானே. (சாச)

சங்குநிறம்நீரியதோர்சீனச்சுன்னஞ் சாததமாயெடுத்துவைத்துச் சாற்றக்கேளு, இங்கிதமாய்வன்னிரசம்உப்பிலிட்டுஇதமாகம்பெரிங்கிட வேபதங்கமேழும், துங்கவதையெடுநிறுத்துமுன்சுன்னநேரே துடியா கச்சேர்த்துகல்வமீதிலிட்டு, சங்கைபடப்பழச்சாற்றுச்சாமமாட்டிச்சது ராகக்கிடத்திலிட்டுமூடிக்கேளே. (சா௫)

மூடியதைச்சீலேசெய்துஎரிநால்சாமம் முத்தியதையெடுத்துமண் டலமேயுண்ண, கோடியறுநோயெல்லாங்குஷ்டம்போருங் குணமாகு ம்வாதவெடிசூலேபோகும், நாடியதுமகோதரமுநலமதாகு நாட்டிலுள் ளநீரிழிவுநடுங்கியோடும், வாடிமுகங்கனல்கண்டவிருள்போலாகும் வ கைபாகயாக்கோபுசொன்னார்தாமே. (சாசா)

(பாஷாணக்கட்டு.)

வச்சிரத்தின்பாலழக்குப்பிங்காணிலிட்டு வசமாகமுமதிவெள்ளை க்கருநேரிட்டு, அச்செயலாய்த்திறிநாள்வைமுறிந்து நீராந்தகைபெறள லிகொல்லியோட்டிலிட்டு, வைச்சபடி முன்னீரால்சுருக்கியிட்டு வகை

யாகநாற்சாமம்போட்டுத்திரு, உச்சிதமாயண்டமென்றசுண்ணங்கட்டி
பூரறியப்புடமிடவேகட்டுந்தானே. (௬௱௭)

கட்டுகின்றபாஷாணங்கரியிலாடுங் காதலாயெடுத்தத்தைவைத்து
க்கொண்டு, வெட்டுநீவெள்ளீயநூற்றுக்கொன்றுவிரும்பிபாடுரசிதமா
623 நீர்களற்று, தட்டுநீபாலம்வருங்கடையில்விற்று தகைமையுள்ளஞான
த்தைத்தரித்துக்கொளளுநு, பட்டுனூற்சாயம்போம் பாகமாகு பதிவான
யாக்கோபுபாலித்தாரே. (௬௱௮)

(கன்னிக்குசுடொண்ணை.)

நிம்பயெண்ணைபடியாழாக்கரண்டியிட்டு நினைவாக வெள்ளுள்ளி
தாரக்கொஞ்சம், தெம்புடனேபோட்டெரித்துச்சூடுகண்ட திறமான
624 பருவமதில்சிரசிலூற்று, துன்பமதுசன்னிநளிர்பிரட்டல்போகுந் துடி
ப்புள்ள சலவைகளுளுசொல்லாதோடும், நம்பியிட்டயிர்போலேநலம
தாகும் நாதாந்தயாக்கோபுநவின்றிட்டாரே. (௬௱௯)

(விஷபேதிக்கு.)

கருத்துடையமானிடர்க்குப்பேதிகண்டால் கைக்கடங்கப்பிடியெ
625 டுத்துடூளகாய்தன்னை, இருத்தியவீர்வெண்ணைபேடல்மூனாதன்னிலித
மாகப்பதித்திட்டுப்பின்புநீயும், பொறுத்தமுள்ளவன்னிபற்பமுடனே
தாக்கு பேருலகிற்சன்னியற்றுப்பிழைப்பார்பாரு, வருத்தமில்லைகை
கண்டதொழிலுமாகும் வண்மையர்யாக்கோபுவழுத்தினாரே. (௬௱௰)

பேதிகண்டவுடனேதான்பத்துஒத்து பேதமிலா வாக்கிராணக்க
ளங்கம்பற்பம், நீதியாய்மாத்திரைகளன்னப்போக்கு நிலையாக வொரு
626 நாளிற்செய்துகொள்ளுநு, சோதிபெற்றநாளிரண்டிற்செய்யவேண்டாஞ்
சுருக்கலேகுளுமைவக்துமூடிப்போகும், நாதிதானில்லாம லுயிரும்
போகு நலமானயாக்கோபுநவின்றவாறே. (௬௱௰௧)

நிம்பயிலையிணையெட்டுவுரலிலிட்டு நேகயிடிபாணிரொட்டி சாலிலி
658 ட்டு, தம்பமறவெட்டிலொன்றாய்க்காய்ச்சிக்கொண்டு தனையெடுத்துகி
ட்டிகட்டிப்பிழிந்துதன்னை, நிம்பியிடுஅரன்பீசம்பலமுமஞ்சு நிரம்பிட்
டெட்டியெரிகுழம்பதாக, நம்பியெடுகல்வமிட்டு அரைநேர்சாமம் நாடி
பெடுமெழுகாகுநாட்டிலோர்க்கே. (௬௱௰௨)

(எல்லிணை.)

ஈரவெங்காயமதுகளச்சிக்கொட்டை யிலையிடித்து இரணடெடை
659 யும்படியுமிட்டு, காரமுள்ளமுத்தெண்ணைபடியுமொன்று கருத்தரித்த
நந்திவினைபலமுங்கால்தான், கோலமுள்ளரசமெழுகுபலமுங் கால்தா
ன்கூட்டியெரிவடிகட்டிப்பூசைசெய்து, பாரமுள்ளயெண்ணையதுபண
மும்வீதம் பாச்சிட்டோய்தீரும்பரிசுகேளே. (௬௱௰௩)

பாரிந்தயெண்ணை தனைமூன்றுபோது பாச்சிடவேபாரிசமாஞ்சு லையெல்லாம், சாரியந்தப்படிபோடுமேகமெல்லாந் தாக்கிநோயடிபடுங் காண்மகோதரங்கள், கூறிந்தப்படிபோடும்வாதமெல்லாங் கொள்ளைய துகொண்டாப்போலோடிப்போகும், சோரிந்தமேகவெட்டைநீர்களெ ல்லாஞ் சுவறிடுங்காண்வாயுவெலாஞ்சுட்சமாமே. (௬௱௬௰)

சுவரிடுங்காண்பௌத்திரங்கள்மூலரோகஞ் சொல்லரியநீராம்பல் துடிகள்போகும், கவரதுபோலாகிவிடுமெண்ணைப்போக்கு கைகண்டு கும்பமுனிகருத்தில்வைத்து, தவரிடாதெனக்குரைத்தாருலகத்தோர் கள் தான்பிழைக்கச்சொன்னதிந்தமனர்க்கந்தனையே, எவரிடத்துஞ்சொ ல்லாதேபுளிப்புதள்ளு இனமாகவுண்டவர்க்குப்பிணிகள்போமே. ()

(காரிநாகபதங்கம்.)

காரியெடைசோரனுமேகூடச்சேர்த்துக் கரண்டியிட்டேயிலுப்பை நெய்யிலுருக்கிமெள்ள, காரியிட்டுப்பத்திரண்டுதரமுஞ்சாச்சி சரியா வேகரண்டியிட்டுவுருக்கிமெள்ள, கூறியதோர் சூதமிட்டு வுருக்கத்தா னே குற்றமறமுன்னெண்ணையிறையவிட்டு, பாரியிதுபத்துமதுயெரிய விட்டுப் பாகமதாயெடுத்துசீரையிடைபோகாதே. (௬௱௬௰௨)

போகாதேஅன்னமிட்டுவுடைத்துஅன்னம் பூட்டியளாவில்லைகட் டுகிடத்திலிட்டு, பாகமாயெரித்திடவேயுயரவேறப் பார்த்திடவுமெடுத் துவைத்துஅடியில்நின்ற, தாகமாய்வில்லையைச் சோறவிட்டுத் தாகதி யேவில்லைகட்டிப்புடமூன்றிட்டால், நாகமாம்வில்லையது சிவந்துபோகு ம்நாதாக்கள்சொன்னதிந்தநாட்டந்தானே. (௬௱௬௰௩)

எறிகின்றசூதமிடைபுகைநீர்விட்டு எரியமுலிற்றபனைனிடமவைத் துப்பாரு, கூரியதோர்காளானுஞ்சிவந்தவில்லை கூட்டியதைகடமிட்டு எரிநேர்ப்பாக, மாரியெடுசிவந்துநிற்குபரவியில்சீறுமயமாகத்தாக்கிட வேயொன்றதாகப், பாரியதுவமமதுபத்துமாகும் பாலித்தார்யாக்கோ புபண்பதாமே. (௬௱௬௰௪)

தேனிலிடுசகலநோயெல்லாந்தீருஞ்செங்கதிராமேனியதுஇரும் புபோலாம், வாணிலேயிப்பாகம்பொய்யோவென்றால் வண்மையுள்ள ஆண்டவனுர்பொய்யதாகும், ஞானிகளுக்கிவ்வேதைசொன்னமார்க் கநாட்டிலுள்ளநல்லவர்கள்செய்துகொள்வார், கூனுமிராதவர்கள் செ ய்யமாட்டார் கொட்டினார்யாக்கோபுகுணமிதாமே. (௬௱௬௰௫)

(மகோதரத்துக்கு.)

வீரமுடன்பதக்கபம்பலமுநாலு வீதமிடைமிளகுசுக்கு தந்தி கூட்டிபாரமுளவெல்லிமுள்ளிகடுக்காய்நோப்பார்த்துஅரைபுகைநீர

ம்சாமம்ரண்டு, கோரமதாயுத்தியளவாகவுன்னடை கொடுத்துவிடுமகோ
தரங்கள்முப்பத்தொன்றும், நேரமில்லையோடிவிடுநிமிஷந்தன்னில் நிச்
சயமாயாக்கோபுநேர்சொன்னரே. (௪௨௰)

நல்லிரும்புவேரோடையாஞ்செம்புநேரோ நாட்டியனைபொடியாகக்
குகையிலிட்டு, மெல்லவதையுருக்கியிடப்புட்டுப்போலாம்விரும்பியெ
672 டுரண்டுமுக்கால்நாத்தஞ்சூடன்,செல்லநிறுவிரண்டுமனைநிறுத்துக்கொ
ள்ளு சிறுகவதுவீரமதையிரண்டுகாலாம், சொல்லவிந்தவைந்துடனே
நிறுத்துக்கல்வஞ் சுருதியுடன்பாணிவிட்டுஅரைத்துக்கொள்ளே. ()

அரைத்துவில்லையங்கியிடுப்த்துந்தூமம் அதின்பேரு சுயமக்னிய
673 தைநிறுத்து,வரைத்துபலமொன்றுநிறுவேலிவேறுவனக்கடுகுழமமொ
டுசிறுதேக்காகு, நிறுத்துஎடுஆனைதிப்பிலியிந்துப்பு நேரானகோஷ்
டமொடுவகைக்குழன்று, அரைத்துநிறுகாயங்கால்வசம்புகாலாங் குண
மானகடுகுபொடிஅரையும்போடே. (௪௨௨)

(அயக்காந்தலேக்கியக்குளிகை.)

இளவறுப்பாய்ச்சூரணித்துச்சுயமக்னிசேர்த்து இதிலரைத்துசா
674 மம்ரண்டுயேலிநீரால், குளமானசர்க்கரைதானிடையேசேர்த்து குற்ற
மறக்காபவைத்துவெருகடிதூள்கொள்ள, உளமகிழும்வெந்நீரிலுண்ண
க்கிராணி ஓடிவிடுமுதிர்வாயுமூகவாதங்கள், இளகிவிடும் வாதமெல்லா
ம்கடலேபுக்கும் இருந்துரைத்தார்யாக்கோபுஇதமாய்த்தானே. ()

நல்லிருபுவேரோடையாங்காந்தநேராம் நாட்டியனை வில்லைகட்டி
675 நூநிப்போடு, வெல்லநிறுபலமொன்றுசேர்ந்திருதம் இதையனைக்கக்கரி
போலாம்காந்தமிட்டு, கொல்லஅரைபிம்பாகுமுத்தக்காசு கொத்தமல்
லிகொடிமுந்திரியேலமோடு, சொல்மிளகுகிராம்புடனேவேலிதிப்பிலி
சொல்லரியசாதிக்காய்கூகைநீறே. (௪௨௪)

கூரைநீர்சாதிப்த்திரிவால்மிசி குடிலவங்கபத்திரியும் வகைக்குழ
676 ன்று, பாகமுடன்கையாநீர்தன்னுலாட்டிப்பதியவிடுசர்க்கரைநேர் விட்
டரைத்து, யோகமுடன்வெருகடிநெய்தேனிற்கொள்ள யிதையாருநா
ளருந்தஅந்தரவாய்வு, தாகமுடன்பாண்டுசுரமபக்கந்தூக்கந் தக்கபித்
தமேகமெல்லாம்போகுந்தானே. (௪௨௫)

நாம்பத்திரண்டுபித்தம்ரோசிகங்கள் நல்லஅன்னதோஷமொடுவூ
677 ஷ்ணநோய்கள், காற்புற்றுசேத்துமங்க ளக்னிமந்தங் கணம்வாயுகை
யெரிவுகாந்தல்வீக்க, மேற்புற்றுநோய்களெல்லாந்தீர்ந்துபோகு, மெய்
வலுக்குப்புளியுப்புதள்ளியுண்ணு, நாம்பத்துநாளதனிலோராசந்தாடு
ரலமாரையாக்கோபுநாட்டினரே. ( ௨௬

## (கோரோசினைக்குளிகை.)

வச்சிரத்தினைப்பிரகம்பலந்தானென்று வகைசிறுத்துவிரங்காலிட்
டுப்பாணி, தற்செயலாய்க்கல்வமிட்டரைாக்சவெண்ணை தனையெடுத்து
க்கதிரில்வைத்துப்புடமூன்றிட்டு, இச்சைபடவெடுத்துபச்சைப்பூரந்த
ன்னை யிடைசேர்த்துஅரைாபாணிபுடமொன்றிட்டே, உச்சிதமாயெடுத்து
த்துறச்செந்தூர மிடைசேர்த்துஅரைாசாமமிசையத்தானே. (௬௨௭)

ஆவின்கோரோசினையுங்குங்குமப்பூ அடவானஏலமொடுகிராம்பு
கோஷ்டம், தாவிபெடுசாதிக்காயக்கிராகாரம் தனைசிறுத்துவகைக்கொ
ன்றுகல்வமிட்டு, ஓவியமாய்சந்தனமும் லவங்கபபூவு முடன்தண்ணீர்
விட்டெட்டுமொன்ருய்க்கரய்ச்சி, ஏவியேபதையிறுத்துச் சாமம்நாலு
இதமாகஅரைாத்துமெழுகாகத்தூக்கே. (௬௨௮)

நல்லாகவ்ரைாத்துருட்டியுத்திபோலே நற்கதிரிற் காயவைத்துமே
ணிப்பாலில், வெல்லஅதையோருருண்டையுன்ணச்சொல்ல விதமாக
யிட்டிடவேதொண்டைக்கட்டு, வில்லங்கமானசயம்சிலேட்டுமங்கள்வி
தமானதொன்னூற்ருர்பறந்துபோகும், கொல்லவந்தஙமர்சன்னிதோ
ஷமெல்லாங் கொடுமைவிட்டேயோடிவிடுங்குணமதாமே. (௬௨௯)

குணமாகுமபக்கமொடுவாதிபோகுங் குடல்பிரட்டுவலியிசிவுகு
டிலங்குத்தல், சிணமாகுமினியசயந்தாகங்காசஞ் செப்பரிய வாயுமந்த
காசம்போகும், கிணமாகும்புமயிசிவுநடுக்கல்போகு மெடுப்புள்ள நோ
ய்கலெலாமேங்கிநிற்கும், கணப்போதிற்போகுமென்று யாக்கோபு
சொன்ஞர் சணமொாத்தார்கோரோசினைமாத்திரைதானே. (௬௩௰)

## (அஞ்செண்ணை.)

சிம்பயெண்ணைபடியளாந்துசட்டியிட்டு நேராக முத்தெண்ணையெ
டையவ்விதம், கம்பமிலாப்புங்கெண்ணைபடியும்விட்டுக்கலக்கியேபுன்
னையெண்ணைபடியும்விட்டு, நம்பியெங்நல்லெண்ணெய் யோடேயஞ்சு
நலமாகநாள்மூன்றுவைத்தபின்பு, தெம்புடனே கடைச்சரக்குசொல்ல
வென்று திறமாகயாக்கோபுசெப்பினரோ. (௬௩௧)

பேர்சொல்லாவெள்ளுள்ளிவசம்புகாயம்பெருமையுள்ளதிரிகடுகு
கிராம்புவோமம், ஆர்சொல்லாச்சுதகுப்பைகடுகுரோணிஆதிசித்ரமூல
ம்வகைக்கொன்றுகாடி, பேர்சொல்லத்தானைாத்துஎண்ணைதன்னில்பி
ரட்டியதையடுப்பிலிட்டுக்காய்ச்சிப்பாரு, வாரானமெழுகுபதந்தனில்வடி
த்து வடிவாகக்கரண்டிகொள்ளவாதம்போமே. (௬௩௨)

வாதமெல்லாந்தீருமண்டவாதந்தன்னை மடிபிடித்துஅதைக்குமரி
வாதந்தீரும், சேதமாய்படும்வாதங்கூனிவாதஞ் செயமுள்ளமேர்கடுப்

புவாதநீங்கும், வேதமதுமுகவாதஞ் சன்னிவாதம் விருப்பமுள்ளதி மிர்வாதமெல்லாநீங்கும், ஆசரவாடப்புளிதள்ளி யுண்டுபாரு ஆதிமா முனிதேவர்யாகுசொன்னூரே. (சஙங)

(பெருங்காயஎண்ணே அடைவாதமுதல்.)

பெருங்காயங்களச்சிவிளையெட்டேயாகும் பேசரிய முத்தெண் ணைநாழிதன்னில், பருத்ததந்திதோல்போக்கிபலமுங்கால்தான் பசுப தியாம்பரமனுடவிந்துதன்னே, தருங்காதல்முன்மெழுகுவிராடையஞ் சுதனேநுறுக்கிச்சட்டியிட்டுத்திரிகாள்வைத்து, உருங்காத லடுப்பேற்றி மெழுகதாக வுண்மைவடிகொண்டபின்புவுறுதிகேளே. (சஙச)

உறுதியாய்த்துட்டெடைதான்கொண்டுபாரு உவந்துநின்றவாயுவு றும்உண்ட வாதம், அறுதியாஞ்சூலைமுதல்யோனிப்புற்று அடவானகு திவாதம்அக்கதாகம், பெருகநின்றமகோதரங்களாம்பழ்கட்டி பேச்சரி யவுதிரவலிகெற்பச்சூலே, நிருதி அத்திசரமோடு இவைகள் திரும்பிச் சயமாயாசகோபுசீசஞ்சொன்னூரே. (சஙரு)

(எரிப்புண்டசாரநீர்,)

ஏரியிலேவளர்ந்தபிண்ட ஞ்சுண்ணநாலு இதமாகப்படியளந்துதோ ண்டியிட்டு, தோரியதோர்தோண்டி தனிவிட்ட முக்கித் தொல்லுலகிற் சாரமதுபலாதான்பத்து, கூறியசோர்பொடியாக்கிடுவில்லைவைத்து கு ணமாகமேலதோண்டிகவிழ்த்தமூடி, நாரியேசீலைசெய்து அடுப்பிலேற் றிநலமாகவெரித்திடவாய்சாமம்பத்தே. (சஙசு)

(தருசு.)

பத்திட்டுக்கடுமையாயெரித்து ஆற்றி பதியவெடுபிரித்திடவேமே லேயேறி, சத்துநிற்குமயிற்குச்சிதன்னூற்றுனே தனேச்சுரண்டிப்பீங்கா ணிம்பனியில்வைக்க, நித்தியமாய்ச்செயநீராம் ஆறுபோலாம் நீலக்க வெடுசீசாவிலடைத்துநீயு, முத்திபெறத்துருசுதனைத் தோச்சுயெட்டு முதன்பெறவெட்டுநாள் தோச்சுப்போடே. (சஙஎ)

போட்டுமேசுண்ணும்புவீரமேறோ பொருந்தமஞ்சலாந்துருசுமே லேகட்டு, நாட்டவேகவசமிடுஅங்கியிட்டு நலமாகக்குக்குடத்தில்நீறிப் போகும், கூட்டுமேசுதனிடைநீலம்போடுகூட்டியனசாரநீர்தன்னிலு லே, வாட்டுமரசகாப்பூரநாளிலொன்று வகையாகநிறுதிட்டு அரைத் துக்கொள்ளே. (சஙஅ)

நல்லாகஅரைத்தளட்டிலொன்றும்வீரநல்லபச்சைசக்கர்ப்பூரமெட் டிலொன்ற, வில்லாகமுன்னீரலரைத்துச்சாமம்விறாதுபடக்குக்குடத் திற்போட்டெடுக்க, செல்லவொருசருவாகும்தாளகச்செயநீர் திடமா கவுருக்கினை குறைவைத்தாக்கு. கெல்லமைதங்கநிதமிட்டத்தா ளம் வெள்ளியுமிசநாம்சேர்த்துளுப்போடே. (சஙகூ)

கனகமதுயிரண்டெடைதானிற்குமந்தக்கனகத்தையெடுத்துமெள்ளவிற்று க்கொள்ளு, இனமொத்தவிடந்தனிலேநின்றவாழு மினமானஞானத்தையி யல்புபாரு. உணவுடனேயாறுதலமேறிப்பாருவுத்தமித்தாய்வந்துநிம்பா லுலகந்தன்னில், சனகனருள்பெறுவீராமிந்தப்போக்குதாஷ்டிகவான்யாக்கோபுசொன்னவாறே. (௪௪௰)

கூத்தனிடைவாழ்மடந்தையிடையேசோத்து குழிக்கல்வமிட்டரைத்துஅராக்கம்பாலால், நேத்தியதாயரைத்துகதிர்காயவைத்து நேருள்ளஅப்பிரகம்வீரம்காலாம், பார்த்துஅரைபாணியதால்வெள்ளையாகும்பதிவாகப்புடமிட்டெரித்துக்கல்வம், சேர்த்துஅரைபாணியால்முன்னுண்டைமேலே செப்பியிடுஉண்டையொன்றுகவசநாலே. (௪௪௧)

(தாளகக்களங்கு.)

கவசமதுகட்டிசுன்னந்தன்னிலிட்டுக் கனியவதைமேல்மூடிச்சுன்னத்தாலே, துவசவெரியடுப்பதனிற்சாமமாகத் தூக்கியிரு சாயமெரியெடுத்துப்பார்த்து, நவசமதுமேற்கவசம்பிரித்துத்தள்ளி நாடியெடுகுழிக்கல்வமிட்டுநல்ல, உவசமதாயுண்டையிடை யிரதஞ்சேர்த்து வுண்மையுள்ளவீரமதுஅரைக்கால்போடே. (௪௪௨)

போட்டுபச்சைக்கர்ப்பூரமரைக்காலிட்டுப் புகலரியஅன்னமென்றசோற்றாலாட்டி, நீட்டுவில்லையங்கியிட்டுயெடுத்துமேலே நிலவரமாய்த்துணிசுற்றிச்சுன்னமுப்பும், காட்டுஅதை அரைகட்டுப்பெரிய தாகக்கருத்துமேவபுடம்போடக்குருவுமாகும், தேட்டுவருமென்றுசொன்னார் யாக்கோபுதானுந் திறமானகளங்கமதுசெய்துபாரே. (௪௪௩)

களங்கமதைதுரிசினிடசெம்பில்ரண்டு கணக்காக வொன்றிடவேபொடியுமாகும், உளங்குளிரமதியதனையூதிப்போடு உண்மையுள்ள மட்டமதிற்பாதியேமம், தளம்பவதைத்தகடடித்துப்புடங்களிட்டால்தப்பாமலேமமதாந்தாக்கியாடு, பளம்பழுத்தவரெருக்கும்வாதமாகும்பதிவானயாக்கோபுபலன்சொன்னாரே. (௪௪௪)

பொய்யாதுவாதங்கள்களங்கமார்க்கம் போககோடே செய்தாக்காலேமமாகும், வையகத்தில்காட்டாதேசெயலைத்தானும் வகையாகப்பொருளறியார்மாடுமேய்க்கி, மெய்யாகச்சொன்னாலும் விருத்தமான்பார்மேதினியிற்பொய்யென்பார்கழுதைமூடர்கைதனிலேவெண்ணெய்தன்னைவைத்துக்கொண்டு கனிவாகவுருக்கரியார்கருத்தில்லாரே. ()

(அயம்நாகக்கிளங்கு.)

அரிதாரம்நாற்கழஞ்சுஅயமுநோரயதையரைத்துவுருக்கிமெள்ளக்கல்வமிட்டு, பெரிதானநாகமதுகழஞ்சுநாலாம் பிசகறவேவீரமிடுகை

யத்தட்டி, விரிவாக அரைத்துநாகவல்லிச்சாற்றால் விதமாகவில்லையக்கி புடமுமிட்டால், குறிபோலாமஞ்சளதுயெல்லாம்பற்பம்கூட்டியெடுமுன்னயத்திடை தான்சேரோ. (சசகூ)

இடைசேர்த்துப்பொற்றலையாலாட்டிவில்லை யெடுத்துகதிர் காய வைத்துப்புடமுன்றிட்டு, தடையறவேசிவப்பாகுமெடுத்துநல்ல தகக முள்ள துரிசில்ரவிமுன்மட்டம்போலாம், விடையாகச் சேர்த்திடவே யேமமாகும் வெற்றிபெறப்பணவிடைதான்தேனிலுண்ண, தடைபடா ரோயெல்லாந்தவறிப்போகுந் தாட்டிகவான்யாக்கோபுசாற்றினாரே. ()

குருட்டுநாயீசலைத்தான்தாவித்தாவி குலைகுலைந்துவளையிட்ட குணமதாகும், திருட்டுநாய்சிறுவீட்டிலுள்ளேசென்று திடமாகக் கதவடைத்து அடிபட்டாப்போல். இருட்டறையிற்புகுந்துகள்ளன்பிடிபட்டாப்போலினமாகக்கைபாகந்தெரியமாண்பர், உருட்டிமுழுத்தேங்காயை நாய்போலொக்கு முண்மையாயாக்கோபுவுறுதிசொன்னார். (சசஅ)

(காரிநாகக்களங்கு.)

வாசுகியினிடைசமனாய்க்காரிசேர்த்துவட்டமிட்டுவுருக்கியிடு அன்னந்தன்னால், தாசமறச்சாய்த்துயெடுரண்டுபத்து தகைமைபெறக்களிம்புஅறுக்குகையிலிட்டு, ஆசையுடனரிதாரமிடையேதாக்கு அதுகழுக்குக்கல்வமிடுஅன்னந்தன்னால், தாசமுறஅரைத்துவில்லைகதிரில்வைத்துதாட்டிகமாய்ப்புடம்போட்டுயெடுத்துப்பாரோ. (சசகூ)

யெடுத்துஅன்னமீதிட்டுச்சாமமெட்டு இழுத்தரைத்திப்படியேசிவக்குமட்டும், அடுத்துயிடுசிந்தூரமுருக்கம்பூப்போல்அதையெடுத்து துருசுரவிநூற்றொன்றிட்டால், கொடுத்துவச்சயேமமாமிந்தவித்தைக் கொள்ளைகொள்ளையாயிருக்கும்வாதமாகும், தொடுத்தகையின் பாகத்தைமறக்கவேண்டாந் தொல்லுலகில்ரசவாதந்தொழிலுமாமே. ()

கண்டுயெடுபணவெடைதான்தேனிலுண்ணக் கதிர்மதியாநதேக மதுகற்றூணாகும், தொண்டுசெயவாருலகத்தோர் சொல்லவேண்டாந் தோகையர்கள்வசமாவார்துலங்கத்தானும், பண்டுசெய்த பழவினைகள் தீர்ந்துநல்ல பதிவானபிணியகன்றுகடலேபுக்கும், வண்டுபோல்மயிராகும்பாகமாக வழுத்தினார்யாக்கோபுவண்மைதானே. (சருக)

நாகப்பழம்போலாகுங்களங்குதானும் நற்சிவப்புசிந்தூரம்அலரிப்பூப்போல், பாகமதுசுன்னந்தான்மல்லிப்பூப்போல் பதிவானமெழுகதுதானிளக்கமாகும், தாகமதுதயிலந்தானிறங்கறுப்பு தாட்டிகமாய்சிறங்களறிமருந்துதன்னை, யோகமதுவந்திடுங்காண்பாகமாகு மித்தொழிலையாக்கோபுமிதஞ்சொன்னாரோ. (ருசஉ

## இயாக்கோபுக்குப் பூதானந்தர் - வரலாறுகூறல்.

சொன்னமொழிதவறாத யாக்கோபுக்கு தொல்லையற்றுநின்ற தொருமார்க்கமெல்லாம், நன்னயமாய்க்கூறுகிறார்பூதாநந்தர் நற்சீஷா யென்குருவுஞ் சொன்னவாக்கு, உன்னிதமாம்பூவுலகி லையாகேளு ஒருக்காலும்பொய்யாதுஞானமார்க்கம், கன்னியமாயெந்தனுக்காயுப தேசித்தார் கண்மணியேயெட்டெட்டுசித்துதானே. (௪௫௩)

சித்தானகருவிகரணங்களெல்லாந் தெளிவானமாந்திரிக யோகமார்க்கம் - முத்தானமைபோக்கு வுளவுமார்க்கம் முதலானவயித்தியநூடன்னைச்சொன்னார்- கத்தனைதானறியும்வகைக்காணச்சொன்னார் கருவானமனோன்மணியாள்நிலையைச்சொன்னார் - எத்திசையிற் பகைவரெலாநடுக்குமார்க்கம்எளிதானசூக்குமத்தைக்காண்பித்தாரே.

காண்பிக்குமுன்னமேயையாநானுங் கருவறியாமூடர்கள்தன் மொழியைக்கேட்டு, மாண்பர்கள்தானலையுமந்தமார்க்கந்தன்னை மண்டலத்திற்கண்மூடி ஜபத்தைச்சொன்னார், வீண்காலங்கழித்தல்லோ விருதாவாக விட்டுவிட்டுப்பிரட்டிஜபமாலைதன்னை, காண்டுவிட்ட பேயனைப்போ லட்சாலட்சங் கணக்கணக்கானவுருவதனைசெய்திட்டேனே. (௪௫௫)

செய்தேனேகணேசருடபூசைசெய்தேன் செயமானவாலைதனைப்பூசித்தேன்யான், வைதேனையறுமுகவர்தன்னைவேண் டிவகையாக வயிரவர்தன்ஜபத்தைசெய்தேன், கைதவமாயெண்ணியல்லோகாளி பூசை கனமானகுறளிகுட்டிசத்திபூசை, மெய்யென்று மாடனிருளன்பூசை மேலானபூசையெல்லாமுடித்தேன்தானே. (௪௫௬)

முடித்துமேபலனொன்றுங்காணவில்லை மொருபொருளுமறியாமற்போனேனப்பா, கடித்துமேபற்களெல்லாமுதிரவேதான் கலங்கினேன்கண்ணீர்விட்டழுதேன்சேயே, நொடிப்பொழுதிலூரெல்லாந் திரிந்தலைந்தேன் நோயுற்றமனிதனைப்போலேங்கின்றேன், தடிபிடித்தபித்தர்களைப்போலேயையா தற்பரனையறிந்தகுருவந்தார்தானே.

தானானகுருவதனை நமஸ்கரித்து தரணிதனில் மூன்றுதரம் வலமாய்வந்தேன்- கோனானயென்குருவா மூர்த்திநாதர் கோடானகோடி பொருளெனக்குயீய்ந்தார் - நானானமமதையதை யொழித்தேனையா

நலமாகப்பன்னிரண்டு்வருடங்கார்த்தேன் - தேனுனமனேன்மணி யாள் விலேயைக்கண்டேன் தெவிட்டாததெள்ளமுதமுண் டிட்டேனே.

உண்டேனேமனதிற்குடெய்வங்கண்டேன் வுற்றபொருளிருக்கு மிடமாராய்ந்தேதான், கண்டேனேநிலவதனேக்கணடுகொண்டேன்கா ணுதகருவியெல்லாமென்னுக்குள்ளே, விண்டேனேயெட்டிரண்டும றிந்துகொண்டேன் வேதாந்தவெட்டவெளியதனேக்கண்டேன், சண்ட மாருதம்போலேவாசிமார்க்கம் தயங்காமல்நாதவிந்துகண்டேன்பாரே

பாரேதான்பன்னிரண்டுவருடமையா பாங்கானகற்பாறைக்குள் ளிருந்தேன்- நேரேதான்மறுபடியு மெழுந்துவந்தேன் நிலேயானவக த்தீசர்தன்னேக்கண்டேன் - சேரவேயெந்தனுக்கு வுபதேசங்கள் செப் பினுரவ்ரருளேப் பெற்றேனப்பா - ஊரோதான் திரிந்தலேந்து வருகும் போது உண்மைபொருளறிந்தசண்முகத்தைதானே. (சகூய)

முகமான அறுமுகவர்தன்னேக்கண்டேன் முடிவானபொரு ளெல்லாங் காண்பித்தார்பார்- தகமையுள்ளகந்தீசர் தன்னேக்கண்டே ன்தன்மையுடனெந்தனுக்குவுபதேசித்தார்-சகமுழுதுஞ்சுற்றியேசித் தர்பாதம்சங்கையறவேண்டுமெனதெரிசித்தேன்யான்- அகமகிழ்ந்து அருபியென்றசோதிபாதம் அடைந்தேனே கொலுமேடை யதனில் தானே. (சகூக)

தானுனகண்மணியேதயவுள்ளானே தரணிதனில் பொய்க்குரு க்கள் வருவார்கோடி - கோனுன குருவென்று கூறிக்கொண்டுகோடி பொருளறிந்தவன்போல் குணங்கெடுக்க- தேனுனமனேன்மணியாள் பதிகண்டோன்போல் தெவிட்டாததெள்ளமுதமுண்டோன்போல- தானுனமமதையதை யொழித்தோன்போல தரணிதனிலுனேமயக்க வருவார்காணே. (சகூஉ)

காணவேபொருளதனேயுபதேசிக்க கருவானகுருவென்றுகாட்டு வேன்பார், தோணவேயுந்தனுட வுளவுமார்க்கம் தோய்ந்தபொரு ளியாவற்றுஞ்சுருட்டிகொண்டு, வேணபடிபொய்பேசி வெருட்டுவா ன்பார் விருதாகவவர்களிடமேமாராதே, வீணுனவீணருடன் சேர்ந் தாயானுல் விழலுக்குத்தானிறைத்தநீராவாயே. (சகூங)

நீரானயெந்தனிடனூலேப்போல நேர்மையுடனென்னூலுஞ் சொல்லவில்லே, பேரானபதினெட்டுசித்தரெல்லாம் பிரட்டாகப்பரி பாஷையாகச்சொன்னுர், தேருதபேரெல்லாமெந்தனூலில் தெளி

வாகக்கண்டுகொள்வார்மார்க்கமெல்லாம், ஓராறுயீராறுவனாதான்கா
செய்துபார்யின்னூலேசெவ்வையாகச் செப்புமிந்ததிறவுகோல்சூட்சந்தன்னைக், கொய்துபார்பற்பலவாய்ப்போகொட்டாமற் குழந்தாய் நீகேட்டதினுல் கூறுவேன்யான், உய்துபார்வாய்வதுதான்மனமாய்ப்போச்சு வுத்தமனேயம்மனந்தானகாரமாச்சு, எய்துபார்த்துண்டாக் காலாதிகற்பம் என்மகனேவாய்வதினுல்வகாரமாச்சே. (கூாயசு)

ஆச்சுதப்பாவாய்வானமனதைமெள்ள வழிமாறிப்போகாமல் வசமாக்கிக்கொள், ஏச்சுதப்பாயிச்சையிலே மனம்போனுக்கா லென்ன சொல்வேன் சுழல்காற்றிலகப்பட்டாப்போல், போச்சுதப்பாதுரும்பாகிசுழலுங்கண்டாப்போனமனம்சுழண்டாக்கால் பொருந்துமோசொல், பேச்சுதப்பாநூல்களெல்லாமிந்தவார்த்தை பேய்மக்காள்மூச்சிழுத்து ரேசிப்பாரே, (கூாயஎ)

ரோசிப்பாரோசகந்தானென்றுசொல்லி ரெந்தனுடநூல்பாராதோஷத்தாலே, வாசிப்பார்நூல்பேசும்வழியைக்காணார் வந்தபடிபேசியல்லோ வழக்குசெய்வார், பூசிப்பார்ஜகக்கியானியின்னூல்தன்னை புவிதிரிந்துபோகாதேபுகழ்வேன்கண்டாய், நேசிப்பார்தவசிகளெந்தனூலை நேர்வாகயான்சொல்லும்வாசிகேளே. (௯௱௰௮)

வாசிப்பாரிதுவாசிரோசிப்பாய்கேள்வண்டபிண்டசர்வத்தில் நிறைந்துநீயும், ரோசிப்பாய்ஓங்காரத்துள்ளேநின்று ரெவ்வுயிரில்நிறைந்ததப்பாகண்டுவாங்கு, காசியப்பாயென்றுசொல்லிப்போய்விடாதே கங்கைதீர்த்தஸ்தானமென்றசங்கைவேண்டாம், யோசிப்பாய்மூச்சிழுக்கச்சொல்லவில்லை ஓமைந்தாயுந்தனுக்கே யுரைத்தேன்தானே. (௯௱௰௯)

உரைத்தேனப்பாஅகாரத்தின்விவரமெல்லாம் உள்ளபடிசொன்னேனப்பாகண்டுகொள்ளு, மறைத்தப்பாவுந்தனுக்குச்சொல்லவில்லை மார்க்கமிதுமயங்காதே மர்மஞ்சொன்னேன், குறைத்தப்பாயின்னூல்தான்சொல்லாதப்பாகுருபுத்திராளின்னூலைச்சரணஞ்செய்வார் நிறைத்தப்பாயான்சொல்வேன்கேளுகேளு நிடரில்லைநிராமபந்தானுகாரங்கேளே. (௯௱௨௰)

கேளேதானுகாரத்தின்வாறெல்லாம்நீ கேசரம்போற்சொல்லுமிந்ததிறவுகோல்தான், பாளேதான்பிராந்திநீக்கச்சொல்லுமப்பா பஞ்சிலிட்டத்தீபோலப்பகருமின்னூல்,கோளேதான்சொல்லாதுயின்னூல்தன்னில் கோஷ்டமினிச்செய்யார்களின்னூல்பார்த்தோர், மேலுநீதான்மெய்ஞ்ஞானியாகிப்போவாய் மேதினியில்பந்தமதில் சிக்காய்காணே. (௯௱௨௰௧)

காணேதானுகாரமதைசொல்லிவாரோன் கண்மணியேவிண்ணுச்சுகருநெல்லியாச்சு, ஊணேதான்ஓங்காரமாகிப்போச்சு உமைக்கூட்டயட்சரந்தான்வுருதியாச்சு, தேனேதான்தெய்வமணிமாடமாச்சு தேங்கொளிதான்கயிலாயமாகிப்போச்சு,நானேதானுந்தனுக்குச்சொன்னேனப்பா நாட்டிப்பார்வைகுண்ட நிசவீடாச்சே. (௯௱௨௰௨)

வீட்டுக்குள்விளக்கொளியாகிப்போச்சு விதுசிகரசத்திபலேர்கமாகிப்போச்சு, ஏட்டுக்குள்பாட்டிருந்தால்காணப்போமோ யேக்கிராமயமானசொரூபந்தன்னை,நாட்டுக்குள்நாயோட்டுமந்திரமிதாச்சு நானுனக்காய்ச்சொன்னேனப்பாநடந்துபாரு, கோட்டிக்குள்ஒருவனல்லோ அறிவானித்தை கோடிசித்துசணத்துக்குள் ஆடுவானே. (௯௱௨௰௩)

ஆடிப்பார்அகாரமதை யுகாரத்தில்நாட்டி அரகராஅகாரஉகாரரெண்டுஞ்சேர்ந்தால், பாடிப்பார்நிராமயந்தானென்றுசொல்லி பளிங்கேழாம்பூமியின்மேல்நின்றுதப்பா. ஓடிப்பார்சொரூபவெளிக்குள்ளே

நன்றாய் ஒன்றுகேள்நாதமங்கே கேழ்க்கும்கேழ்க்கும், கூடிப்பார்குரு புத்திராள்சேரச்சொன்னேன் குருக்குவழிநேர்யிதுதான்கூடுநன்றே.()

## யாக்கோபுவினவல்.

நன்றென்றீர்என்குருவேபூகானந்தமூர்த்தி நாதாந்தவுகாரமதுக்கிவ்வளவுஞ்சொன்னீர், கன்றென்றீர்கருநெல்லிவுகாரமென்றீர் கணக்காகசொல்லுமையா விண்ணென்றீர்முன். ஒன்றென்றீர்ஓங்காரசத்தமென்றீர் உகாரகயிலாயமான வகையைச்சொல்வீர், சென்றென்றீர்யான்சேர சொல்வீரையா செவ்வையாய்ஒவ்வொன்றின் சேதிசொல்லே. (கூஉரு)

## பூகானந்தர்கூறல்.

சொல்லுனீதானென்றுகேட்டபிள்ளாய்கேளு சொற்பமல்லஉகாரமதுகற்பமல்லோ, மெல்லவேநோக்கிப்பார் உண்மைதோன்றும்மேன்மை ருத்திரசிரசதனால்விண்ணதாச்சு, வெல்லேதான்கைலாயங்கொலுவாய்ப்போச்சு வேதாந்தஞ்சொல்லிவிட்டேன் உன்கண்மையம், நில்லுநீதான்மையவுமைருட-ஸ்தனுச்சு, நிரம்நீலம்திலர்தமப்பாகருநெல்லிசேரோ. (கூஉகூ)

சேர்நெல்லிசோலையாய் நிலைத்துப்பார்நீ செப்பியதோர்சத்தியலோகவைகுண்டங்காணும், பார்நெல்லிசோலைபோய் பஞ்சவர்ணம்பாங்கான்பூரகந்தான் அதிலேசெய்வாய், வேர்நெல்லிசோலைபோய்த்தேடவேண்டாம் வெளிவிட்டேன் உகாரஅகார உளவையெல்லாம், ஆர்நெல்லிசோலைபோய்நிலைக்கப்போறார் அரகராஅறிவுள்ளா யறிந்துநாடே. (கூஉஎ)

நாடறிந்துசோலையிலேநாட்டிப்பார்ப்போர் நற்குறியுனக்குரைத்தேன்நாதத்துள்ளே, வீடறிந்துவிளையாடுவுனக்குச்சொன்னேன் விதைபுருவமையமென்றேவிள்ளும்நூற்கள், ஆடறிந்துஜோடிகலையாமல்நின்று ஆந்தந்தசெயலறிந்து ஆடிப்பார்அங், கூடறிந்துகூடிடுதான் கம்பத்தாட்டம்குறிமையம் பூரஞ்சேர்த்துண்டால்தானே. (கூஉஅ)

சேர்த்துண்டால்பூரகந்தான் செப்பிப்போட்டேன் சேமெம்மையண்டியதால்செம்மையாய்த்தான், கோர்த்துண்டல்எவ்வாறோ யென்றுகேழ்ப்பாய் குறையாமல்நிறையாய்த்தான் கூறிப்போட்டேன், பார்த்துண்டல்வேணுமென்றால்சொல்லிவைத்தேன் பத்தொன்பதாம் அதிகபாட்டுக்குள்ளே, ஆர்த்தொண்டல்செய்தங்கே பார்க்கப்போறார் அதிதமயமுப்பத்திரண்டிலறிபிள்ளாயே. (கூஉகூ)

அரிபிள்ளாய்ப்பரிபாஷைசொல்லவில்லை அந்தந்தநூல்களிலேமறைத்துச்சொன்னார், தெரிபிள்ளாய்விரிவாகசொன்னேனின்னூல் தேங்கொளியைத்தட்டிவிடு தேஜோனந்தம். வெரிபிள்ளாய்வெட்டவெளியாகச்சொன்னேன் வேகவென்றால்வேறில்லைபாருபாரு, குரிபிள்

ளாய்ஙெரிபிள்ளாயன்புள்ளாய்நீ கும்பகங்கொள்கொலுதாண்டு பதிய தாமே. (சூகூய)

பதியதுவேபார்த்தோர்க்கு அங்கொன்றில்லைபார்ப்பவர்க்கொரு ரவோர்பெற்றாரில்லை, விதியதுவேயதிலொருவர்கண்டோரில்லை விம்ம ட்டம்மட்டென்று சொல்லப்போமோ, கெதியதுவேயதுவழையான்சென்றுபார்ததேன் கேள்பிள்ளாய்ககனசராசரமதண்டம், மதியதுவேய டங்கலுந்தானதிலயிசகியம்மகாபெத்தம்துவிததியம்பரிசுத்தந்தானே.

பரிசுத்தமானவிடங் காட்டிவிட்டேனுண்மை பாருலகெலாமனித்தியமது நித்தியமப்பா, இருசுத்தமானவனைகொலுதாண்டிமேல்நீ யிடமதுவேபொருளதுவே யேகிநில்லங், நெரிசுத்தமானபிள்ளாயங் கிருநீமவுனம் நேர்நிராகர்சோதிப்பச்சங்கில்லை. குரிசுத்தமானசுகம் நீசொககிதுங்கங் குவித்துநீயங்கேநில்லு கும்பந்தானே. (சூகூஉ)

யாக்கோபு வினவல்.

தானமதுதனிக்கும்பமெனக்குரைத்தீர் தங்குமிடமதுவெனவே தனிமையானேன், மோனமதுயெனையங்கே யிருக்கச்சொன்னீர் மொழியிலெமைகலக்கவைத்தீரொத்துக்கொண்டேன், தேனமுதுகலந்துண்டவின்பம்போலோர் தேவரீரிடம்பொருளைவல்சொன்னீர், சோனமதுள்மேல்நோக்கி பார்த்திட்டேனுண்மை கோர்த்தகுறிகலைடாமலுமைபோற்றுவேனே. (சூகூகூ)

போற்றியுமைப்பொற்பூவாலர்ச்சித்தேன்யான்பொன் னுலகங்கண்ணுலேகண்டபோதே, ஆற்றிநீயென்மனதைப்பொன்போலயா அடுக்காறுங்கண்டப்பால் நின்றேன்யானும், யேற்றிநீரொருதீபமெங்கும் சோதி யெங்கும்யேகோபமதாயிருந்திட்டேன்யான், மூற்றியேமும் மூலமெனக்குச்சொன்னீர் முதற்பாதமென்குருவேயதுமெய்வாழ்வே.

பூகானந்தர்கூறல்.

அதுவாய்நீயதுவாகவங்கேநிர்ப்பாய் அவ்வருளேயுன்வாக்குவழியேயொக்கும், பொதுவாயுன்தனிவாககுபொய்யாதப்பாபோற்றும்புவிபொற்சிலம்பாலங்கேநில்லு, மெதுவாய்வந்துனையழைப்பார்நீபோகாதே மெல்லெனவேதேடிவந்துனைபணிந்துநின்று, யெதுவாயவந்துனை கேட்டாலதுவைசெவியென்மகனைஜனங்களுன்னைவளைப்பிப்பாரோ. ()

வளைப்புவார் வகண்டமதாய் கண்டபிள்ளாய் வண்டமதுகண்டங்கேவழிவேறில்லை, தினமங்கேசேர்வையாயிருநான்சொன்னேன் திங்களறவிபுரணம்போலெங்கும்பாரு, ஜெனமிங்கேவந்துன்னைபணிகுவார்கள் சேர்வையதுபார்வையதாய சேவித்தந்தனில், மனமகங்கனவத திடுநீமற்றொன்றில்லை மண்ணுலகில்முனியாவாய நினைத்ததாமே. ()

ஆம்வினைத்தவாறெல்லாமதினாலாகும் அஸ்வருளின்விளையாட்டையறியப்போமோ, போம்வினைக்கேவாறெல்லாம் மனந்தானப்பா போகவிட்டால்பொருள் கிட்டாற்பொருந்தினில்லா, நாம்வினைத்தவாறெல்லாம்நம் மாலில்லைநானுனக்காய்சொன்னேனப்பா னன்பனென்று, ஓம்வினைத்தவாறெல்லாஞ்சித்திசொன்னேன் ஓங் ஓங் ஓங் வுண்மையாய்நமபினோர்க்கே. (௬௩௭)

நேர்க்கதிலேநுட்பமதாய் சொல்லிபோட்டேன் நோங்காரத்தினுளவையுமுடைத்துபோட்டேன், தாக்கதிலேகனிக்கும்விடம் சொல்லிபோட்டேன் சரபுருஷநிலையதுவேதயங்காதேநில், போக்கதிலேமனதையனுதினமுமப்பா பொன்போலேயுன் மனதை யதனாலாக்கு, ஆக்கதிலேயுன்மனதையலையொட்டாமல் அங் அங் அதனால ஜெயம் ஜெயமதாமே. (௬௩௮)

ஜெபமாகும்பூரணத்தின்மகிமையாலேசெய்காரியங்களெல்லாஞ் சித்தியாகும், லயமாக்குவுன்மனதையதனாலாக்கு லரிக்குமுதலெழுத்தெனவேயறிந்துகொண்டு,வயமாகும்யகாரத்துள்சென்றுநன்றாய் வளவிட்டுசொல்லவொண்ணுவரணன்சோதி, சுயமாகும்சுயப்ரகாச அரூபாரூபம் சுளுவாயான் அங் உனக்காய்வெளியிட்டேனே. (௬௩௯)

விட்டேன்யான்மாணுக்காயுனக்காய்சொல்ல விதில்சூதுயில்லையப்பா விவேகத்தோனே, பட்டேயான்விட்டபோ தகண்டாப்போலே பாரில்சித்தர்பரிபாஷைபாகச்சொன்னார், தொட்டேயான்காட்டிவிட்டதுபோல்சொன்னேன் துலங்குநவரத்தினம் வொளிதீபம்போல்தான், முட்யோன்யினியுனக்காய் சொல்வேனப்பா மும்மூர்த்திகள்அரூபன் சொரூபன்தானே. (௬௪௰)

சொரூபத்தின்வரலாறுகேள்மாணுக்கா சொல்லாதுயென்னூல் போலெந்தநூலும், இருபத்தின்மார்க்கமதாயின்னூல்போலஇன்னூற்குள் சர்வநூலயிக்கியமப்பா, குருபதத்தின்வழிநமபி வந்தோற்கெல்லாம் குறிகாட்டியிடம்பொருளுமேல்தந்தேன், அருபத்தின்சொரூபமதையடியார்காண அக்கணந்தந்தேனப்பாயதனாலகாணே (௬௪௧)

காணப்பாநான்சொன்னமார்க்கந்தன்னைக் கழறுதேகருமிகட்குயிந்தசூட்சம், வேணபடிப்பொய்பேசும்வீணரோடு வீணிலேதிரியாதேயாக்கோபென்று, தோணவேசொன்னாரேபூதானந்தர் தோய்ந்தபொருளியாவற்றும்பால்போலாக, ஊணிப்பார்ன்சீஷாஆசான்பூதர் ஊர்தனிலேயவரைப்போலார்தான்காணே. (௬௪௨)

யாக்கோபுசீஷனுக்குரைத்தல்.

ஆருமில்லைவடபாகமலையிலேதான் அங் கிருக்கும் வேளையிலே நூலைச்செய்தேன், கோரினேன்குருபாதந்தொண்டுபண்ணி குவலயத்தில்வாதத்தின்திறவுகோலுங், கூறினேன்தனியாகவெழுநாலுங்

குறியாகச்சிவயோகம்நூறுஞ்சொன்னேன், காரியமாய்க்குளிகைமுன்னூறுஞ்சொன்னேன் காட்டாதேகாயகற்பப்பத்துதானே. (௬௪௩)

பத்தானவிழலைமுப்பதுவுஞ்சொன்னேன் பாலகனேவைத்தியமாயிரமுஞ்சொன்னேன், சித்தாவைநயச்சூத்திரலுகித்து, செயநீரிலாடுதற்குமந்த்ரீகம்; முத்தானவைநூறுபாடிப்போட்டேன் முன்னேனேக்காணுதற்குஞானமநூறு, எத்தாட்பூசாவிட்டேன் தூம்பரம்நூறு எடுத்துரைத்தேன்மைபோக்கு வைன்னூறுமே. (௬௪௪)

ஆமடாவென்னைப்போலார்தான்சொல்வார் அரகராவுளவையெல்லாமெடுத்துரைத்தேன், தாமடாவகத்தீசரெந்தனுசான் தடையறவேயுளவையெல்லாமெனக்குச்சொன்னார்; நாமடாவவர்வுளவுக்கைபாகங்கள் நாட்டினேனின்னூல்லிமெத்தவுண்டு. ஆமடாபூகருடவாக்குஞ்சொன்னேன் அன்பாகக்கார்த்திடுவாய் நூலைத்தானே. (௬௪௫)

## தாம்பிர வேதை.

நூலானநூலதனைப்பதனம்பண்ணு நுணுக்கமதாய்ச் சொல்லுகிறேனின்னங்கேளு, பாலானதாம்பிரமாம்வேதையப்பா பகருகிறேன் கருங்கையான்காருவூமத்தன். சேலானகருவுள்ளிமூன்றுமொக்க சேர்த்தரைத்துச்செம்புக்கு கவசஞ்செய்து, மாலாகப்பத்தெருவிற்புடந்தான்போடு மகத்தானசெம்பதுவுமூறல்போமே. (௬௪௬)

போனபின்புமூசையிலேவைத்துருக்கிபோக்கோடேகண்விட்டு ஆடும்போது, மானமுள்ளவென்சீஷாகருங்கையானின் மகத்தானசாறதனைப்பிழிந்துபாரு தேனமுகமபத்தரைமாபாம்தங்கமாச்சு சேரடாமுப்பதுக்குஒன்று தங்கம், வானவருஞ்சித்தர்களும் வாழ்த்துவார்பார் வையகத்திலுனைப்போலவார்தான்பாரே. (௬௪௭)

## துருசுகுரு.

பாரடாதுருசினிடபோக்குசொல்வேன் பதராதேதுருசதுவேபலமதாகும், நேரடாஜெயநீராலரைத்துமைபோல் நேர்மையுடன்பில்லைசெய்துராவியில்வைத்து, கோரடாசிவகரந்தைவண்டுமூலி கோர்த்தரைத்துபில்லைக்குகவசஞ்செய்து, பாரடாபத்தெருவிற் புடந்தான்போடு பாலகனேயென்னசொல்வேன் சுண்ணமாச்சே. (௬௪௮)

சுண்ணத்தின்காரமதை யென்னசொல்வேன் சூக்குமந்தானிவ்வேதைசிடிகைவேதை, பின்னமதுவாராதுயிங்கபாகம் பிழைப்பதற்கு மதிமேலேபத்துக்கொன்று சொன்னபடிகுருவதனைப்பாய்ச்சிடாய்நீ தொல்லைபறம்வபதுபதினாறதாகும், என்னமோமாசொன்னேனென்றெண்ணவேண்டாம் யென்னுசானகத்தீசர்சொன்னவாக்கே. (௬௪௯)

வாக்கான அவர்வாக்குபொய்யாதப்பா வையகத்திலவர்போலவுண்டோசித்து, போக்குதனைவிள்ளாதேகருமிகட்கு புத்தியுள்ளாய்ப்பூசி

த்துப்பதனம்பண்ணு, நாக்கமலத்தாயாரினருளேயுன்னி நடத்தடா யான்சொல்லும் வேதையெல்லாம், தாக்குவேனின்னமுண்டு சிடிகை வேதை தயங்காதேசொல்லுகிறே னன்றாய்க்கேளே. (சுறுயு)

## இரசச்செந்தூரம்

நன்றானபிரசத்தின்செந்தூரங்கேள் நாயகனேரசமதுவே பலந்தான்கொண்டு, குன்றானகுன்றுகனிலிருக்குமூலி குணமுள்ளாய்த் தேர்பூண்டுவளைத்துநன்றாய். பண்ணுகிறேன்ரசமதனையுட்பொதிந்து பட்சமுடனெழுசீலைவலுவாய்ச்செய்து, வன்னயமாய்க்கெசபுடந்தான் வைத்துப்பின்பு நவிலுவேன்புடமாறிபெடுத்துபாரே. (சுறுக)

எடுத்துபார்ரசங்கட்டிசெந்தூரிக்கும் யேகாந்தகரிசனமேரசிகப் புமெத்த, கொடுத்திட்டேன்மூலியுடபரீட்சைகேளு சொல்லுகிறேன் தேள்மீதில்சார்பிழிந்தால், மடிந்துபோம்தேளதுவுமூலியாலே மாட்டுகிறேனரவத்தின்முன்னெறிந்தால் கடிந்துமேபோகாதுதடையாய்நிற்கும் கண்மணியேயதையெடுத்தா லேகுந்தானே. (சுறுஉ)

ஏகுமேபேர்சொல்லிவேர்பிடுங்கில் என்னசொல்வேன் மாரணமாங்கருமமாடும், வாகுடனேநாதாக்களருளினுலேவைளாந்திட்டேன்சாத்திரத்தின்மறைப்பையெல்லாம், சாகாதவரம்பெற்றேன் ஆசானுலே தாரணியில்வாதவித்தைபோகவித்தை, போகாமல்சடலத்தையிருத்திகொள்ளு புண்ணியனேயவ்வித்தைதான்கண்டேனே. (சுறுங)

கண்டேனேஞானமுதல்மார்தரிகம் காரியமாய்வயித்தியத்தினுளவுங்கண்டேன், சண்டமாருதம்போலயிறப்போர்தம்மை சாகாமல்பிழைப்பதற்குவுளவுங்கண்டேன், எண்டிசையில்தானிருக்குமூலியெல்லாம் யென்குருவாமகத்தீசராலாம்கண்டேன், விண்டேனேயுந்தனுக்காய்விவரமெல்லாம் விருப்பமதாய்ச்சொல்லுகிறேன்னின்னங்கேளே. (சுறுச)

சொல்லுகிறேன்செந்தூரம்பத்துக்கொன்று சொகுசாக மதிமேலேயீய்ந்துபாரு, வெல்லுவாய்வபததுவுமொன்பதாகும் வேகமடா செந்தூரம்போகருகண்டாய், நல்லவித்தையிவ்வேதைதனைவிடாதே நாடதனில்கிடைக்காதுயிந்தபோக்கு வல்லமையாயாடிப்பார் சொன்னதெல்லாம் வகையறியாமூடருக்குயெய்தாதென்னே. (சுறுரு)

## வெள்ளிவித்தை-

எய்யாதுபின்னமொருமேபாக்குசொல்வேன் யெழிலானரசிதமதுவித்தைகேளு, பொய்யாதுகுருபரனார்சொன்னவாக்கு பூவுலகிலுங்களுக்காய் இயம்புவேன்பார், மெய்யாகத்தாமபரத்தை வருக்கிநீதான் மேன்மையுள்ளாய்வெட்பூண்டின்சாறில்தோய்த்து; கைதவமாய்யேழுவிசையுருக்கிச்சாய்க்க கண்மணியேதாம்பரந்தான் வெளுத்துபோமே.

## வெள்ளக்கபற்பம்

போச்சுடா வினிப்பிறகுசொல்லக்கேளு புகழான வபதிறைதா
கும்- சாமடாவங்கபற்பஞ் சொல்லக்கேளு தபவானகார்பூண்டை வ
ரைத்துகளுருய்-வர்மடாவங்கத்துக்கவஞ்செய்து வகையாகப்பீசெரு
வில்புடந்தான்போடு- நாமடாயிம்பியதோர்வங்கந்தானும் நாயகனே
திருநீருய்நீறிப்போமே ௬௱௭

நீறிப்போமபற்பமது பத்துக்கொன்று மேலயாகத்தாக்பர்த்துக
கிய்ந்துபாரு- வீறியனேசெம்பதுதாக்சுத்திபாச்சு வீணிலேபோக்கா
மல்காலுக்கொன்று- காரியமாய்த்தங்கமதுசேர்த்துப்பாரு கண்மணி
யேவையகதுவெயொன்பதாகும்- காரியர்பால்போகாதே தர்மஞ்செய்து
நன்ருக்சாத்திரத்தைதயாய்ந்துபாரே ௬௱௮

பாரேநீசிவனத்தைசெய்துகொண்டு பண்பாகவெந்தனு- நாலேப்
பாரு- சீரேநீயொருவருக்குக்காட்டாதய்பா சிற்பானுக்கற்பானேத்தி
யானம்பண்ணு-ஊரேநீதிரியாதேயுற்றுப்பாரு ஓகோகோவம்பாளிறு
ட்டம்பாரு - காரேநீகண்மணியேபதியில்சொக்கு கருத்தாகநாதபிந்
தைக்கண்டிடாயே ௬௱௯

## செம்புசுத்தி

கண்டிடர்யின்னமொருகருவைச்சொல்வேன் கழுருதெசெம்பினு
டசுத்திகேளு - விண்டுபார்செம்பதுவைதகடாக்கி விண்மணியே
உத்தாமணியிலேயரைத்து- சண்டமாருதம்போலக்கவசஞ்செய்துசாங்க
முடன்பத்தெருவில்புடந்தான்ரெண்டு- கண்டபடிபேணியிலேப்புடமி
ரண்டு காட்டாதேஊமச்சிப்புடமொன்ருச்சே ௬௱௰

புடமதுதான்தீர்த்தபின்பு குருசெம்பாச்சு புண்ணியனேதங்கம
துகாலுக்கொன்று- தடம்போலச்சேர்த்துப்பார்வயதேழாச்சு தாரணி
யிலிவ்வேதைவெகுசுருக்கு - வடமாயகசடருக்குகாட்டொணாது வா
காகச்சிவலத்தைசெய்துகொண்டு- மடமானஸ்தம்பத்தைநோக்கிப்பா
ருமைந்தனேவாதமெல்லாம்சிக்குந்தானே ௬௱௰௧

## தங்கபற்பம்

சிக்குந்தானின்னமொரு போக்குசொல்வேன் சேயேமைந்தா
டியதாலசெவ்வைபாக - ஒக்குந்தான்கவுதுபமைந்துண்டிமூலி ஓகோகோ
கோவண்றத்துன்ருய்தங்கத்திற்கு- புக்கியேகவசித்துப்புடமேயொன்
றுநீரோட்டுவெயதிருநீருய்நீறிப்போமே - தக்கபடிசொன்னேனேயுக்
தனுக்காய் தயங்காதேவசிகரத்தின்வுளவைக்கேளே ௬௱௰௨

## வசியம்

உளவான்வசியமடா யென்னசொல்வேன் உற்றுப்பார்நான்கூறு
ம்வகைகயைநன்றாய்- தளவான ஆறுமாதக்கற்பிணித்தான் தாரணியில்
மாண்டபின்புமயானம்போவாள்- களவாக அவள்சாம்பலெலும்புவாங்
கிகழுநீதேபனிநீராலரைத்துப்பில்லே - உளவாகத்திட்டிநீகாயவைத்து
உத்தமனேபத்தெருவில்புடந்தான்போடே ௬௬௩

போட்டெடுத்துவில்வத்திற்பலகைமீது யோக்சமுடன்தான்பா
ப்பியைக்கோணமிட்டு - நாட்டிகமாய்உச்சியிலேயகாரம்போடு தயங்
காதேதமருவரையிலநகாரமபோடு- பூட்டடாமருவரையில்மகாரம்போ
டு புண்ணியனேயதன்பிறகுசிகாரம்போடு - நாட்டடாவதற்கப்பால்வ
காரம்போடு நாயகனேபிரணவமாமத்திபோடே ௬௬௪

மத்தியாம்அரைகோடுஞ்சூலம்போடு மைந்தனே ஓம் யநமசிவ
வசியவசிய- பத்தியாய்மந்திரத்தைதியானம்பண்ணு பாவகுபெறலட்ச
முருதன்னைப்போடு - சித்தியாம்செகமேழும்வசமேயாகும் செய்கின்
றதொழிலெல்லாமாடுமாடும்- எத்திசைநீபோனாலும் பணிகுவார்கள்
யென்மகனேகசடருக்குகாட்டொணாதே ௬௬௫

மகனேகேள்விபூதிதனைமேருக்கேற்ற மன்மதன்போல்நீஜொலி
ப்பாய்வையந்தன்னில்- தகமைபெறமடவார்களுனைக்கண்டாக்கால்தல
ைகுவார் அதிமோகசையோகத்தால்- வகையானமாணிடர்க்குவியாதிக
ண்டால் வளமானவிபூதிதனையவர்கட்கிப்க்கால் - சகந்தனிலேகோயே
துபில்லியேது சார்ந்துவருஞ்சூனிபங்களெல்லாம்போமே ௬௬௬

## ஸ்திரிவசியம்

போமேதானின்னமொருகருவைக்கேளு புகலாகேருத்திராஜடை
யேழுக்கப்பா- தாமேதான் ஆதித்தவாரந்தன்னில சார்பாகக்காப்பாடி
யெடுத்துவந்து- நாமேதான்சொன்னபடிபூசமப்பா நலமானநட்சத்தி
ரகாலிலேநீ- காமேதான்வாயதனிலடக்கிக்கொண்டு கண்மணியேசாம
மதுரெண்டுதானே ௬௬௭

சாமமதுரெண்டான வேளைதன்னில் தையலர்களிடமேகொதி
த்ராத- கேமத்திலிடம்பேர்ந்துவருவாளப்பா நீலேப்பிசகிப்போகாதே
நீணிலத்தில்- காமமதுபெருகியுன்னைவந்தடைவந்து கட்டிமுத்தங்தந்திடு
வாள்கன்னியப்பா- கோமானேமாய்கையதிலசிக்காதையா குணமான
யாக்கோபுகூறினேனே ௬௬௮

செம்புசுத்தி,

குணமாகச்சொல்லுகிறேன்வாதவித்தை குவலயத்திற்சொல்லா
தயென்னூல்போல மணமான நூலப்பாயெந்தனூலு மார்க்கமெலாந்
தோயுமடாயிந்தநூலில் - சுணமானவேதையடாசெம்புசுத்தி தாரணி
யில்செம்பதனைத்தகடதாக்கி - கணப்பொழுதில்நீயேகி சுருட்டிமூசி
கண்மணியேகொண்டுவந்துசொல்லக்கேளே ௯௬௯

கேளேதானறைத்தநன்றாய்செம்புகசப்பா கெடியாகக்கவசித்து
மாணுக்கார்-நாளேதான்போககாமல்யெருவோபத்தில்நாயமேபுடம்
போடவூறல்போச்சு- காலேதான்பத்தரைமாற்றாகமச்சுமாட்ட தே
சிவனத்தைசெய்துகொண்டு - வாளேதானான்சொன்ன சித்துவெல்
லாம வையகத்தில்ஆடிப்பார்அருமைதானே ௯௭௰

வெள்வங்கம்சீரமிக்க

அருமையாம்வெள்வங்கசீர்தானேக வப்பனேகாடியிலேக்கொண்
டுவந்து- பொருமையாய்வங்கத்தைத்தானுருக்கி போக்கோமேட்டார்பி
ழிந்தால்சீர்தானேகும் - தருமமதுநடாத்தியப்பாதாணிதன்னில் தம
பானைத்தியானித்துசொக்கிதூக்கு - கருமத்தில்சிக்காதேவேதைப்பா
ர்த்து காரியமாயக்கண்மணியேவிண்ணைப்போற்றே ௯௭௧

போற்றடாசிரமத்தின் தியானம்பாரு பொன்னுலகவதிசயமோ
யென்னசொல்வேன்- நாற்றிசையில்நாதாந்தசித்தசெல்வர்கூ நமனுரை
த்தானவிலக்கிகொலுவில்நின்றார் - காற்றடாவாசியைத்தானேருக்கிபா
ருகருவிளமேகொட்டாவிசுழியைப்பாரு - சாற்றடாசிறுவாசல்தன்னை
நோக்கி தற்பரனூர்பதியேகும்பானைதானே ௯௭௨

பதியானதம்பத்தைநக்கண்டுதேறு பாககுபெறசுழிகிலேயில்யோ
ட்டிப்பாரு- கதியானஉள்நாவுதன்னுவில்தாக்கு கற்பகமேடச்சியெ
ன்றபதியைக்காணு - சதியானநமனுரின்பதியைத்தாண்டி சாதகமாய்
நாட்குநாள்பழக்கம்பண்ணு- உதிக்குமேபஞ்சவர்ணக் கூத்துகாணும்
ஓர்மனதாயசீயிருந்துசொகிப்பாரே ௯௭௩

பாரேநீதசதீட்சை யொன்றுப்பக்காணும் பாநலஙில்பஞ்சகர்த்தா
ளாட்டமாட்டம்- சீரேதான்வழிபிசகாவண்ணம்பாரு சிற்பரனுமென்
தாசாலகத்திசர்பாதம்- காரேநீகொண்டுபண்ணிதியவைபாரு கண்ம
ணியேகாட்டுவார்கலங்காதேநீ- ஊரேதான்திரிந்தலைந்துபோகாதப்பா
உற்றபொருளியாவத்துஞ்சொல்வார்போற்றே ௯௭௪

### வசியயந்திரம்

சொல்லுவார்கண்மணியே யின்னமொன்று சொகுசாகச்சொல்லுகிறேன்வசியயந்திரம் - வெல்லுவாய் ஆறுவரைநேரேகீறி வேகமுடன் ஆறுவரைகுறுக்கேகீறி- வல்லமையாய் யநமசிவவென்றமாட்டு வகையாகசிவயநமவென்றுபோடு - அலலலதநமசிவயவென்றலூணு அடைவாகவயநமசிவென்றுசார்த்தே ௬௭௫

### மோகனயந்திரம்

என்றுமே-மசிவயந-வெழுத்தையூணு ஏகாந்தவசியமடாயிவ்வெழுத்து - ஒன்றுமேயொளிக்காதுசொன்னேனப்பா ஒளிலானமேனைனமாமெழுத்தைக்கேளு- குன்றுபோல்முன்சொன்னபடியேகீறிகுணமானவரைகோமுஞ்சூலம்போட்டு - கண்றேகேள்-மசிவயந-வென்றுபோட்டு கலங்காதேமுன்சொன்னபோக்குதானே ௬௭௬

போக்கானவெழுத்ததனைத் தலைகீழாக போட்டார்முன்சொன்னவாறுபோல- தாக்கானவரைதோறுமெழுத்தைமாறு தளராதேயக்காத்தைப்பிசகிடாதே - நாக்கமலத்தாயாரினருளினாலே நாட்டினேன்மோகனத்தின்மார்க்கமப்பா- நோக்கிப்பார்மோகனம்போலுண்டோசித்து நொடிதானதம்பனத்தின்வாறுகேளே ௬௭௭

### தம்பனயந்திரம்

கேளேதான் தம்பனத்தின்மார்க்கமையா கெணிதமுடன்முன்சொன்னசைகைபோல- படேநமசிவயவென்றுகாக்கு பாலகனே தலைகீழாயரைகடோறும் நாளேதான்யோக்காதவெழுத்தைமாறு நாயகனே தம்பனம்போலுண்டோவாட்டம்-காளேகீகழறுதேயொருவருக்குகருத்தாகப்பேதனந்தான்கூறக்கேளே ௬௭௮

### பேதனயந்திரம்,

கூறுவேன்-வநசியம-வென்றுதாக்கு கூட்டடாமுன்போல வெழுத்தைவெல்லாம - வீறியமேபிசகாதுபேதனந்தான் விண்மணியே விள்ளாதேபேதனத்தை- மீறியேபோகாதேயாசான்போல மீட்சியுடன்மீலபோகாதேசிப்பாரு- மாறுவாய் ஆகருஷணவெழுத்தைக்கேளுமடகுத்தூணவென்சீஷாசெப்புவேனே ௬௭௯

### ஆக்ருஷணயந்திரம்

செப்புவேன்-சியமவந-வென்றுபோடு சேயேநீமுன்போலமாறு
மாறு தப்பில்லையான்சொன்னமாறலைப்பா சாருதமுடனே ஆக்ருஷணஞ்

சொல்லொணாது- ஒப்பமுடன்யெனைப்போலயார்தான்சொல்வார்ஒளி
வுள்ளாய்ஆகருஷணமேபோலேயுண்டோ- இப்புவியில்வித்துவேஷண
வெழுதவையப்பா வின்வேலையுனக்காகயின்னங்கேளே ௬௮௰

வித்துவேஷணயந்திரம்

இன்னங்கேள்-மயநவசி-யென்றுவூணு இகபரத்திலாடுகின்றசித்
துவப்பா- நன்னயமாயமுன்சொன்னவாறுபோல காட்டடாவரைதோ
றுமெழுத்தைநமாறு- தன்னியனேவித்வேஷணமிதுதானப்பா தப்பா
துயான்சொன்னமார்க்கமடா-உன்னியேயெனைக்கேட்ட வப்பாபாரு
ஊர்தனிலேஉசசாடனமியம்புவேனே ௬௮௧

உச்சாடனயந்திரம்

இயம்புவேன்-வயநமசி-யென்றுமாட்டு யெழிலானவரைதோறு
மூன்போலாக- சயம்பெறவேபோட்டுவிடுவென்புள்ளாய்சீ சாம்பான
வுச்சாடனமிதுதானப்பா - நபமானவட்சரத்திமகிமைமெத்த நான்
கூறும்வகைபதுவேபொய்யாதப்பா- லயமாக்கியுன்மனதைத்தேற்றிக்
கொள்ளு லலாடத்தின்விதியதனையழித்துப்போடே ௬௮௨

மாரணயந்திரம்,

அழித்துமேயாயுனைநீவளர்த்திக்கொண்டுவாத்தாளின்பாதமதை
த்தினமும்போற்று - வழுத்துகிறேன்மாரணமாங்கருமமப்பா வகை
யான-சிவயநம-வென்றுபோடு- பழிப்பானவித்தையடா யிந்தவித்தை
பாருலகில்வெகுசூறக்குச்செயயாதே - அழிந்துமேபோகாதேஆக்கி
னியாதம் அப்பனையர்ச்சிப்பாய்அன்பாய்த்தானே ௬௮௩

செர்க்குத்தூள்

தானுணயின்னமொருபோக்குகேளு தயங்காதேமதிமயக்கிபூண்
டோடொக்க- கானுவமயக்கிவோபஞ்சுவெட்டு கண்மணியேகலைப்பி
ண்டகவொடியிறோடு - வானுவதிழல்வணக்கிகொட்டால்வாடி வப்ப
னைபொடிசெய்து தியானமோகி- தேனுனயெவகுழற்சாய்மோகனத்
தான் செபிப்பாயேவுனக்கிடுயார்தான்தானே ௬௮௪

காணவேபொடியன்னி மாதர்மேலே காட்டிவிடுவெள்ளளவுபொ
டியைத்தூவ- தோணவேயவர்களைவுமாறிபப்பா கொல்லுலகிவிழுந்
திருப்பாபொடியினாலே- மாணமருக்கல்வியள்ளாய சொல்லக்கேளு
மண்டலத்திலிருக்காண..ாகொக்குதாரு- ந்ணவேமாத்தை,பேபுலகவே
ண்டாம் நாயகமீ- பிச்சித்தாதர்களைக்கொள்ளே ௬௮௫

### வேமவித்தை

கொள்ளடாவின்னாதேயேமவித்தை கூறுவேன்வார்மூலிகொண்
டுவந்து- உளவபடிமதியதனையுருக்கியப்பா வுத்தமனேகண்விட்டுஆ
டும்போது- நள்ளடாசார்பிழிந்துவெடுத்துப்பாரு நாணிலத்திலேயென்
வசொல்வேன்வபதேதெதன்றுக - கள்ளமதுமில்லையடாயிருபத்தைந்
தாம் கண்மணியேவேமத்தின்வயதுதானே ௬௮௬

### ஆயத்தங்கம

காணுமாயத்தங்கஞ்செப்பக்கேளு தயவுள்ளாயென்னசொல்வே
ன்மகிமைமெத்த- தேனுவயென்சேஷாவட்டப்பத்திரி தேவனென்று
குறுமுனிதான்சொன்னவாக்கு- காணுகானகத்திலிருக்குமூலி கண்
மணியேமதுரைக்குமேற்கையையா - கோணுமலைநாலுகுகைதானெ
ன்று கொற்றவனேயதிலவசிப்பார் குமாரசித்தே ௬௮௭

சித்தானகாசித்து குமாரசித்தவர் செருக்கின்றியம்மலையில்துவா
பரத்தில்- பத்திசெய்யவந்தனராமின்னுமட்டும் பாலகனேயிருக்கின்
றார்நாட்டத்தோடு கத்தனைப்போல்ஜொலிக்கிறதேதேகமப்பா கற்பக
ம்போல்வளருகின்றதையாவாயுள், இத்தகையசித்திருக்குமலையினே
ரம் இலங்குதேவட்டப்பத்திரிதான்காணே ௬௮௮

காணுமேயான்கூறு மூலியெல்லாம் காட்டுவார்குமாரசித்தைக்
தொண்டுபண்ணால், தோணுவார்ப்பணிந்தவர்க்குகென்னாலுங்காண
பிசொல்லுவாரென்னாலில்மொழிந்தபாஷை- ஆணுவமாம்அயத்தைநீ
காய்ச்சியப்பா அடைவாகவட்டப்பத்திரிசாரில்தோய்க்க - நாணுமேயி
ரும்பதுதான்தங்கமாச்சு நாதாந்தயோகிகுசொன்னபோக்கே ௬௮௯

நாதாந்தசித்தருக்காமிந்தவித்தை நலமில்லாசமூசாரிகசெய்யாத
ப்பா- வேதாந்தரிஷிகட்குசொன்னவித்தை விண்ணுலகம்மண்ணுலக
ஞ்சொலிக்குமமம்- வாதாடும்பதினெட்டுசித்தரப்பா வகையதனைக்
காண்பிக்கபயந்தாரையா, மூகேவிசண்டாளக்கருமிமாண்பர் முன்
னேனைத்தேடிலுல்கிடைக்கும்பாரே ௬௯௰

பாரேதான்திரிந்தலைந்து வருதப்போது பாங்கானஇமயகிரிமே
ற்கேயையா- சீரேதான்வரமரிஷியாசிரமந்தான் திகழாமலையாறு
கைகள்மூன்று, காரேதான்குகைக்குள்ளேஷாமர்தானுவை கனிவாகவீ
ற்றிருப்பார்கர்த்தாபோயேல- மேதமேதான்வரைச்சுற்றிகாவலப்பா தேர்
ச்சியுளளகாடிபுலிசிங்கந்தானே ௬௯௧

சிக்கியுடன்செங்காயுங் கருநாயுங்கான் ஜெகமதிக்கத்துஞ்சாக் கோடாளிதானும், இகசிதமாய்ப்புலியோடுகோவிதானும இயலானது நளிகுட்டிசாத்தியோடு பொங்கமுடனமாடனிருளனோடு புகழான வீரபத்திரன்முனிகருப்பன், சகமைதயின் றிகாவலப்பாவவரைச்சுறறி தயாபரனேயென் சொல்லிவன்மகிமைதானே ௯௯௨

தானுணவாமவரைப் பகாண்போமென்றால் தாரணியில்பனிரண்டு வருடமப்பா, தேனுக தியானமது செய்யவேண்டும் தேசத்தில் அவரருள தான்கிட்டுமப்பா, கோனுவாமரிஷிதன்னைக்காண குறுமுனியே வனுராளை வேண்டிக்கொண்டேன், மானுனவெஞ்சிஷா போய்வாவென்று மகத்தானமூலிகையைக்காண்பித்தாரே ௯௯௩

மகத்தானமிருகத்தின்வணங்கிமூலி மாட்சியுடன் கைக்கொடுத்துமிருகத்தின்முன், அகத்தியனார்சீடன்யாணியாக்கோவென்று அவரையடாமிருகமெல்லாமோடிப்போகும்- சகத்திலேபூதகணமெல்லாமோடும் சார்ந்துநீவாமரிஷிதன்னைக்கண்டு வகமகிழ்ந்துயெந்தனுட பெயரைச்சொல்லு வரிசையுடன்றுவழைப்பார்வளமைதானே ௯௯௪

வளமையுடனழைப்பாரேயென்றென்றுசான் வாகாகச்சொல்லிவிட்டார்யாக்கோவென்று, இளமையடாவென்வயதுபதினறப்பா என்மகனேகுறுமுனிதானறைந்தாற்போல, களவின்றிசென்றேனேவாமரண்டை கருத்துவந்துயென்னையழைத்தார்கருணையாக - உள்வாசமேபிக்கெல்லாங்காண்பித்தார்பார் உத்தமனேஞானமொடுவாதந்தானே ()

வாதந்தான்முன்சொன்ன வயப்போக்கையா வளமையுடன்வட்டபத்திரிசிவப்பதாகும, நீசமுமைப்மலையிலிருக்குதையா நேர்மையுடன்கொண்டுவந்துசெப்பக்கேளு, சாதனமாயதகாணவைத்து வயங்கனருகு சாங்கமுடன்கவசித்துப்புடந்தானையா, தோதகமாய்ச்செஜபுடந்தான்போட்டுப்பிஸ்பு தோராமலவரையெடுக்கதக்கந்தானே ௯௯௫

சங்கமதுசிவயோகிக்கெய்துாபாரு தாரணியில்மாந்தருக்கு எய்யாதப்பா, சங்கையின்றிசொல்லிவிட்டேனுந்தனுக்காய் சார்பானசிக்கெலவாமிதிலேமீதாயும, கங்கையெடுநிக்களணிசங்கரன்றான் காட்டினார்குருமுனிக்குஞானமெல்லாம், புகசித்திவெட்டுரிய குருமுனித்தான் புகட்டினேன்குலகிஇள்ளசித்துதானே ௯௯௬

சித்தானகருவிகரணங்களெல்லாம் செப்பினார்குருமுனிதானெத் தனுககு, எத்திசையிலென்னூலுக்கெதிர் நூலுண்டு என்னுசான்முத ற்கொண்டுசித்தரெல்லாம், நத்தினரென்னூலைவெகுவாயப்பா நாயக னேமறைப்பில்லையென்றுசொல்லி, முத்தானஞானமுதல் மாந்தரீகம் முன்னின்றவாதமொடுவயித்தியந்தானே ௬௱௯௮

தானானவறுபத்து நாலுசித்தும் சாற்றினேன்மறைவின்றித்திறவு கோற்போல - தேனானகண்மணியேநூலையப்பா தேசத்தில்சருமிகட் குகாட்டாதையா, கோனானகுருவசனே வணங்கிசில்லு கோடிபொரு ளீய்ந்தாலும் நூல்கொடாதே, ஆனாலும்ஆகாகாயெழுனூர்போல அ றையவில்லையாககோபுகூறினேனே ௬௱௯௯

யாககோபுவாதத்தின்திறவுகோல்தான் பவனியிலேசொல்லிவை த்தேநுனுக்காயப்பா, வாக்கதுவும்பொய்யாதுசெப்பாகஞ்சான் வரை ந்தேனேபூட்டிற்குசாவிபோல, நாக்கமலத்தாயாரினருளினாலே நவி ன்றேனேபக்கீர்யாக்கோபுதானும், நோக்கிப்பார்கண்ணாடி முகம்போ ற்காணும் நொடிக்குள்ளேயெழுநூறுமுற்றுமுற்றே ௭௱

முத்தானமுதறிவோர் வாழிவாழி மூப்பாமூக்கைப்பாலேநின்றோர் வாழி-பத்தானவாசைதனையொழித்தோர்வாழி பதியறிந்துமதியறிந்து நின்றோர்வாழி- சித்தானதசதீட்சையறிந்தோர்வாழி சிவசிவாபூரணத் தில்கலந்தோர்வாழி - அத்தான்கர்த்தனைதான்றொழுதோர்வாழி அக காரயெழுநூறும்வாழியாமே ௭௱௧

மகாமகத்துவம்பொருந்திய பக்கீர்இயாக்கோபு

சுவாமிகள் அருளிச்செய்த

வாதத்திறவுகோல் - ௭௱

முற்றுப்பெற்றது,

-()-()-()-()-

உ

சிவமயம்.

# இயாக்கோபு அருளிச்செய்த

# வாதத்திறவுகோல் சூத்திரம் - ருய.

கடல்சூழ்ந்தபுவனங்களசாசரமெங்குமா
கருணையோடமர்ந்ததேவைக்
கமலமலர்தேஜோமயாநந்தம்பொழியுமெழிற்
காலடியிணைத்தொழுதுயான்
மடல்பெரும்வைத்தியமைம்பதுஞ்சொல்லுவேன்
மானிடர்கள்கொண்டாடவே
மன்னுமுயர்பற்பமொடு செந்தூரசூரண
மகிழினியதிராவகங்கள்
தடமிகும்லேகியம் கிரதமொடுகளும்புகள்
தயவாகசொல்வதற்கு
தரணிதனையொருநொடியில் தவிழ்ந்துவிளையாடிய
தற்பரானந்தபொருளே
நடனமிடுமயிலேறி வருகின்றகுருநாத
நாராயணன்மருகனே
நடினமலர்பாதமதைநம்பியான் சொல்கின்ற
நன்மொழிக்காத்தருள்கவே. (க)

எகுவதனைத்தகடாக்கி மூசிசாற்றில் யேழுதிரம்தோய்ந்தாட்டி யிடிக்கத்தூளாம், பகருமுன்னிலைச்சாற்றிலரைத்திரைதது பரும்புடமாய்ப்போடச்செந்தூரமாகும்; அகிலமதில்நோயாளரன்புகொண்டு அறிந்தனுபானத்துடனேயீயக்குன்ம; மேகுமேபிணியகற்ற யெகுதூளாக்கி விளங்கவைக்குமிந்திரியவிளைவுமாமே. (உ)

நல்லிரும்புநற்பொடியைக்காந்தத்தாலே நாட்டியெடுத்துளதனைக்கல்வத்திட்டு, சொல்லியநன்முத்தியதோர்சமபுட்டை துவைக்கவிழும் சார்வார்த்துசாமம்மூன்று, மெல்லியநல்நவநீதமாகுமட்டும் விடாதரைத்து வுலாத்தியதைவைத்துக்கொண்டு. சொல்லுமனுபானமுடனீந்தால்பாண்டு தொந்தகுணமகண்டுடலும்சொர்ணமாமே. (ங)

தாம்பரபற்பம்.

சுத்திமிட்டதாம்பரத்தைத் தகடாக்கி துணித்துபுளிப்பத்திரம் போல்தாக்குநோய், குத்தமற்றகெந்தியைநீபொடியாய்ச்செய்து கூட்

டிரு

டிமங் * கிலாசல * முத்தன் * பான்சாறு, வத்தவத்தவெய்யல்தனிலி ருநாளிட்டுவகுப்புடனேதுள்சுருவிமேனிச்சாறு, நித்தம்நித்தம்வகைக் கொருநாளுறச்செய்து நிகட்டிப்பார்தாய்சிறந்தமெழுகுமாமே. (௪)

மெழுகதனையுலர்ந்தபின்பு பொடியதாக்கி முக்கடுகுஞ்சீரகமு மிந்துப்பைந்தும், பொழுத்தனாயிற் கழஞ்சிபற்பம் தேனிலுண்ண பொல்லாதரோய்களிதில், குன்மமெட்டும், பழூவுதனிற்பிறந்தமகா சூலையாறும் டாநெரியின்பனிபோலாமென்றுயீசன், மழூவெடுத்தா ரிம்மருந்தினுண்மைக்காக வானவருமனமறியமகிழத்தானே. (௫)

ஆய்ந்தெடுத்தவறைப்பொடியைப் பழச்சாறிட்டு அரைத்துநன் றுய்வில்லைதட்டி ரவியில்வைத்து, காய்ந்தபின்புமுன்போலவரைத்து தட்டி காய்ந்தெடுத்துமறுபடியுமுன்போல்செய்து, மாய்ந்தபின்புகெ ந்தகத்தைசுத்தியாக்கி வளர்பிரண்டைக் காரைக்கொடிசாற்றில்வீரம், தோய்ந்திடவேரவியிலிட்டுவுலரவைத்து சூதத்தைப்பதுங்கிட்டு து ய்யதாக்கே. (௬)

ஆக்கிவைத்ததாம்பரத்தைத் தகடாயச்செய்து ஆறிரண்டனாச் சதிரம் வில்லைசாற்றில்; போக்கதிலேதகடதனைக்குப்பிசெய்து பொடி யாக்கிமூன்றிலொன்றுபாணக்கெந்தி, தாக்கிஅறைமுன்சாற்றால்தகட் டில்சேர்த்து தளராமல்புடம்போட்டுவாற்றிப்பின்பு, தூக்கியபின்தா னதினையறைத்தறைத்து துலக்கமிடுமாகுமட்டும்புடத்தைப்போடே.

போட்டுவரில்புடத்திலுதிர்தாம்பரபச்சை புரவாட்டால்புகந்தி டுமுன்சூதபற்பம், நாட்டொருநல்வீரமது கெந்தியாறு நாண்மூன்று தாம்பரபுற்பநாலுதானுங், கூட்டியிதைக்கல்வத்தில்பழூமும்வன்னிகும ரியின் சாறதினால்சாமமூன்று, ஆட்டிநன்றுய்மெழுகுபடவரைத்து வாங்கி ஆதவன்றன்னொளிபடவே தட்டிவையே. (௮)

தட்டிவைத்துதாலமதின்புரத்தின்மேலே தணற்பிறந்துவெந்து நீராகுமித்தை, கட்டிவைத்தனுபானவிதத்திலீய கடினமாங்குஷ்டங் களெட்டுந்தீரும், முட்டிவிடுசூலைகளுமுதிரவாய்வுமூவருமண்டுபாண் டுகருங்குஷ்டரோகம், குட்டமறும்வாதபித்தமையத்தாலே கூடிவரும் வியாதிகளுங்குணமதாமே. (௯)

காந்தமதாலாய்ந்தவயம்பலமோபத்து கனிவானநிம்பதுவுநான்கு பத்து, சேர்ந்திருக்கநாலாகக் கீறிவைத்துதினமொன்று தினமருந்தை தொலும்பைநீக்கி, மாந்தர்களுஞ்செய்தகுற்றத்தாலடர்ந்தமகாசத்திகு ன்மமெட்டுங்கரிகூட்டத்திற், பூந்தவரிமுனிந்தகதை போலேயாகும்பு கலாதே யெவர்க்குமிதுபுதுமைதானே. (௰)

இலுப்பைநெய்யில்சாரத்தை பொடித்துதூவி இருபத்தோர்தர முருக்கிசாய்த்தநாகம், வலித்ததிசைவேண்டியதுசட்டிதன்னில் வை

---

* கிலா - சசப்புகிலா. * முத்தம்கோரை. * பாணி- சூரியகாந்தி. * உருவி - நாயுருவி. * மேனி குப்பைமேனி.

த்துருக்கிகள்ளிதனிற் பழுத்துதிர்ந்த உலர்ந்தசருகாய்ந்தெடுத்து பொடியேசெய்து ஊட்டிவர்முச்சாமம் பற்பமாகும், நிலைபடவேசொண்டியுடசரகைசுட்ட நீரதிலேநீர்வார்த்து கரைத்துதேறே. (௰௧)

தேறினதோர்நீர்வார்த்து அரைத்தரைத்து திரட்டியிதைப்புடம் போடுகசடுநீங்கி, மீறியினிவெளுப்பாகுமட்டும்போட்டுமேன்மைபெற வனுபானத்துடனேயீய்ந்தால், கூறியிடுமேகங்களிருபத்தொன்றுங்குஷ்டங்கள்பதினெட்டுங் குன்மமெட்டுங், மாறியிடும்வாதங்களென்ற ரோகம் மாற்றிவைத்துவுடலெளிரும் வாலையாமே. (௰௨)

சுத்தமுள்ளதாம்பரத்தைத்தகடதாக்கி சூடனையும் பொடித்திட்டுநெர்ச்சிச்சாற்றில், பத்திரமாங்காய்த்தோயபிரண்டைச்சாற்றில் பதினென்றே புளியறணைகிழங்குமோரில், சுத்தமறுங்காச்சிதோயதனை வெட்டி கூட்டுவதுங்கெந்தகமும் நாலத்தொன்று. வைத்தரைநல்பழச்சாறுதகடிற்சேர்த்துவாய்மூடி கனக்கவொருகசப்புடத்தைப்போடே

போட்டெடுக்கபற்பமாமுன்சாற்றுலேபுகட்டியரைபுடந்தோறும் கசடுநீங்கி,காட்டுமது நீலவர்ணமடங்கிற்றானல் கனகமென்றபற்பமிது வனுபானததில்,கூட்டியிடயீரேழுநாளரெட்டு கூறுகின்றவியாதியெல்லாங்காரத்தாலே, கேட்டுயிடைகெந்தகமும் பலத்தையீய்ந்து கீர்த்திபெறவாழ்வளிக்கும் கிரியைதானே. (௰௪)

காரீயம்தாம்பரமும்நாகவங்கம் கசடறுத்து சமனுக்கிக்கனல்மேவிட்டு, மீறியதீபடவுருகிற் சிலையைத்தூவி பருங்கரண்டியிட்டதனை வறுத்துக்கிண்டி, ஆறியபின்னெடுத்துகுழிக்கல்லிலிட்டு அருக்கன்பால் விட்டரைத்துப் புடமாறப்போட்டு, வேறினியவச்சிராங்கிப்பால்விட்டாட்டிவிரைந்துபுடமூவேழு மிகவும்போடே. (௰௫)

போட்டெடுத்துகல்வத்திற் பொடியாய்ச்செய்து பொட்டிவெல்லத்தனுபானத்துடனேயீய, மூட்டியபின் தீவினைகள் முன்னேவந்து முடிக்குமே முன்னோர்கள்யெழுதிவைக்த, எட்டிலுறாயஷ்டகுன்மவிதனம்நீங்கிஎளிதாகுமிம்மருந்தைப்பற்றியுண்ண, வோட்டிவைக்குந்திருவுளமே யென்றுயென்று வுறுதிபெறவினையகலு முண்மைதானே. ()

கல்லுப்புசேரானுஞ்சமனதாகக் கல்லுரலிலிடித்ததனைகலையத்தூட்டி, சில்லிட்டுமூடியதைபுடத்தைப்போட்டு தீயாற்றிநீலகண்டயிலைச்சார்விட்டு, மெல்லியதாயரைத்துருட்டிக்காயவைத்து மென்று தின்னமாத்திரத்தில் சூலையாறும், சொல்லுகின்ற டஷ்-குன்மமெல்லாம்தீரும் சோதனையாய்வருந்தியுண்ண சுவஸ்தமாமே. (௰௭)

சுத்ததாம்பரத்தைநீதகடதாக்கி சொல்லுமுட்டைபரத்தியடாசுட்டசாம்பல், மத்திக்கும்பிரண்டைச்சாற் தகட்டிற்பூசி வாய்குவிங்சகுகையிலிட்டுசில்லுமூடி, மெத்திட்டுபுடம்போடபற்பமாகும் விஸயமிது

மனுபானத்துடனேகொள்ள, சத்தித்தவலிகுன்மமெல்லாம்நீங்கி சத்தியமாய்பிர்மமதைச்சாதிப்போர்க்கே. (௰௮)

கேத்கன்டத்தான் வேர்தோலும் வேலிவித்து சிறுநாவல்விரையெருக்கன் வேரின்பட்டை, யித்தையிடித் தூளதனைசமனேசெய்து யிருக்தியுண்ணத்தேனுடனேயிருநேரந்தான், பத்தியுடன்மண்டலத்திலஷ்டகுன்மம்பயந்துவிடுமிம்மருந்திறுண்மைகண்டு, சுத்தமாய்ப்புசிப்புமிகவுண்ணச்செய்து சுகமளிக்குங்குன்மவலிதுலைவுமாமே. (௰௯)

வரிக்கடுக்காய்தோற்குறுணி யிரும்பின்சிட்டம் வராகனெட்டுகாரம் வெடியுப்புரொட்டி, கரியபள்ளை ஆட்டுநீர்பதக்குவிட்டு கத்திரித்துபசும்பனையின் வோலைப்போட்டு, யிரவிபுடமிட்டிருநாள்வாலையேற்றி ரேசியிந்ததிராவகத்தையுண்டாயானல், பெருவபறுவிஷப்பாண்டு மகோதரங்கள் பேர்ந்தகலும்பத்தியமும்பிடிக்கத்தானே. (௨௰)

கல்லுப்புபுண்ணுக்கியிரும்பின்சிட்டம் கருந்தும்பைவகைனுலுஞ்சமனேசெய்து, நலலயெலுமிச்சஞ் சார்படிநாலுக்கு நாலிலொன்றுகத்தாழைசாறுங்கூட்டி, மெல்லியதாயறைத்ததனை யுலர்த்திக்கொண்டு மேலினியவிபத்தாம்புரநாகங்கூட்டி, துல்லியதேனனுபானத்துடனேயுண்ண துடர்ந்தவஷ்டகுன்மங்கள் துலையுந்தானே. (௨௧)

செம்பினுடவரப்பொடியும்பலமோரொட்டு செலுத்துமடிபாண்டத்தினுள்ளேவிட்டு, கொம்புகொண்டபாகிலைச்சார்பதக்களந்து கொட்டியெறி தீயெரிப்புகமலம்போல, கெம்பியிட்டச்சார்வத்திசாம்பலாக்கி கிண்டியனைகல்வத்திற்சாறவிட்டு, புடவேவிலலைதட்டி காயவைத்துபநம்புடமாயனலிட்டுப்பத்தப்போடே. (௨௨)

கருனூலிற்சேரானின்பாலையூட்டி கடைக்கெண்டை சதைநடுவேமருகாலதன்னில், அறுநாளேதனித்துவிடகரணமாகும் ஆராவின்னெயவேடபு துளிராரைத்துக்காச்சி, உறவாங்கடுகளவுமெழுகுபோட உரைந்தகளிம்பதையிடவுமுலரும்புண்ணு, விரைவாதமகலுமெனயாக்கோபுசொன்னார் விளம்பினேன்னவர்பேருவிளங்கத்தானே. ()

புண்டரிகக்கொழுப்பதனை காச்சநெய்யாம் போடதிலேகிராம்புரெண்டுபலமுள்ளாக, கிண்டிவழவோயாழல்ரவியில்வைத்து கிளரிவரில்வங்கமதைவிட்டநெய்யை, யுண்டபின்புவுலத்தியதைதினமோரொட்டு யுண்டிடினுஞ்சுவாசமென்றமீராகமெல்லாம், சென்றிடுமேபொய்யாதுசெகத்தோர்க்கென்று செப்பினார்யாக்கோபுதிடமாய்த்தானே. (௨௪)

காரைவேராதொண்டை வேறும்நேராய் கண்டித்துயிருதூக்குகியாழமிட்டு, நீரதனைவடித்தபின்புகுழம்பதாக்கி நிறுத்துவர்கிராம்புரெண்டுபலமேபோட்டு, ஊரினபின்குழம்புடனே அரைத்துவுண்

டை உருட்டியுண்ணவாதகுன்மம்சுவாசகாசம், தீருமென்றுயாக்கோபுசொன்னரித்தை செகத்திலவர்பேர்விளங்கசெப்பினேனே. (௨௫)

வெடியுப்புசேரரையில்நாழிதண்ணீர் விட்டுவொருசட்டிதனிற்கரைத்துநீருள், அடிபடவும்நடுவிலிடுபுதுக்கலசத்தண்ணீர் அம்புவிட்டுசட்டியினீரதிற்சேராமல்,வடிவுடனேமொந்தையைத்தான் சுழட்டிநீருள் வகையுடனேகடிகையது வைத்துப்பின்னே, குடிக்கவிதைநீர்க்கட்டுகுணமாமென்று கூறினூர்யாக்கோபுகுவலயோர்க்கே. (௨௬)

கல்லாய்ந்தஜலமதுவும்படியுமைந்து கைக்கடங்கும்பிடியெடுத்து தண்ணீரோடே - மல்லாந்துவிழுங்கிராப்படுக்கும்போது மண்டலத்தில்மணியிறுகிக்கட்டுண்டாகும், பொல்லாதசயரோகம் மேசப்போக்கும் புகலாதேயெவர்க்குமிதையுண்ணச்சொல்ல, செல்லாதவிடங்களிலேசெலுத்தாதையென்றுசெப்பினூர்யாக்கோபுதிறமாய்த்தானே.(௨௭

நீருமுள்ளி துட்டிடையின் விரைபிஞ்சுவாங்கி நெருங்கிநின்றகதலிபழம்பிதுக்கியொன்றுசேரதுமுன்விரைகூட்டி பனியில்வைத்து திண்ணுமெண்ணோமேழுநாளதிலேயுண்டு, நாரியரைசேராதேபுளியாகாது நலந்தருகும்விந்திருகிக்கட்டாமென்று, கூறினூர்யாக்கோபுகுவலயோர்க்கு கொண்டவர்பேர்தான்விளங்கக்கொடுப்பதாமே.(௨௮)

கசடருந்தகெந்தகமும்பலமுநான்கு காசிகுப்பிதனிலிறக்கிமணிகட்போல, உசரவிந்துயிரவிபமூபபின்சாறு சூட்டிவிடுவத்தவத்தவெய்யலிற்சேறு, பசப்படவேநாற்பதுநாள்தன்னிற்தயிலமாகாகும னுபானத்துடனேயீய, திசைவிளங்காரோகமெல்லாம்குணமாமென்று செப்பினூர்யாக்கோபுதீருந்தானே. (௨௯)

பெருவாயன்பாலரைக்கால் படிநேருக்குள் பிச்சியதைகாலமேகொண்டுநித்தம், பொருபொழுதுயேழுநாள் கொடுத்தாயானல் ஊர்ந்துநின்ற, உட்காச்சல்ரத்தகாசம குரையானசயரோகம்சுவாசகாசம்குணமாகுமிம்மருந்தைமுக்கால்கொள்ள, பரையாதேபிரம்பிதனைகண்டதென்று பக்கிரியாக்கோபுதான்பகர்ந்திட்டாரே. (௩௰)

சுரைவிரையின்பருப்புவொருசேருவாங்கி சூட்சமுடனறுபலம்நீர்தெளித்து, அரையதனைநீர்வாங்கயெண்ணைக்கக்கும் அத்தயிலம்சோவிலடைத்துக்கொண்டு, புரையறவேநசியமிட்டு முழுகிவந்தால் போய்விடுமேதும்பல்சலபீனிசங்கள், சிரசிலுள்ளரோகமெல்லாமகலுமென்று செப்பினூர்யாக்கோபுதிறமாய்த்தானே. (௩௧)

சுத்தித்ததாம்பரத்தைதகடதாக்கி சூக்ஷமுற்றுபெரியோர்களுண்ணுங்கர்ப்பம், மெத்திததுபுடம்போடுகனக்கவாரில் வெந்துதிருநீறுபோல்வெண்மையாகும், பத்தியதையனுபானத் துடனேயீய்ந்தால்

பலரோகம்குணமாகும்பசுமையாகும், சித்தத்தில்கருணைவைத்துயெந்தன்மீதிற் செப்பினார்யாக்கோபுதிறமாய்த்தானே. (௩௨)

சொல்லவெள்ளைவங்கமதுபலமேநாலுசுண்ணும்பிற்சுத்தித்துதெளியுகட்டி. முள்ளங்கிசாத்திலிட்டுமூணுசாமம் முருகலாயாக்கியபின் கல்வத்திட்டு, துல்லியவெங்காயச்சார்முள்ளங்கிச்சார் துடர்ந்தரைத்துநாலுநாளடுப்பிலேற்றி, மெல்லியநல்வாலுகையில்யெரித்துவாங்கி மிளகுநிறைகொள்ளவெகுவியாதிபோமே. (௩௩)

வெண்மெழுகுகல்லுப்புவகைக்குச்சேறு வெள்ளையென்றபாஷாணம்பலமும்காலு, வண்மையுடன்பொடித்தரவாய்க் கலையத்தேற்றிவாலையிட்டுதணலேத்திதயிலம்வாங்கி, திண்மையென்ற வாதமென்றநோய்கட்கெல்லாம் தேய்த்திடவேகுணமாகும்சொரிசிரங்கு, புண்கள்சிலையாறுமேமுதிரோகம் புகழ்ந்துரைத்தா ருண்மையெனப்பூட்டிப்பாரே. (௩௪)

சாறுமிருசோம்புகளையுடைத்துசாலில் சலம்பதக்குவிட்டுமதைக்கவிழ்த்துமூடி, ஊறியநாளிரண்டதின்பின்வாலைவைத்து உற்பனமாரியெத்துவடிதிராவகத்தை, வாரியிதைகுப்பிதனிற்றினமேகொள்ள வாதபித்தம்மெய்யெரிவுதாகசோகம், நீரிழிவுவயமெரிவுசலத்ததாகம் நிற்குமென்றுமுன்னோர்கள்நிகழ்த்தினாரே. (௩௫)

சந்தணமும்விழலவெட்டியேலம்சோம்பு சமநிறுத்துபொடியாக்கிசாலிலூட்டி, சிந்திவிடுநீர்பதக்குயிருநாலூரில் செலுத்திவிடுவாலையிட்டுதிராவகத்தைவாங்கி, கந்தமுள்ளகற்பூரம் பொடித்துப்போட்டு காசிகுப்பிதனிலிறக்கியுண்டாயானால், யிந்துவின்போல்குளிர்ந்துவுடல்தாகசோகம் யெரிவடங்கிதண்மைமிகயீயுந்தானே. (௩௬)

வாகுவைக்கோல்பிரியில்வெல்லம் தெளித்துகட்டி வந்தடையுயிக்ரீகள்பசுஷ்பின்பு, சிறுதழியாலிட்டுமூடிநீர்தெளித்து செய்யுமுளைபடர்ந்திடுமேபுதினாவெணறும், தருகிவைத்திடுநீர்பதக்குசாலை தணலேத்திவாலையிட்டுதிராவகத்தைவாங்கி, பருகியிடவுண்டசமனசீரணந்தங்கி பசியெடுக்கும்வாதமரும்பலிதமாமே. (௩௭)

காவாட்டின்பூக்கதிரையிடித்துதூளாய் கவடதனிலிட்டு நீர்மிதக்கவிட்டு, ஆவாட்டின்பதமாகவெயிலிலிட்டு ஆரைநாட்சென்றபின் புவாலைமூட்டி, தீவாட்டயிறங்குகின்றதிராவகத்தை தினமந்திசந்தியுண்ணவாதக்கிராணி, காவுட்டம்செய்யாதவையம்போக்கி நயந்தருமேதீபனமும்நயந்துபாரே, (௩௮)

போட்டகன்றவோமமதுபதக்குத்தூளாய் பொடியாக்கிசாலிலிட்டு தூணிதண்ணீர், விட்டுயிருநாலூரில்வாலைவைத்து மெத்தெனவேயெறக்கவரும்திராவகத்தை, தொட்டகண்டமேலிலிட்டுகொண்டாயானால்

குடச்சியுள்ள வாதமையங்கிராணிநீங்கி, உட்டணத்தின் வாதமைய
ங்கிராணிநீங்கி ஊண்பெருகஉண்ணவைக்குமுண்மைதானே. (ருகூ)

கனமெளகுஅரை தூக்குயுடைத்துநீருள் கலந்திருநாளூறியபின்
காச்சலுண்டாய், முனைசொங்கலுண்டானபதத்தில்வாலை மூடியிது
மணசெய்து அடுப்பிலெற்றி, அனலெரித்துதிராவகத்தைவாங்கிமேலே
அமைத்துயிரு காசிடைநீகொண்டாயானால், வினையகலும்வாதமை
யம் பித்தத்தாலே வரும்பிணிகளகற்றிவிடும் வழங்கிபாரே. (சய)

சதுர்மறையிலாய்ந்துணர்ந்து பலவோர்சொன்ன சாத்திரத்திலு
ணர்ந்திருக்கும்துரவில்லாதே, முதலவனுதவிகொண்டுதொந்தித்தந்த
மூலிகையாமாவுலிங்கந்தன்னிலைடே, மதியுதையகாலமதிலுண்டுசித்
தம் வாதமையத்தாலெழுந்தயிருமல்போகும், ஒருதிரமாகிலும்செ
வியிற்கேட்டாரானால் ஒழுக்கமுண்டுகவிக்கெனவே செப்பினனே.()

செப்பினதோரமுதுமதுசேருமைந்து திரண்டிருக்கும்கற்கண்டு
சேருமைந்து. அப்பதனிற்பாவாக்கியருண்முன்னுவில் அரைத்துநன்
ருய்கிண்டியதைதேனைவிட்டு, ஒப்புரவாய்க்கிண்டியுண்ண மந்தகா
சம் முயர்சுவாசகாசமொடுயிருமளீளை, துப்பிரவாகுணமாகுமுண்மை
யித்தை சொடுலொண்ணுக்லககண்டசூட்சந்தானே. (சஉ)

ஒலித்திட்டவெளியாலேவைம்பூதத்தாலே உடலெடுத்தவினைய
தனுலடர்ந்தரோகம், வலித்திட்டஅடிவயத்தில்சலத்தைகட்டில் வாண
வுப்புகாரமிருவகையுங்கூட்டி, பலித்திட்டமருந்துரைப்பேன் பரையா
தெங்கும் பாணிகருநாழிகருத்தடச்சை, குலித்திட்டுகாச்சியிருகார
முப்பும் கூட்டியுண்ணநீர்க்கடுப்புகுணமதாமே. (சங)

காடிதெளித்தொதியத்தால்சாறுவாங்கு கல்லாய்ந்தஅயப்பொடி
யால் மியக்கவிட்டு, சூடதிகவெய்யலில் வைத்துவாவா தொக்குநீர்
விட்டுகிண்டிமூன்றுநாள்பின், கூடுகின்றமுன்சாத்தாலரைத்தரைத்து
குவித்துமுட்டைபரும்புடமாவெட்டுந்தீர்த்து, போடுபின்புதண்ணீரா
லரைத்துமூன்று புடம்போடமாதளையின்பூப்போலாமே. (சச)

ஆமிதனையனுபானத்துடனேயீய வரும்பிணிகள்வாதபித்தஐய
த்தாலே, நேமிவருமநேகம்காரோகமெல்லாம் நீங்கிதிரிநாடிகளுமுறு
கருமேறி, காமசலம்பெருகிருகிவிந்துகட்டுங் கண்கள்செவ்வரியேரிவீ
ரம்செய்யும், தாமரைப்பூமணக்குமுடலிருகுநன்மாங் தளிர்மேனிவே
ருமதுபாருந்தானே- (சரு)

பாதிரிவேர்பட்டை-தனைபாலிற்கொள்ள பத்தியமாங்கற்பத்தை
பத்துநாளில், வாதமெழுங்கோபத்தால்கணுக்கள்வீங்கி வருத்தமி
குஞ்சுரோணிதங்கள்மிகவுங்கொண்டு, சூதமுண்டுபாதகா மிகவும்

வீங்கி சுருக்கெனவேகுத்துகின்றசூலைநோய்கள், தீதகலும்பத்தியமா யுண்டாயானல் செய்யமாகுங்கண்டதிதுசெப்பிடாயே. (௪௬)

நற்பரங்கிபட்டைதனைசேரிரண்டு நன்றாகநறுக்கியதை செம்பு செப்பில், சிற்பரியபூசிபதில்பொடியைபோட்டு தீயெரியுமதுவுரொண்டுபடியுநீர்வார்த்து, பிற்பதிவாய்சில்லிட்டுசீலைசெய்து பிலக்கபூபுடத்திலிட்டுவெட்டுந்தீர்த்து, கற்பமதைதிறந்தெடுத்து வடியேகட்டி காலை அந்திநேரமனாப்பலந்தான்கொள்ளே. (௪௭)

கொள்ளையிலேகாத்தைப்பற்றி புளிப்புகையும்வாதக் கூறுகரும் குளுமையொடுக்சப்பிணிப்பு, தள்ளியுண்ணமேகமுதல்வாதகுன்மம் தனுவலிப்புகணுபிடிப்பு வீசங்குத்தல், அள்ளியுண்டரசவேதைகை கறுப்பு மாராதரணங்கிரந்திகரங்கால்குத்தல், விளறுமிந்தரோகமெல்லாம்குணமதாகி மெய்யுடலைசுகப்படுத்தும்விஷயந்தானே. (௪௮)

நாயுருவிமுத்தினதாய்நருக்கிமிக்க நற்பசுவின்கோமியத்தில்நனைப்பாண்ம, வாயிலிட்டுபருப்புடத்திலிரக்கிவாங்கி வைத்ததனை வெ...ல் மென்றுதின்ன, நோயிலகுபருமந்தாரசுவாசகாசம் நுணுக்கிநள்ளீளகண்டத்கரிப்புநீங்கி, காயமதைப்பிலப்பிக்கும்சித்தர்சொன்ன கற்பமிதுதப்பாதுகண்டுகொள்ளே. (௪௯)

பெருமரத்தின்பச்சைபட்டைதூக்குரெண்டு பிலத்தவட்டத்திருப்பிவேர்கணணீர்பாதி,கருக்கருக்கவடித்திடித்துகியாழம்வைத்து காச்சிவடிபுட்டிவெல்லமதுக்குகாலு, திரிகடுகில்நடுநீக்கி யேலம்கிராம்பு சிரகமிலவங்கிலைதோல்நாகமல்லி, மருவுகுரோசாணி யதிவிடையம் போஸ்தம் மணியபிணிசாபத்திரி சாதிக்காயே. (௫௰)

காயாதுவடித்திடித்து பாகுதன்னில் கலந்துவெள்ளாட்டு நெய்யுஞ்சேருவார்த்து, தீயாக்கியிருகாசுயிடைதானுண்ண சீழ்மூலக்கிருணிரத்தகடுப்புமாரும், நோயகலுங்குதவாதமாககிராணி நுணுக்கு மலமிரங்குமுன்னேரத்தம்சாய்க்கு, வாய்வுபித்தசேத்துமத்தின் பேதிநீக்கி வைக்குமிதைபுகலாதேமனதில்வையே. (௫௧)

இயாக்கோபு அருளிச்செய்த

## திறவுகோல் சூத்திரம் - ௫௰.

முற்றிற்று.

---